மா. ரா. அரசு

# தென்னாட்டுப் பெருமக்கள்

## III

வித்வான் மா. ராஜமாணிக்கம் பிள்ளை M. O. L. L. T.,
தமிழ்ப்பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி; சென்னை.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

வெள்ளையன் பதிப்புக் கழகம்
கண்டனூர் இராமநாதபுரம் மாவட்டம்

முதற் பதிப்பு—நவம்பர் 1950

Madras Ripon Press, Ramachandrapuram, Tiruchi Dist.

# பொருளடக்கம்

I அரசியல் அறிஞர் ச. இராஜகோபாலச்சாரியார்

1. கல்விப் பருவம்
2. வழக்கறிஞர் வாழ்க்கை
3. அரசியல் வாழ்க்கை
4. நற்பண்புகள்

II மருத்துவம்-கல்வித்துறை அறிஞர்
டாக்டர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்

1. கல்விப் பயிற்சி
2. மருத்துவத்துறையில் தொண்டு
3. கல்வித்துறையில் தொண்டு
4. நற்பண்புகள்


III தொழிலறிஞர் ஜி. டி. நாயுடு

1. இளமைப் பருவம்
2. தொழில் முயற்சி
3. உழைப்பும் உயர்வும்
4. பெயரும் புகழும்

# முகவுரை

**தென்னாட்டுப் பெருமக்கள்** என்னும் பெயர் கொண்ட இந்நூல், அரசியல் அறிஞர் **டாக்டர் இராஜகோபாலாச்சாரியார்,** மருத்துவ - கல்வித்துறை அறிஞர் **டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார், தொழில் அறிஞர் துரைசாமி நாயுடு** என்பவர் வரலாறுகளைக் கொண்டதாகும். **நமது தமிழ் நாட்டில் ஒவ்வொரு துறையிலும் தக்க அறிஞர்கள் இருக்கிறார்கள்** என்பதைத் தமிழ் மாணவர் உணர்ந்து, இப்பெருமக்களைப் போலத் தாமும் உயர வேண்டும், என்றும் நல்லுணர்ச்சி பெறவேண்டும் என்னும் கருத்தாற்றான் இந்நூல் வெளியிடப் பெற்றது. இதனைக் கல்வித்துறை அறிஞர்கள் கவனித்து, மாணவ உலகம் இந்நூலைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

**ஆசிரியன்**



சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

# 1. அரசியல் அறிஞர் ச. இராஜகோபாலாச்சாரியார்

(தோற்றம் கி. பி. 1878)

## 1. கல்விப் பருவம்

### தோற்றுவாய்

உலகப் புகழ் பெற்ற அரசியல் அறிஞர் காந்தியடிகள் என்பது அனைவரும் அறிந்ததே. அப்பெரியார் நம்பிக்கைக்குப் பெரிதும் உரியவரும் அவரால் "சிறந்த அரசியல் அறிஞர்" எனப் பாராட்டப் பெற்றவரும் யாவர்? அவர் நமது தாய் நாட்டின் இறுதிக் கவர்னர் ஜெனரலாக இருந்த **சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்** ஆவர். அவர் நமது தமிழகத்தார். கைத்தொழிலில் உலகப் புகழ்பெற்ற மோட்டார் மன்னராகவுள்ள ஜி. டி. நாயுடுவைப் போலவும், அறிவியற்கலை உலகில் பேரறிஞராகவுள்ள சர். சி. வி. இராமனைப்போலவும், மருத்துவ உலகில் பேரறிஞராகவுள்ள டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியாரைப் போலவும் இராஜகோபாலாச்சாரியார் அரசியல் உலகில் புகழ்பெற்றவராவர். சேலத்தில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய ஆச்சாரியார் இந்தியக் கவர்னர் ஜெனரலாக வந்தார் எனின், அவரது வரலாற்றைப் படித்தறிய, வாழ்க்கையில் வெற்றி

காண விரும்பும் ஒவ்வொருவரும் அவாவுதல் இயல்பேயன்றோ? அப்பெரியார் வரலாறு ஈண்டுத் தரப்படுகின்றது; படித்துப் பயன்பெறுக.

## சிறந்த பரம்பரை

ஆச்சாரியார் முன்னோர் கல்வியிற்சிறப்புப் பெற்ற காஞ்சிமா நகரத்தைச் சேர்ந்தவராவர். அவர் முன்னோர்கள் வடமொழிப் புலமையில் தலைசிறந்து விளங்கினார்கள். அவருள் ஒருவர் **வரதாச்சாரியார்** என்பவர். அவர் மனச்சாட்சிப்படி நடந்து வந்தவர். அப்பெரியார் ஒருநாள் காஞ்சியை யடுத்துள்ள வேகவதியாற்றில் நீராடியபொழுது நீரில் மிதந்து வந்த பிணம் ஒன்றைக் கண்டார்; உள்ளத்திலிருந்து எழுந்த அருளுணர்ச்சியால் அதனைக் கரை சேர்த்தார்; தீ மூட்டி அவ்வுடலைச் சாம்பராக்கினார்; அதற்குச் செய்ய வேண்டிய கடன்களைச் செய்தார். சிறந்த வைதிகரான வரதாச்சாரியார் அநாதைப் பிணத்தை எடுத்து எரித்த செய்தியை உணர்ந்த உற்றார் உறவினர் அவரை வேறாகப் பிரித்து விட்டனர். "நாம் செய்தது நற்செயல்" என்பதை நன்கறிந்த வரதாச்சாரியார் தம்முடைய உறவினர் செய்கையைக் கண்டு அஞ்சவில்லை.

ஒருநாள் அவர் இல்லத்தில் திதி' நடக்க வேண்டியது இருந்தது. அதனைச் செய்யும் புரோகிதர் ஊரார் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி வாராதொழிந்தனர். ஆயின், அவ்வமயம் எங்கிருந்தோ ஒரு பெரியவர் வரதாச்சாரியார் வீட்டிற்கு வந்தார்; எல்லாச் சடங்குகளையும் செவ்வனே செய்து வைத்தார்.

அப்புதியவரைக் காண உற்ருர் உறவினர் ஓடி வந்தனர். அப்பொழுது அப்பெரியவர் அவர்களைப் பார்த்து, "வரதாச்சாரி உங்கட்குப் பொல்லான்; எனக்கு **நல்லான்**" என்று கூறி மறைந்தனர். திருமாலே அங்ஙனம் வந்து கூறிச்சென்ருர் என்பது அவர்கள் நம்பிக்கை. அதுமுதல் வரதாச்சாரியார் '**நல்லான்**' என்று ஊரரால் அழைக்கப்பட்டார். அவர் இராமாநுஜர் சீடர் மரபினர் என்ற காரணம் பற்றியும் சிறந்த வடமொழிப் புலவர் என்ற காரணம் பற்றியும் '**சக்கரவர்த்தி**' என்ற பட்டமும் பெற்றிருந்தார். அப்பெரியார் மேற்கண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு '**நல்லான் சக்கரவர்த்தி**' என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

அவர் மரபினர் பின்னர்ச் சேலம் மாவட்டத்தில் ஓசூரைச் சேர்ந்த **தொரப்பள்ளி** என்னும் சிற்றூரிற் குடியேறினர். அங்குக் குடியேறி வாழ்ந்த மரபினருள் ஒருவரே நம் ஆச்சாரியாரின் தந்தையாரான **சக்கரவர்த்தி ஐயங்கார்** என்பவர்.

## சக்கரவர்த்தி ஐயங்கார்

சக்கரவர்த்தி ஐயங்கார் தொரப்பள்ளி கிராம மணியக்காரர்; அவர் நடுத்தரமான செல்வர்; செல்வாக்கு உடையவர்; சிறந்த வைதிகர்; வடமொழிப் புலவர்; வடமொழித் தொடர்பாக எழும் ஐயங்களை நீக்க வல்லவர்; சென்னை மாகாணக் கல்லூரியில் வடமொழிப் புலவராயிருந்த **டாக்டர் ஹாப்பர்ட்,** ஐயங்காரிடம் சென்று தம் ஐயங்களைப் போக்கிக் கொண்டனராம். சென்னைக் கவர்னராய் இருந்த

**கன்னிமாராப் பிரபு** ஒரு முறை ஓசூருக்குச் சென்றிருந்த பொழுது, ஐயங்கார் புலமையைக் கேள்வியுற்று, அவரை வரவழைத்து அளவளாவினாராம்.

## மக்கட் பேறு

இங்ஙனம் சிறந்து விளங்கிய சக்கரவர்த்தி ஐயங்கார், **சிங்காரம்மாள்** என்பவரை மணந்து இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தி வருங்கால் மூவர் ஆண் மக்கள் பிறந்தனர். அவருள் மூன்றாம் புதல்வரே நமது **இராஜகோபாலாச்சாரியார்** அவர் 1878-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ஆம் நாள் இரவு **ரோகிணி** நட்சத்திரம் கூடிய நல்லோரையிற் பிறந்தவர். அந்த நல்லோரையிற்றான் கண்ணபிரான் முதலிய பெரியார்கள் பிறந்தார்கள் என்று நூல்கள் கூறுகின்றன.

## கல்வி கற்றல்

ஆச்சாரியார் முதலில் ஓசூர்ப் பள்ளியிற் கல்வி கற்றார். அவர் இளமையிற் பிற பிள்ளைகளைப் போல நன்கு விளையாடினார்; அனைவருடனும் கலந்து பழகினார்; தந்தையார் அவ்வப்போது கொடுத்து வந்த சிறு தொகையைப் புத்தகங்கள் வாங்கிப் படிப்பதில் செலவழித்தார்; பாட நூல்களுடன் பல துறை நூல்களையும் மிகுதியாகப் படித்து வந்தார். அதனால் இளமையிலேயே அவருக்குப் பொது அறிவு மிகுந்து காணப்பட்டது. பிள்ளைகளுடன் பல பொருள் பற்றி விவாதித்து வந்தமையால் வாதத்திறமையிலும்

ஓரளவு சிறந்து விளங்கினார். நயம்படப் பேசல், அடக்கம், அஞ்சாமை முதலிய நற்பண்புகள் சிறு வயதிலேயே அவரிடம் காணப்பட்டன.

ஆச்சாரியார் பெங்களூர் லண்டன் மிஷன் உயர் நிலைப்பள்ளியிற் சேர்ந்து மூன்றாண்டுகள் கல்வி கற்றார்; அங்குப் பள்ளி நூல் நிலையத்திலிருந்த பல துறை நூல்களை ஓய்வின்றிப் படித்தார்; மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்ற பின்னர்ப் பெங்களூர் சென்ட்ரல் கல்லூரியிற் சேர்ந்து பி. ஏ. வரை படித்தார். அவர் பி. ஏ. வகுப்பில் அறிவியற் கலையை விருப்ப பாடமாக எடுத்துப் படித்தார். அவரது நுண்ணறிவைக் கண்டு ஆசிரியர்கள் அவரைப் பாராட்டினர். ஆச்சாரியார் ஷேக்ஸ்பியர், சர் வால்டர் ஸ்காட் ஆகியவர் நூல்களை நன்கு படித்தார். அதனால் அவர் ஆங்கிலத்தில் தெளிவாகத் திறம்படப் பேசுவதில் வல்லவரானார். ஆச்சாரியார் தமது பதினெட்டாம் வயதில் (1896-இல்) பி. ஏ. பட்டம் பெற்றார்.

## திருமணம்

ஆச்சாரியார் கல்லூரி இடைநிலை வகுப்பிற் படித்த பொழுதே—அவரது பதினாராம் வயதில்—அவருக்குத் திருமணம் நடைபெற்றது. சித்தூரைச் சேர்ந்த **அலர்மேல்மங்கம்மாள்** என்னும் பெண்மணியார் அவரது மனைவியார் ஆனார்.

## சட்டக் கல்லூரி மாணவர்

பி. ஏ. பட்டம் பெற்ற ஆச்சாரியார் சென்னைச் சட்டக் கல்லூரியில் மாணவராய்ச் சேர்ந்தார். இன்றைய 'ஐஸ் ஹவுஸ்' என்னும் கட்டடத்தில் அப்

பொழுதைய மாணவர் விடுதி இருந்தது. ஆச்சாரியார் அவ்விடுதியில் இருந்து படித்து வந்தார். அக்காலத்தில் உலகெலாம் சுற்றி இந்து சமயப்பெருமையை நாற்றிசையும் நலமுறப்பரப்பி இந்தியா மீண்ட **விவேகானந்த** அடிகள் அவ்விடுதியில் சில நாட்கள் தங்கியிருந்தார். ஆச்சாரியார் அப்பெரியாரிடம் மனமுவந்து பழகினர்; அடிகளுடைய சொற்பொழிவுகளை ஆர்வத்துடன் கேட்டார்; இந்தியாவைப் பிடித்துக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லும் சாதிவேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை, என்பன ஒழிந்து இந்தியர் அனைவரும் ஒரு தாயீன்ற இனப் பிள்ளைகளைப்போல வாழ வேண்டும் என்று அடிகள் கூறிய வாக்கியம் ஆச்சாரியார் உள்ளத்திற் பசுமரத் தாணி போலப் பதிந்தது. "நான் என்காலத்தில் இவற்றை ஒழிக்க இயலும் வரை பாடு படுவேன்" என்று ஆச்சாரியார் மனவுறுதி செய்து கொண்டார்.

ஆச்சாரியார் தம்து இருபதாம் வயதில் (1898-ல்) சட்டத்தேர்வுக்குச் சென்று வெற்றியுற்றுப் பி. எல். பட்டம் பெற்றார்.

## 2. வழக்கறிஞர் வாழ்க்கை

### சேலத்தில் வழக்கறிஞர் தொழில்

இராஜகோபாலாச்சாரியார் சேலத்தில் வழக்கறிஞர் தொழில் புரியத் தொடங்கினர். அப்பொழுது சேலத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞர் மூவர் இருந்தனர். அவர்கள் கே. ஜி. வேங்கட சுப்பையர்; பி. வி. நரசிம்மையர்; சி. விஜயராகவாச்சாரியார் என்பவர்

கள். நமது ஆச்சாரியார் தமது வாதத்திறமையால் விரைவில் பெயர் பெற்றார். முன்சொன்ன மூவரைப் போலவே புகழ் பெற்றார்; 'கிரிமினல் வழக்குகளில் திறம்படி வாதிப்பவர்' என்று பெயரெடுத்தார். அவருக்கு மாத வருமானம் ரூபாய் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் வரை கிடைத்தது. அவரது வாதம் அடக்கம், நயமான சொற்கள், சட்ட நுணுக்கங்கள் என்பவற்றைத் துணையாகக் கொண்டது. ஆதலின் அவர் எடுத்து விவாதித்த வழக்குகளில் பெரும் பாலும் வெற்றி பெற்று வந்தார்.

அவர் இளைஞராய் இருந்தமையால் அக்காலத்தில் அலங்கார உடைகளை ஆர்வத்துடன் உடுத்து வந்தார்; தூய வெண்மையான, மடிப்புக்கலையாத சலவை ஆடையே உடுத்தினார். பட்டுச் சட்டையையும் சரிகையிட்ட மேலாடையையும் தலைப்பாகையையும் அணிந்து வந்தார்.

## அச்சமற்றவர்

ஆச்சாரியார் சேலம் நகரத்திற்கு மூன்று கல் தொலைவில் உள்ள சூரமங்கலத்திற் குடியிருந்தார். அவர் நாடோறும் நீதிமன்றம் செல்வதற்காகக் குதிரை வண்டி ஒன்றை வைத்திருந்தார். ஒரு நாள் அவர் வண்டியில் ஏறியதும் குதிரை கட்டுக்கடங்காது ஓடத் தொடங்கியது. அதனைப் பார்த்தவர் பலர் ஆச்சாரியாரைக் குதித்து விடும்படி கூறினர். ஆயின் அவர் மனங்கலங்காது வண்டியிலேயே அமர்ந்திருந்தார். குதிரை நெடுந்தூரம் ஓடிக் களைத்து நின்றுவிட்டது. பிறகு ஆச்சாரியார் அதனை ஓட்டிக்

கொண்டு வீடுவந்து சேர்ந்தார். இந் நிகழ்ச்சியிலிருந்து ஆச்சாரியார் அச்சமற்றவர் என்பதை நன்கறியலாம் அன்றோ?

## வாதத் திறமை

ஒரு பெரு நிலக்கிழவருடைய ஆட்கள் காட்டிற் புகுந்து விறகு வெட்டினர் என்பதற்காகக் காட்டிலாகா அதிகாரி அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்தார் என்று சேலம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. பெருநிலக் கிழவர் சார்பில் நின்று ஆச்சாரியார் வாதித்தார்; காட்டிலாகா அதிகாரியைக் கூண்டில் நிறுத்திக் குறுக்குக் கேள்விகள் பலவற்றைக் கேட்டார். ஆட்களைத் தாம் பிடித்த அதே நேரத்தில் தாம் வீட்டில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர் எனறு அந்த அதிகாரியையே சொல்வித்தார். நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டனர். அறங்கூறவையத்தார் ஆச்சாரியாரின் நுண்ணறிவை வியந்து பாராட்டினர்.

## பொய்சொன்ன தன் பலன்

'ஆச்சாரியார் பிறர்க்கு ஆபத்தில் உதவி செய்பவர்' என்பதை அறிந்த ஹரிஹர ஐயர் என்ற ஒருவர் ஒரு நாள் அவரிடம் தம் குடும்பத்துடன் வந்தார்; "என் ஊர் பாலக்காடு நான் பாலக்காட்டுப் பள்ளி ஆசிரியன்; விடுமுறையில் திருப்பதிக்கு வந்தேன்; வழியில் பணம் களவாடப்பட்டது. ஊர் திரும்பப் பணம் வேண்டும்; உதவி செய்தருளுக," என்று ஆச்சாரியாரை வேண்டினார். ஆச்சாரியார் நீதிமன்றம்

செல்ல வேண்டியவர் ஆதலின், "வீட்டிற்குச் சென்று உண்வு கொள்க. யான் பிற்பகலில் வந்து கவனிக்கிறேன்," என்று கூறிச் சென்றார்.

வெளிச் சென்ற ஆச்சாரியார் நேரே தந்தி நிலையம் சென்று, ஹரிஹர ஐயர் சொன்ன பள்ளித் தலைமை ஆசிரியர்க்கு "உங்கள் பள்ளியில் ஹரிஹர ஐயர் என்பவர் ஓர் ஆசிரியரா? அவர் வெளியூர் சென்றிருக்கிறாரா? உடனே பதில் வேண்டும்," என்று தந்தியடித்தார். "ஹரிஹர ஐயர் என்பவர் ஓர் ஆசிரியர். அவர் வெளிச் செல்லவில்லை," என்று பதில் வந்தது. உடனே ஆச்சாரியார் போலீஸ் நிலையம் சென்று தம்மிடம் பொய் சொன்னவர் மீது குற்றம் சாட்டினார். ஐயர் கைது செய்யப்பட்டார். அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. ஐயர் குற்றவாளி என்பது மெய்ப்பிக்கப்பட்டது; இருநூறு ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. ஐயர் ஏழை ஆதலின் ஆச்சாரியார் அவருக்காக வாதாடித் தண்டத் தொகையைப் பத்து ரூபாயாகக் குறைக்கச் செய்தார்; அத்தொகையைத் தாமே குற்றவாளியின் சார்பிற செலுததினார்; பிறகு அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும், "பொய் சொல்லக்கூடாது," என்று அறிவுறுத்தி, வழிச் செலவுக்குப் பணம் உதவி, அவர்களை அனுப்பி விட்டார். ஆச்சாரியாரது இச்செயலை ஆழ்ந்து கவனியுங்கள். **தவற்றுக்குத் தண்டனை! ஆயின் அதே சமயத்தில் ஏழ்மைக்கு இரக்கம்!**

## செயல் வீரர்

"சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

என்னும் திருக்குறளை ஆச்சாரியார் நன்கறிந்தவர். அவர் எதனையும் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருபவர்; வந்தபின் அதன்படி நடப்பவர். இப்பிடிவாத குணத்தாற்றான் அவர் வாழ்க்கையில் பல வெற்றிகளை அடைந்துள்ளார். அவர் தீண்டாமை—பெண்ணடிமை—சாதி வேற்றுமை ஆகியவைகளை அறவே வெறுத்தவர்; அவற்றை ஒழிப்பதெப்படி என்பதை இராப்பகலாகச் சிந்தித்தவர்; துணிந்து செயலாற்றுவதன் மூலமாகவே இவற்றை ஒழிக்கக் கூடும்; வெறும் பேச்சாற் பயனில்லை! என்ற முடிவுக்கு வந்தவர்.

## தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்

காந்தியடிகள் 1920-இல் செய்யத் தொடங்கிய தாழ்த்தப்பட்டவர் தொண்டினை ஆச்சாரியார் 1906-ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டார் என்பது கவனிக்கத்தக்கது. அவர் சேலம் நகராண்மைக் கழகத்தார் நடத்திவரும் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் சிலரைச் சேர்க்க முயன்றார். அதனை அறிந்த வைதிகர் நகரத்தில் பலமான எதிர்ப்பை உண்டாக்கினர்; தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை என அச்சுறுத்தினர். "நகராண்மைக் கழகம் நகர மக்கள் அனைவர்க்கும் உரியது; கல்வி வசதியளிக்கக் கடமைப்பட்டது" என்று ஆச்சாரியார் வாதித்தார்; இறுதியில் வெற்றி பெற்றார்,

## சம பந்தி விருந்து

'சாதி வேறுபாடுகள் ஒழியச் சம பந்தி விருந்துகள் மிகுதியாக நடைபெறவேண்டும்,' என்று ஆச்சாரி

யார் விரும்பினார்; தம் கொள்கையைக் கொண்டுள்ள 'பிரீமேசன்' என்னும் கழகத்தில் உறுப்பினரானார்; தாமே முன்னின்று சம பந்தி விருந்துகள் நடைபெற ஏற்பாடு செய்தார்.

## நாட்டுப்பற்று

ஆச்சாரியார் சீர்திருத்தவாதியாக இருந்தது போலவே அக்காலத்திலேயே அரசியல் ஆர்வம் மிக்கவராகவும் இருந்தார். அதனால் அவர் 1910-இல் புதுவையில் வாழ்ந்து வந்த **சுப்பிரமணிய பாரதியாரைச்** சென்று கண்டார்; அவர் பாடல்களைப் படித்து உள்ளம் குளிர்ந்தார்; சுப்பிரமணிய சிவா, வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலிய நாட்டுப் பற்றுடைய பெருமக்களை மதித்தார்; அவர்கட்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தார்; காங்கிரசில் சேர்ந்து மாநாடுகளிற் கலந்துகொண்டார்; 1914-ல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டிலும் பங்கு கொண்டார்.

## மனைவியார் மறைவு

ஆச்சாரியார் வாழ்க்கையின் விளக்காக இருந்த அலர்மேல்மங்கை அம்மையார் காசநோயால் துன்புற்று 1915-இல் காலமானார். அவருக்குப் பிள்ளைகள் மூவரும் பெண்கள் இருவரும் பிறந்திருந்தனர். மக்கள் ஐவரையும் பாதுகாத்துக் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள, ஆச்சாரியார் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளல் நலம் என்று உற்றார் உறவினர் வற்புறுத்தினர். அப்பொழுது முப்பத்தெட்டு வயதுடைய ஆச்சாரியார், "நான் மற்றொரு மங்கைக்

குக் கணவனாக இருக்க என் மனம் இசையாது. என் பிள்ளைகள் ஐவருக்கும் அம்மையும் அப்பனும் யானே" என்று மனவுறுதியுடன் கூறினார். அவர் மறு மணம் செய்துகொள்ளவில்லை.

## நகராண்மைக் கழகத் தலைவர்

ஆச்சாரியார் 1917-இல் சேலம் நகராண்மைக் கழகத் தலைவரானார். அவர் அப்பொழுது மோட்டார் வண்டி வைத்திருந்தார். அவர் சூரமங்கலத்திலிருந்து மோட்டாரில் சேலத்திற்குச் சென்று வந்தார்; நகரப் பகுதிகளை அடிக்கடி சென்று கவனித்தார்; நகராண்மைக் கழக அலுவலகத்து ஒவ்வொரு வேலையையும் நேரிற் கவனித்தார். அதனால் அலுவலகப் பணியாளர் அனைவரும் ஒழுங்காகத் தத்தம் வேலைகளைச் செய்து வந்தனர். ஆச்சாரியார் தோட்டி முதல் தொண்டைமான் வரை அனைவரிடமும் புன்னகையுடன் பேசிப் பழகினார்; அவரவர் குறைகளை நயமாகச் சுட்டிக்காட்டித் திருந்துமாறு செய்தார்.

## தாழ்த்தப்பட்டவர் பங்காளர்

சேலம் நகரத்துத் தண்ணீர்க் குழைகளைப் பழுது பார்ப்பவருள் தாழ்த்தப்பட்டவர் இருவர் இருந்தனர். ஆச்சாரியார் பிராமணர் தெருவில் குழையைப் பழுது பார்க்க அவ்விருவரையும் அனுப்பினர். உடனே பிராமணர்கள் கொதித்தெழுந்தனர்; வழக்கறிஞர் நரசிம்மையர் வைதிகர் தலைவராகநின்று கிளர்ச்சி செய்தார். இதுபற்றி நகராண்மைக் கழகத்திலும் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. எதிர்ப்புப் பலப்பட்டது. எனினும் ஆச்சாரி

யார் மனங்கலங்கவில்லை. அவர், "இக் கண்டனத் தீர்மானம் நகராண்மைக் கழக விதிகட்கு மாறு பட்டது," எனக் கூறித் தீர்மானத்தைத் தள்ளி விட்டார்.

பின்னர் நகராண்மைக் கழக ஆட்சிக்குட்பட்ட கல்லூரி மாணவர் விடுதியில் தாழ்த்தப்பட்டார் இருவர் வேலையில் அமர்த்தப்பட்டனர். அப்பொழுதும் வைதிகர் பெருங் கூச்சலிட்டனர். அவர்கட்குத் தலைவராக சி. விஜயராகவாச்சாரியார் தோன்றினர். அவர் பிராமண மாணவர்களை விடுதியிலிருந்து நிறுத்திவிடுவதாக அச்சுறுத்தினர். ஆச்சாரியார் புன்னகை பூத்து, "விருப்பம்போல் செய்யலாம் நாங்களும் எங்கள் விருப்பம்போல் செய்வோம்," என்றனர். எதிர்ப்புப் பலமின்றி ஒடுங்கியது.

ஆச்சாரியார் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்த இடங்களில் குடிதண்ணீர்க் குழைகளை அமைத்தார்; அவர்கள் பிள்ளைகள் கல்வி கற்கப் பள்ளிகளை ஏற்படுத்தினர்; "அவர்களை மேனிலையடையச் செய்வதே எனது நோக்கம்," எனப் பல கூட்டங்களிற் பேசினர்; "தீண்டாமை தீரும்வரை நமது சமூகம் நாகரிக சமூகமாக மாறுவதற்கு வழியில்லை; சாதி வேறுபாடுகள் ஒழியவேண்டும்; மனிதனை மனிதனாக மதிக்கும் மனப்பான்மை மக்களிடம் அரும்பி மலர வேண்டும்," என்று பல கூட்டங்களில் உருக்கமாகப் பேசினர். தங்களை வாழ்விக்க வந்த பெரியார் என்று தாழ்த்தப்பட்டவர் ஆச்சாரியாரை வாயார வாழ்த்தினர்.

## சுவாமி சகஜானந்தம்

ஆச்சாரியார் நகராண்மைக் கழகத் தலைவரான ஆண்டில் தில்லைத் திருப்பதியிலிருந்து **சுவாமி சகஜானந்தம்** என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த துறவி ஒருவர் சேலம் சென்றிருந்தார். அவர் நந்தனார் பாட்சாலை என்னும் பெயருடன் ஒரு பள்ளியை நடத்தி வருபவர். அப்பள்ளியில் அவ் வகுப்பு ஆண்களும் பெண்களும் கல்வி கற்று வருகின்றனர். அப் பள்ளி இன்றும் நடைபெற்று வருகின்றது. சகஜானந்த அடிகள் அப் பள்ளியின் நலத்துக்கெனப் பல ஆண்டுகளாக உழைத்து வருகின்றார். அவர் வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர்; வடமொழிப் புலமையும் பெற்றவர்.

ஆச்சாரியார் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றார்; அவரைச் சிறப்பிக்க விருந்தொன்று நடத்தினார். அவ்விருந்தில் நகரப் பெருமக்கள் பலர் கலந்துகொண்டனர். வைதிகர் ஆச்சாரியார் மீது அடங்காச் சினம் கொண்டனர்; அவரையும், விருந்திற் கலந்துகொண்ட பிராமணர்களையும் சமூக விலக்குச் செய்தனர். ஆச்சாரியாரும் அவர் நண்பர்களும் சமூக விலக்கைப் பொருட்படுத்த வில்லை. அவர்கள் தங்கள் வீட்டுச் சடங்குகளைச் செய்துகொள்ள மந்திரம் கற்றனர்; ஒருவர்க் கொருவர் உதவி செய்து கொண்டனர். வைதிகர் எதிர்ப்பு இவ்வகையில் பயனற்றதாயிற்று.

### தந்தையார் சீற்றமும் அமைதியும்

சேலத்து நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்த சக்கரவர்த்தி ஐயங்கார் திடுக்கிட்டுத் தம் மகனுருக்கு வருத்தக் கடிதம் ஒன்று வரைந்தார். ஆச்சாரியார், "அநாதைப் பிணத்திற்கு ஈமக்கடன்களைச் செய்த 'நல்லான்' பரம்பரையில் வந்த நான், தாழ்த்தப்பட்டவருடன் சமமாக இருந்து உண்டது எவ்வாறு குற்றமாகும்? ஆழ்ந்து சிந்திக்கும்படி வேண்டுகிறேன்," என்று பதில் விடுத்தார். தந்தையார் மனம் அமைதியுற்றது.

### தந்தையார் மறைவு

சக்கரவர்த்தி ஐயங்கார் 1917-இல் காலமானுர். அவருடைய இறுதிச் சடங்குகளைச் செய்ய வைதிகர் மறுத்தனர். ஆச்சாரியார் தம் நண்பர்கள் உதவி கொண்டு சடங்குகளைக் குறைவின்றிச் செய்து முடித்தார். சேலத்து நகர மாந்தர் அவரது மனத் துணிவைப் பாராட்டிச் 'சொல்வதைச் செயலில் செய்து காட்டும் வீரர் இவரே,' என்று கூறிப்புகழ்ந்தனர். ஆச்சாரியார் இங்ஙனம் தம் பொது நலப்பணிகளால் பொது மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தார்.

## 3. அரசியல் வாழ்க்கை

### ஆச்சாரியார் அரசியல் நுழைவு

ஆச்சாரியார் 1910-ஆம் ஆண்டு முதலே காந்தியடிகளின் கொள்கைகளை வரவேற்றுர்; பாலகங்காதர திலகர் போன்ற நாட்டு உரிமை இயக்கத்தலை

வர்களை மதித்து வந்தார்; அவரால் தோற்றுவிக்கப் பட்ட சுய ஆட்சி இயக்கத்திற்கு ஆதரவு நல்கினார்; சேலத்திலும் சுற்றுப்புறங்களிலும் பல கூட்டங்கள் நடத்தி மக்கட்கு நாட்டுப்பற்றை ஊட்டினார். அப் பொழுது அவருடன் **திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், ஈ. வே. இராமசாமி நாயக்கர், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு** முதலியவர்கள் இணைந்து வேலை செய்தனர்.

## பெசன்ட் அம்மையார்

சென்னை அடையாற்றின் கரையில் பிரமஞான சங்கத்தைத் தோற்றுவித்து உலகப்புகழ் பெற்ற **டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார்** சுயாட்சிக் கிளர்ச்சி யில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டு சிறை சென்றார். முதல் உலகப் போரில் ஆங்கிலேயர்க்கு இந்திய ராகிய நாம் உதவி புரிய வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்வி அரசியல் தலைவர்களிடை விடை காண முடியாதபடி இருந்தது. அப்பொழுது 1918-இல் காஞ்சீபுரத்தில் **சரோஜினி தேவியார்** தலைமையில் தமிழ் மாகாண அரசியல் மாநாடு கூடியது. 'இந்தி யர்க்கு உரிமை வழங்கப்படும்' என்று ஆங்கிலேயர் வாக்குறுதி தரின், நாம் போரில் உதவி செய்யலாம்' என்பது ஆச்சாரியார் கருத்தாகும். அதனைத் திலகர் முதலிய தலைவர்கள் ஆதரித்தனர். ஆயின் பெசன்ட் அம்மையார், 'நாம் கட்டுப்பாடின்றி ஆங்கி லேயர்க்கு உதவி புரிய வேண்டும்' என்று ஒரு தீர்மானம் கொணர்ந்தார். ஆச்சாரியார் விரும்பிய தீர்மானமே ஏற்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு பெசன்ட் அம்மையார் அரசியல் துறவு பூண்டார்.

## சென்னையில் குடியேற்றம்

1918-இல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் சிறப்பு மாநாட்டிற்கு ஆச்சாரியார் சென்றிருந்தார். ஆங்கிலேயர் புதிதாக வெளியிட்ட அரசியல் சீர்திருத்தம் பற்றித் தங்கள் கருத்தினைத் தெரிவிக்கவே காங்கிரஸ் தலைவர்கள் 'சிறப்பு மாநாடு' கூட்டினர்; எவ்வாறு விவாதித்துத் தீர்மானம் செய்வது என்பது பற்றிப் பல மணி நேரம் பேசினர். முடிவில் சித்தரஞ்சனதாசர் ஆச்சாரியாரை அழைத்துத் தீர்மானத்தைத் தயாரிக்கச் சொன்னார்; ஆச்சாரியார் அனைவரும் பாராட்டும் வகையில் தீர்மானத்தைத் தயாரித்துத் தந்தார். சித்தரஞ்சனதாசர் ஆச்சாரியாரது நுண்ணறிவைப் பேரவையில் பாராட்டிப் பேசினார்.

ஆச்சாரியாரின் நுண்ணறிவைப் பாராட்டிய "இந்து" பத்திரிகையின் ஆசிரியரான **கஸ்தூரிரங்க ஐயங்கார்,** அவரைச் சென்னையில் குடியேறி நாட்டுப் பணி செய்யுமாறு வேண்டினார். ஆச்சாரியார் அப்பெரியவர் வேண்டுகோளுக்கு இணங்கி 1919-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் சென்னையிற் குடியேறி வழக்கறிஞர் தொழிலைப் பார்க்கலானார்.

## காந்தியடிகள் சந்திப்பு

காந்தியடிகள் 1919-இல் அமைதியான எதிர்ப்பு முறையை மக்கட்கு அறிவுறுத்தினார். அப்பொழுது புரட்சிக் கூட்டங்களை ஒடுக்க 'ரௌலட் என்னும் நீதிபதியைக் கொண்டு அரசியலார் கடுமையான சட்டம் ஒன்றைச் செய்தனர். அது 'ரௌலட்

சட்டம்' எனப்பட்டது. அக் கொடிய சட்டத்தை அமைதியான முறையில் மீறவேண்டும் என்று அடிகள் மக்கட்கு அறிவுறுத்தினர். அவர் பல மாகாணங்களிற் சுற்றுப் பிரயாணம் செய்தார்; சென்னைக்கும் வந்தார். கஸ்தூரிரங்க ஐயங்கார் அறிமுகப்படுத்த ஆச்சாரியாருடன் அளவளாவி, அவரது நுண்ணறிவு, செயலாற்றுந் திறமை, நாநயம் முதலிய நற்பண்புகளை நன்கறிந்தார். கூட்டத்திற்கு வந்திருந்தோரிடம் அடிகள் தம் அமைதிப் போரைப்பற்றி விளக்கினர். வந்திருந்தவர்கள் அதனைத் தெளிவுறத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது ஆச்சாரியார் காந்தியடிகள் கருத்தை மிகத் தெளிவாக விளக்கினர். அவ்விளக்கத்தைக் கேட்ட அடிகளே வியந்து நின்றார் எனின், ஆச்சாரியாரது நுண்ணறிவினையும் சொல்வன்மையினையும் என்னென்பது. சென்னையில் 'அமைதிப் போர்க்கழகம்' நிறுவப்பட்டது. ஆச்சாரியார் அதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அடிகள் ஆச்சாரியாருக்கு நல்வாழ்த்துக் கூறினர்.

## நாட்டில் சொற்பொழிவுகள்

ரௌலட் சட்டம் தோன்றிய பிறகு அரசாங்கத்தார் அடக்கு முறையைக் கைக்கொண்டனர்; சட்டத்தை மீறிக் கூட்டங் கூடியவரைப் பீரங்கி கொண்டு தாக்கினர். அடிகள் இக் கொடுமைகளை அமைதியான முறையில் எதிர்க்க **ஒத்துழையாமை இயக்கத்தைத்** தொடங்கினர்; 'பிள்ளைகள் பள்ளிகளை விட வேண்டும். வழக்கறிஞர் நீதிமன்றங்களை விட வேண்டும்; சட்டசபை உறுப்பினர் சட்டசபையை

விட்டு வெளியேற வேண்டும்' என்று அறிவுறுத்தினார். ஆச்சாரியார் அடிகளின் அறிவுரையைத் தமிழ்நாடெங்கும் சென்று பரப்பினார்; தமது வழக்கறிஞர் தொழிலை விட்டார்; கல்லூரியிற் படித்து வந்த தம் மக்கள் இருவரையும் நிறுத்தினார். சொல்லும் செயலும் ஒத்திருத்தல் வேண்டும் அன்றோ?

## முதல் சிறை வாழ்க்கை

நம் ஆச்சாரியார் 1920-இல் காங்கிரஸ் பேரவையின் பொதுச் செயலாளருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்; அவர் இரண்டாண்டுகள் தமிழகம் முழுவதும் சுற்றி அடிகளின் ஒத்துழையாமைப் போரைப்பற்றிப் பேசினார். அரசாங்கத்தார் வேலூரில் பேசலாகாது என்று அவருக்குத் தடை விதித்தனர். ஆச்சாரியார் 1921-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் நாளன்று அத்தடையை மீறிப் பேசினார்; அதன் பயனாக மூன்று திங்கள் சிறை வாழ்க்கை பெற்றார். காந்தியடிகள் ஆச்சாரியாரை மனமார வாழ்த்தினார்; ஆச்சாரியார் மூன்று திங்கள் கழித்து விடுதலை பெற்றார். அவரை ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், எம். சிங்காரவேல் செட்டியாரும் மிக்க சிறப்புடன் வரவேற்றனர்.

## 'இராஜாஜி' பட்டம்

ஆச்சாரியார் விடுதலை பெற்ற மூன்றாம் நாள் காந்தியடிகள் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். அவர் தாம் நடத்தி வந்த 'யங் இந்தியா' என்ற செய்தித்தாளுக்கு நம் ஆச்சாரியாரை ஆசிரியராக அமர்த்தினார். ஆச்சாரியார் மிக்க மகிழ்ச்சியுடன் அப்பணியை ஏற்றுக் கொண்டார்.

அடிகள் சிறையில் இருந்தபொழுது **பண்டித மோதிலால் நேஹ்ரு**, **சித்தரஞ்சனதாசர்** போன்ற தலைவர்கள் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். இதுபற்றி 1922-இல் **கயையில்** நடைபெற்ற மாநாட்டில் பேசப்பட்டது. ஆச்சாரியார், "காந்தியடிகள் இல்லாதபோது எந்த மாற்றமும் செய்ய வேண்டா," என்று மிகவும் உருக்கமாக நீண்ட நேரம் பேசினார். அவரது சொல்லாற்றல் பலரைத் தன்பால் இழுத்தது. அன்று அவர் வெற்றி பெற்றார். அவரது மதி நுட்பத்தைப் பாராட்டிய வட நாட்டார் அவரை அன்று முதல் **'இராஜாஜி'** என்று அழைக்கலாயினர்.

## கிராமத் தொண்டு

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அடிகள் விடுதலை பெற்றார்; கட்சியில் பிளவினைக் கண்டு மனம் நொந்தார்; "சட்டசபைக்குச் செல்வோர் செல்க; மற்றவர் ஏழை மக்கட்குரிய கிராம முன்னேற்றத் துறையில் ஈடுபடுக," என்றார். ஆச்சாரியார் 1924 முதல் 1930 வரை கிராம முன்னேற்றத் துறையிற் கருத்தினைச் செலுத்தலானார்.

கதரைப் பரப்புதல், தீண்டாமையை ஒழித்தல் மதுவிலக்கு, இந்து—முஸ்லிம் ஒற்றுமையை வளர்த்தல், நாட்டுக்கல்வியைப் பெருக்குதல் என்பன காந்தியடிகள் மேற்கொண்டவை. ஆச்சாரியார் இவற்றை நடைமுறையிற் செய்து காட்ட முனைந்தார்; திருச்செங்கோட்டுத் தாலுகாவில் **புதுப்பாளையம்** என்னும் சிற்றூரில் **காந்தி ஆச்சிரமம்** ஒன்றை நிறுவினார்; வள

மனையில் தாம் நுகர்ந்த பலவகை இன்பங்களைத் துறந்தார்; குடிசை வாழ்வை மேற்கொண்டார்; சிற்றூராருடன் தாமும் ஒருவராகக் கலந்து உறவாடினார்; சுற்றுப்புறக் கிராம மக்கட்கு இராட்டைகளும் பஞ்சும் வழங்கினார்; அவர்கள் நூற்ற நூலை எடுத்துக் கொண்டு பதிலுக்குப் பஞ்சும் அதற்குரிய கூலியும் கொடுத்தார். இத்தொழிலால் மக்கள் தம் ஓய்வு நேரத்தில் சிறிதளவு பொருளீட்டும் வழி கண்டனர். கதர்த்துணிகள் நாட்டில் செலவாகத் தொடங்கின.

ஆச்சாரியார் சுற்றுப்புறக் கிராமங்களில் குடி நீக்கப் பிரசாரத்தைப் பலமாகச் செய்து வந்தார். '**விமோசனம்**' என்னும் திங்கள்தாள் ஒன்றினை நடத்தினார். அதனில் குடி நீக்கம் பற்றிப் பல கதைகளும் உரையாடல்களும் வரைந்தார். 'குடி கெடுக்கும் கள்' என்ற நூல் ஒன்றையும் வெளியிட்டார். அவரது தொண்டினைப் பாராட்டி முழு இந்திய குடி நீக்கச் சங்கத்துச் செயலாளர் பதவியும் காங்கிரஸ் குடி நீக்கக் குழுவின் செயலாளர் பதவியும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டன. 'ஆக்க வேலையில் வல்லுநர்' எனப் பெயர் பெற்ற ஆச்சாரியார் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணிகளைச் செவ்வனே செய்து வந்தார்.

அவர் தீண்டாமை ஒழிப்பிலும் கவனம் செலுத்தினார்; தமது ஆச்சிரமத்தில் தாழ்த்தப்பட்டவர் இருவரைத் தொண்டர்களாகச் சேர்த்துக் கொண்டார்; திருப்பதிக்கோவிலில் நுழைந்தனர் என்று வழக்குத் தொடரப்பட்ட தாழ்த்தப்பட்டவர் சார்பில் வாதாடி அவர்களை விடுதலை செய்வித்தார். தீண்

டாமை ஒழிந்தாற்றான் நமது சமூகம் செழித்தோங்கி மனித சமூகமாக வாழமுடியும் என்பதைப் பல கூட்டங்களில் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார். அவரது திருத்தொண்டினைப் பாராட்டிய காங்கிரஸ் தலைவர்கள் தமிழ் நாட்டுக் கதர் இலாகாவையும், தாழ்த்தப்பட்டார்க்குத் தொண்டுபுரியும் சங்கத்தையும் அவரது முழுப் பொறுப்பில் விட்டனர்.

## உப்புப் போரும் சிறை வாழ்க்கையும்

பண்டித மோதிலால் நேஹ்ரு முதலிய தலைவர்கள் சட்டசபை நுழைவினால் பயனில்லை என்பதைக் கண்டு 1930-ஆம் ஆண்டில் காந்தியடிகளின் தலைமையை ஏற்றனர். அடிகள் அந்த ஆண்டில் **உப்பு உரிமைப் போரைத்** தொடங்கினார்; 'உப்புக்காய்ச்சும் உரிமை மக்கட்கு வேண்டும்; அதற்கு அரசாங்கம் வரி விதிப்பது தவறு; நாட்டில் உள்ள காங்கிரஸ் தொண்டர்கள் கடற்கரைக்குச் சென்று உப்புக் காய்ச்சலாம்' என்றனர்; தாமே சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து **தண்டி** என்னும் கடற்கரை யிடத்திற்குச் சென்று உப்பெடுக்கப் புறப்பட்டார்.

ஆச்சாரியார் தம் தோழர்களுடன் திருச்சிராப் பள்ளியிலிருந்து கால் நடையாகப் புறப்பட்டு திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தை யடைந்தார்; 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ஆம் நாள் உப்புச்சட்டத்தை மீறினார்; உப்பை அள்ளினார்; இந்த இரு குற்றங்கட்காக ஒன்பது திங்கள் சிறை வாழ்க்கை பெற்றார்; அதேசமயம் காந்தியடிகளும் சிறைத்தண்டனை உற்றார்.

## காந்தி—இர்வின் ஒப்பந்தம்

அக்காலத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்த இர்வின் பிரபு அடிகளைச் சிறை வீடு செய்து 'காந்தி இர்வின் ஒப்பந்தம்' என்ற ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அதன்படி உப்பெடுக்கும் உரிமை ஓரளவு மக்கட்குக் கிடைத்தது.

ஆச்சாரியார் சிறையிலிருந்து வெளிவந்தார்; ஆயினும் அவசரச் சட்டப்படி சிறைப்படுத்தப் பட்டார்; ஓராண்டு தண்டனை பெற்றார்; எனினும் காந்தி இர்வின் ஒப்பந்தப்படி 1931-ஆம் ஆண்டு எல்லாத் தலைவர்களும் விடுதலை பெற்றபொழுது சிறையினின்றும் வெளிவந்தார்; ஒப்பந்தப்படி மதுக் கடைகளின் முன் நின்று மறியல் செய்யும் உரிமை கிடைத்ததனால், அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

## புனா ஒப்பந்தம்

1932-இல் சட்டமறுப்புப்போர் தொடங்கப் பெறறது. அடிகள் உட்படப் பலர் சிறை சென்றனர். ஆச்சாரியாரும் சிறைப்பட்டனர்; சில மாதங்களில் விடுதலை பெற்றனர். அப்பொழுது ஆங்கிலேயர் தாழ்த்தப்பட்டோரை இந்துக்களிடத்திலிருந்து பிரித்துத் 'தனி வகுப்பினர்' என்ற முறையில் பாதுகாப்பு அளிக்க எண்ணினர். 'அவர்களை அங்ஙனம் பிரிப்பது இந்து சமுதாயத்தை ஒடுக்குவதற்கு ஒப்பாகும்' என்பது அடிகள் கருத்து. ஆதலின் சிறையிலிருந்த அவர் 'இந்த முயற்சியை அரசியலார் விடும் வரை யான் உண்ணா நோன்பினை மேற்கொள்வேன்' என்று

கூறி நோன்பைத் தொடங்கினார்; ஆச்சாரியார் புனா வுக்கு விரைந்து சென்றார்; சிறையிலிருந்த அடிகளை நோன்பை நிறுத்துமாறு வேண்டினார்; அடிகள் இசையவில்லை. உடனே ஆச்சாரியார் இந்து சமயத் தலைவர்களையும் **டாக்டர் அம்பேத்கர்** முதலிய தாழ்த்தப் பட்ட வகுப்புத் தலைவர்களையும் ஒன்று கூட்டிப் பேசி னார்; அடிகளின் உள்ளம் உவக்கும்முறையில் ஒப்பந் தம் ஏற்பட வழி கோலினார். அந்த ஒப்பந்தத்தை ஆட்சியாளரும் ஒப்புக்கொண்டனர். அடிகள் அக மிக மகிழ்ந்து உண்ணு நோன்பைக் கைவிட்டனர். அப்பொழுது உண்டான ஒப்பந்தம் **புனு ஒப்பந்தம்** எனப் பெயர் பெற்றது.

## சென்னை முதலமைச்சர்

**1935**-இல் ஆங்கில ஆட்சியார் புதிய அரசியல் திட்டமொன்றை இந்தியாவுக்கு வழங்கினர்; மாகாண ஆட்சியில் தாங்கள் மிகுதியாகத் தலையிடுவதில்லை எனக்கூறினர். ஆச்சாரியார் அத்திட்டத்தை நன்கு ஆராய்ந்தார்; தேர்தலில் நின்று வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி நாடாள்வதே நலம் என உறுதி கொண்டார்; தம் வாதத் திறனால் அடிகளையும் பிற தலைவர்களையும் வசப்படுத்தினர்.

நாடெங்கும் தேர்தல் நடந்தது. காங்கிரஸ் உறுப்பினர் பலராகத் தேர்தலில் வெற்றி பெற்றனர். ஆச்சாரியார் **1937**-இல் நமது சென்னை மாகாண முத லமைச்சராக அமர்ந்தார். அவருடன் பதின்மர் அமைச்சராயிருந்தனர். அப்பொழுது அவர் பொது நலனைக் கருதிச் செய்த சட்டங்கள் சில. அவற்றுள் ஒன்று **குடி நீக்கச் சட்டம்.** இது முதலில் சேலம் மாவட்

டத்தில் சோதிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு வேறு இரண்டு மாவட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. **குடியானவர் கடன் நீக்கச் சட்டம்** ஒன்று குறிக்கத்தக்கது. இச்சட்டத்தினுல் குடியானவர் பலர், தம்மை இராப்பகலாக வருத்தி வந்த கடன் சுமையிலிருந்து விடுதலை பெற்றனர்.

## வேறு சட்டங்கள்

மதுரையில் வைதிகர் கோவில் நுழைவுக்கு மாருகச் செய்த கிளர்ச்சிக்கும் தொடுத்த வழக்கிற்கும் எதிராக இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. குடி நீக்க முயற்சியால் உண்டான அரசாங்க வருமானக் குறைவைச் சரிப்படுத்த ஆச்சாரியார் **விற்பனை வரிச் சட்டம்** ஒன்றை நிறைவேற்றினுர். இந்த வரி விதிப்புச் சில நாடுகளிற்ருன் வழக்கில் இருக்கின்றது. இது பொது மக்களைப் பாதிக்கும் சட்டமாயினும், குடி நீக்க முயற்சியால் உண்டாகும் பொருட் குறைவை நிறைவாக்க மேற்கொண்டதாதலின், ஒருவாறு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பதவி துறத்தல்

ஆச்சாரியார் நீண்ட நாள் முதலமைச்சர் பதவியில் இருக்கவில்லை. இரண்டாம் உலகப்போர் 1939-இல் தொடக்கம் பெற்றது. ஆங்கிலேயர்க்குப் போரில் உதவி புரியலாகாது என்று காங்கிரஸ் முடிவு செய்ததால், காங்கிரஸ் அமைச்சர்கள் தங்கள் பதவிகளிலிருந்து விலகி விட்டனர்.

## ஆச்சாரியார் சிறைப்படல்

அடிகள் 'தனிப்பட்டவர் சத்தியாக்கிரகம்' என்னும் புதிய அமைதிப்போர் முறையைத் தொடங்கினார். ஆச்சாரியார் அதனைப் பின்பற்றிப் பல தலைவர்களைத் தமிழகத்தில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்தினார்; 'போரில் ஈடுபட வேண்டா' என்று வெளிப்படையாகக் கூறிச் சிறை செல்வதே இப்போராட்ட முயற்சியாகும். இந்த முயற்சியால் ஆச்சாரியாரும் 1940-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாளன்று சிறைப்பட்டார்; ஓராண்டு சிறை வாழ்க்கை ஏற்றார்; 1941-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை பெற்றார்.

## ஒற்றுமை முயற்சி

முஸ்லிம்கள் பலராகவுள்ள மாகாணங்களைப் **பாகிஸ்தான்** என்னும் பெயரால் தனி ஆட்சிக்கு உட்படுத்த வேண்டும் என்பது முஸ்லிம் லீகின் தலைவரான **ஜனப் முஹம்மது அலீ ஜின்னாஹ்** அவர்களின் கருத்து. அதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் இணங்காதவரை தாம் இந்தியாவின் உரிமைக்குத் துணை செய்ய இயலாதென்று அவர் உறுதியுடன் கூறிவிட்டார். அடிகளும் பிற தலைவர்களும் பிரிவினைக்கு ஒப்ப வில்லை. ஆச்சாரியார் 'முஸ்லிம் லீகுடன் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்து கொள்வதே நலம்' என்று கூறினார்; மக்களிடமும் பலமான பிரசாரம் செய்தார்; லீக் தலைவரைச் சந்தித்தும் பலமுறை பேசினார். ஆச்சாரியாரது போக்கு காங்கிரசுக்கு மாறானது என்று பலர் வன்மையாய்க் கண்டித்தனர்.

அதனால் ஆச்சாரியார் காங்கிரசில் தாம் தாங்கி வந்த எல்லாப் பதவிகளிலிருந்தும் விலகினார்.

## ஆகஸ்டுப் புரட்சி

'வெள்ளையனே, வெளியே செல்' என்னும் முழக்கம் அடிகள் வாயிலிருந்து 1942-இல் புறப்பட்டது. 'வெள்ளையர் வெளியேறாவிடில் அமைதிப் போர் மீண்டும் தொடங்கப் பெறும்' என்று 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் காங்கிரஸ் தீர்மானித்தது. மறு நாளே அடிகளும் பிற தலைவர்களும் சிறைப்பட்டனர். நாடு முழுவதிலும் அரசாங்க அடக்கு முறைகளின் நடனம் புரிந்தது. ஒரு காரணமும் காட்டப்பெறாமல் பலர் சிறைப்பட்டனர். இரயில் தண்டவாளங்களைப் பெயர்ப்பது, தந்திக் கம்பிகளை அறுப்பது, போலீஸ் நிலையங்களைக் கொளுத்துவது போன்ற செயல்கள் நாட்டில் நடை பெற்றன. அப்பொழுது காங்கிரசுக்கு வெளியேயிருந்த ஆச்சாரியார் நாட்டு நன் மக்களைக் கொண்ட அரசாங்கத்தை அமைக்கவும் தலைவர்களை விடுதலை செய்விக்கவும் பெரு முயற்சி மேற்கொண்டார்.

## தொழிற் கட்சி அரசாங்கம்

அவ்வமயம் **வேவல் பிரபு** என்பவர் புதிய அரசப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்தார். அவர் ஒரு திட்டத்தைத் தயாரித்துப் பிரிட்டிஷார் இசைவு பெற்றார்; அரசியல் தலைவர்களை விடுதலை செய்து, அவர்களுடன் கலந்து பேசினார். முஸ்லிம் லீக் தலைவர் ஒப்புக்கொள்ளாமையின் **வேவல் திட்டம்** பயன் படவில்லை.

அவ்வமயம் இங்கிலாந்தில் தொழிற் கட்சியார் பதவியேற்றனர். முதல் அமைச்சர் **ஆட்லி** என்பவர் இந்தியர்க்கு உரிமை வழங்கத் தயாராயினர். ஆச்சாரியார் **1945**-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **2**-ஆம் நாள் அடிகள் முதலியோர் விருப்பத்திற் கிணங்கிக் காங்கிரசிற் சேர்ந்தார்.

## இந்திய அரசாங்க அமைச்சர்

ஆச்சாரியார் அடிகள் கொள்கைக்கும் காங்கிரஸ் கொள்கைககும் மாருக லீகுடன் பேசியதும் காங்கிரசிலிருந்து விலகியதும் தமிழகத்துக் காங்கிரசில் பிளவை உண்டாக்கியது. ஆச்சாரியாரை அவரது புதிய போக்கிற்காக வெறுத்தவர் கை ஓங்கலாயிற்று. அவர்களே மாகாண ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தனர். இதனைக் கண்ட அடிகளும் பிற தலைவர்களும் ஆச்சாரியாரைக் காங்கிரஸ் செயற் குழு உறுப்பினராகக் கொண்டனர். 1946-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2-ஆம் நாள் காங்கிரஸ் கட்டளைக்கு இணங்கப் பன்னிருவரைக் கொண்ட நாட்டு அரசாங்கத்தை (National Govt.) **பண்டித ஜவாஹர்லால் நேஹ்ரு** அமைத்தார். அந்த இடைக்கால அமைச்சர் அவையில் ஆச்சாரியாரும் இடம் பெற்ருர்.

## ஆட்சி மாற்றம்

முஸ்லிம் லீக் விரும்பியபடி காங்கிரஸ் தலைவர்கள் நாட்டைப் பிரிக்காமையால் சில மாகாணங்களில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் உயர் நிலையை அடைந்தன. அதனுல் காங்கிரஸ் தலைவர்கள் பாகிஸ்தான் ஏற்பட இசைந்தனர். ஆச்சாரியார் யோசனைப்படி

காங்கிரஸ் தலைவர்கள் முன்னரே இதற்கு இசைந் திருப்பின், படுகொலையைத் தவிர்த்திருக்கலாம். அப் பொழுதுதான் தலைவர்களும் பொதுமக்களும் ஆச்சாரியாரின் மதி நுட்பத்தை நன்குணர்ந்து பாராட்டினர்.

இந்திய நாட்டாட்சி 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் இந்தியர் கைக்கு மாற்றப் பட்டது. அன்று **இந்திய யூனியன், பாகிஸ்தான்** என்று இரண்டு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டது; இரண்டு ஆட்சி மன்றங்கள் ஏற்பட்டன. இந்திய யூனியனுக்கு **டெல்லி** தலைநகரம்; பாகிஸ்தானுக்குக் **கராச்சி** கோநகரம். ஆட்சி மாற்றத்திற்குப் பாடு பட்ட புதிய வைசிராயான **மவுண்ட் பேட்டன் பிரபுவே** சிறிது காலம் இந்திய யூனியன் அரசாங்கத் தலைவர் ஆனார். பாகிஸ்தான் அரசாங்கத் தலைவராக லீக் தலைவர் ஜின்னுஹ் அவர்கள் பதவியேற்றார்.

### வங்கக் கவர்னர்

ஆட்சி உரிமை ஏற்பட்ட பின்னர் ஆச்சாரியார் **வங்க மாகாணக் கவர்னராக** நியமனம் பெற்றார். அப்பொழுது வங்க மாகாணத்தில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் தலைவிரித்தாடின. அடிகள் அங்குச் சென்று அமைதியை நிலைநாட்ட அரும்பாடு பட்டார். ஆச்சாரியாரும் அஞ்சா நெஞ்சுடன் அங்குத் தங்கி வகுப்புக் கலவரத்தை அடக்கினார். மவுண்ட் பேட்டன் பிரபு சிறிது காலம் இங்கிலாந்து சென் றிருந்த போது ஆச்சாரியார் **கவர்னர் ஜெனரலாக** இருவாரங்கள் வேலை பார்த்தார்.

## கவர்னர் ஜெனரல்

மவுன்ட் பேட்டன் பிரபு 1948-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாள் தமது பதவியிலிருந்து நீங்கி இங்கிலாந்து சென்றார். அன்றே இந்தியருள் ஒருவர் **கவர்னர் ஜெனரல்** ஆனார். அப் பெரியார் யாவர்? அவரே நமது தமிழகத்து ஆசசாரியார். அவர் பதவி யேற்றதைப் பாராட்டி எல்லா நாட்டு அரசியல் தலைவர்களும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துச் செய்தியை அனுப்பினர். அவர் அப்பதவியை 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ஆம் நாள் வரை தாங்கினார். 26-ஆம் நாள் அன்றுதான் **இந்தியக் குடியரசு** தோன்றியது. இந்தியக் குடியரசின் தலைவராகவும் இருந்து பணியாற்ற வேண்டும் என்று **ஜவாஹர்லால் நேஹ்ரு** முதலிய தலைவர்கள் வேண்டினர். ஆச்சாரியார் பதவி வகித்தலில் தமக்கு விருப்பமில்லை என்பதை எடுத்துக் கூறி அவர்கள் வேண்டுகோளையும் மறுத்து விட்டார். அதன்பின் குடியரசுத் தலைவராக **டாக்டர் இராஜேந்திர பிரசாத்** அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

## இந்திய அரசாங்க அமைச்சர்

ஆச்சாரியார் ஓய்வு கிடைத்ததே என்று மகிழ்ச்சியோடு சென்னை மீண்டார். ஆயினும் இந்திய அரசாங்கம் அவரை ஓய்வு கொள்ள விடவில்லை. அவர் இந்திய அரசாங்க அமைச்சராயிருந்து தொண்டாற்ற வேண்டுமென்பதைப் பண்டித ஜவாஹர்லால் நேஹ்ருவும் சர்தார் வல்லபாய்

பட்டேலும் குடியரசுத் தலைவர் இராஜேந்திரரும் மனமார விரும்பினர். ஆச்சாரியார், அவர்கள் விருப்பத்தின்படியே டெல்ஹி சென்று அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார். நாட்டுக்குழைப் பதையே பிறவி எடுத்ததன் பயனாகக் கருதியுள்ள மைதான், ஆச்சாரியார் தமது முதிய பருவத்திலும் இந்திய அரசாங்க அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டமைக்கு ஏறற காரணமாகும். இத்தகைய தந்நலமற்ற பெரியார்களாற்றான் ஒரு நாடு முன் னேற்றம் பெற முடியும்.

## 4. நற்பண்புகள்

### தந்நல மற்றவர்

ஆச்சாரியார் வாழ்க்கை வரலாற்றிலிருந்து அவருடைய நற்பண்புகளை நாம் நன்கறியலாம். அவர் நாட்டுத் தொண்டைக் கருத்திற் கொண்டு தம் தொழிலை விட்டார்; தொழிலால் வரும் செல்வத்தைத் துறந்தார்; சுகபோகங்களைத் துறந்தார்; தூய-மிக எளிய-கதராடையை உடுத்துக் கொண்டு ஏறத்தாழ முப்பதாண்டுகளாகப் பொதுப்பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்; பலமுறை சிறை வாழ்க்கை ஏற்றார். அவருடைய தந்நல்லமற்ற பொதுப் பணியை நோக்குங்கால் அவர் ஒரு '**தியாக வீரர்**' என்று கூறு வது பொருத்தமன்றோ ?

### அஞ்சா நெஞ்சினர்

சேலத்தில் அவர் தாழ்த்தப்பட்டவர்க்கு உதவி செய்த பொழுதெல்லாம் உண்டான எதிர்ப்புக் களைப் பொருட்படுத்திலர்; சென்னை மாகாணக்

காங்கிரஸ் அவரை வெறுத்த பொழுதும் கலங்கிலர்; 'எனது யோசனை ஏற்கப்படும் காலம் வரும்' என்று அஞ்சாது கூறினார். அவர் கூறியபடியே பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிகளிலிருந்து அவர் 'அஞ்சா நெஞ்சினர்'—'வருவது அறிந்து அஞ்சாது அறைபவர்' என்பன தெரிகின்றன அல்லவா?

## செயல் வீரர்

சொல்லியவாறு செய்வதில் ஆச்சாரியார் வீரர் என்றே கூறல் வேண்டும். 'சாதி வேறுபாடுகள் ஒழிய வேண்டும்' என்று மேடைமீது முழக்கமிட்டுச் செயலளவில் ஒன்றுமே செய்யாத பெரியவர்களே, நம் நாட்டிற் பலராவர். ஆச்சாரியார் அவர்கட்கு நேர் மாறானவர். அவர் தம் செல்வத் திருமகளாரைக் காந்தியடிகளின் மகனாரான **தேவதாஸ் காந்திக்குத்** திருமணம் செய்வித்தார் என்பது உலகறிந்த செய்தியாகும். அவரது செயலாற்றுந் திறனுக்கு வேறென்ன சான்று வேண்டும்?

## உத்தம நண்பர்

நண்பர் பலர் கருத்து வேறுபாடுகளால் வேறுபடும் பொழுது தம் பழைய நட்பினை மறந்து விட்டுப் பகைமை பாராட்டல் வழக்கம். ஆயின், ஆச்சாரியார் இந்த நிலைமைக்கு மாறானவர். காங்கிரசில் அவருடன் தோளோடு தோள் இணைய வேலை செய்த **பெரியார் ஈ. வே. இராமசாமி** அவர்கள் காங்கிரசை விட்டுப் பிரிந்து வேறு கட்சித் தலைவராக மாறிக் காங்கிரசுக்கு மாறாக நாட்டில் பிரசாரம் செய்து வருபவர்.

ஆயினும், ஆச்சாரியார் அவரிடம் இன்றளவும் உத்தம நண்பராக நடந்து வருகின்றார். பெரியாரும் ஆச்சாரியாரிடம் அங்ஙனமே உள்ளன்புடன் நடந்து வருகின்றார்; அவரைத் தக்க சமயங்களில் தமக்கு ஆலோசனை கூறுபவராகவும் பெரியார் கொண்டிருக்கின்றார் எனின், ஆச்சாரியாரது உண்மை நட்புக்கு வேறு எடுத்துக்காட்டு வேண்டுவதில்லை அன்றோ?

## சிறந்த பேச்சாளர்

ஆசசாரியார் எப்பொருள் பற்றியும் பேசவல்லவர்; மிக எளிய நடையில்—கேட்டார்ப் பிணிக்கும் முறையில்—பல எளிய மேற்கோள்கள் வாயிலாகச் சிக்கலான செய்திகளையும் விளக்கிப்பேசும் ஆற்றல் பெற்றவர்; நகைச்சுவை முதலிய சுவைகள் தோன்றப் பேசுதலிலும் வல்லவர். அவரைப் போட்டிப் பேச்சில் வெல்லலும் அரிதாகும்.

## சிறந்த தமிழ்த் தொண்டர்

ஆச்சாரியார் சிறந்த வழக்கறிஞர்; அவ்வாறே சிறந்து விளங்கும் அரசியல் அறிஞர். அவர் சிறந்த தமிழ்த் தொண்டருள் ஒருவருமாவர். அவர் "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் கருததுக் கேற்ப, அரசியல் மேடையில் மறறவர் தமிழிற பேச இயலாமையும் வெட்கமுமுற்ற காலத்தில்—அஞ்சாமல்—பிறர் நகைப்பைப் பொருட் படுததாமல் தமிழிற பேசியவர்; அரசியற் செய்திகளைத் தாய் மொழி வாயிலாகத் தமிழர் உள்ளங்களிற் பதியச் செய்தவர்.

அவர் தம் சிறை வாழ்க்கையில் திருக்குறளை நன்கு கற்ருர்; திருவள்ளுவரது பொருட்பாலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இது போற்றத்தக்க செயலன்ருே?

ஆச்சாரியார் தம்து முதல் சிறைவாழ்க்கையில் **சாக்ரடீஸ்** என்னும் கிரேக்க நாட்டு அறிஞரது வரலாற்றைத் தமிழில் வரைந்தார். இதுவே அவர் தமிழில் எழுதி வெளியிட்ட முதல் நூலாகும். **குட்டிக் கதைகள், கண்ணன் காட்டிய வழி, மார்க் அரேலியஸ், ஆத்ம சிந்தனை, உபநிஷதப் பலகணி, குடிகெடுக்கும் கள், குழந்தை வளர்ப்பு, தாவரங்களின் இல்லறம், அபேத வாதம், தமிழில் வருமா?** முதலிய நூல்கள் ஆச்சாரியாரால் எழுதப்பட்டவை. தமிழ் கற்போர்க்கென்று '**தம்பீ வா**' '**இதையும் படி**' என்னும் சிறுநூல்களையும் ஆச்சாரியார் எழுதியுள்ளார். அவர் **வியாசர் விருந்து** என்ற தலைப்பில் வியாச பாரதச் செய்திகளை அழகாக எழுதி ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். ஒருவர் ஆச்சாரியார் சொற்பொழிவுகளில் பயன்படுத்தி வரும் பழமொழிகள், பொன்மொழிகள், எடுத்துக் காட்டுக்கள், இவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.

## முடிவுரை

உயர்திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பொதுவாக இந்தியத்தாய் ஈன்ற அரியபுதல்வர் சிலருள் ஒருவர்; சிறப்பாகத் தமிழ்த் **தாயின் தவப் புதல்வர்** என்னலாம். அவரது வாழ்க்கை தந்நலமற்ற வாழ்க்கை; அவரது உள்ளம்—உரை—

செயல் ஆகிய மூன்றும் தந்நலமற்ற முறையில் அமைந்தவை. அவர் தாய்நாட்டிற்காகத் தம் வாழ்வை உரிமையாக்கினவர்; தாழ்த்தப்பட்டவர்க்காகத் தம் இனத்தவரால் வெறுக்கப்பட்டவர்; முஸ்லிம்களுக்கும் நலன் விளைவிக்க வேண்டும் என்று முயன்றதில் காங்கிரஸ்காரரால் வெறுக்கப் பட்டவர்; எனினும் அனைவர் உள்ளத்திலும் தமது தகுதியின் மிகுதியால் இருப்பிடம் பெற்றவர். அவர் வருவது உரைக்கும் அரசியல் அறிஞர்; அமைச்சர்க்குரிய அரிய பண்புகளைப் பெற்றவர்; தலைவர்க்குரிய தகுதியும் வாய்ந்தவர்; பல சிக்கல்களைப் போக்கும் அறிவாற்றல் வாய்ந்தவர்; சொல்வதைச் செயலில் காட்டும் நெஞ்சுரம் வாய்ந்தவர். வாய்ச் சொல் வீரர்களால் நாடு வளமுறாது. இத்தகைய செயலாற்றும் வீரர்களாற்றான் சமூகம் சீர்பெற வேண்டும். ஆதலின் ஆச்சாரியார் வரலாறு--அவரது செயலாற்றும் திறமை—அஞ்சா நெஞ்சம்—என்பன நம் மக்களுடைய மடிந்த உள்ளங்களுக்கு உரம் ஊட்டுவனவாக! அவர்களை உண்மைச் செயல் வீரர்களாக ஆக்குவனவாக!



டாக்டர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்.

# 2. மருத்துவம்-கல்வித் துறை அறிஞர்

# டாக்டர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்

( தோற்றம் கி. பி. 1887 )

## 1. கல்விப் பயிற்சி

### தோற்றுவாய்

ஒருவர் தம் வாழ்க்கையில் எத்துறைத் தொழிலை மேற்கொண்டனரோ, அத் துறைத் தொழிலில் புகழ் பெறுதல் நல்லது; பாராட்டத் தக்கது; ஆயின் அத் துறைத் தொழில் ஒன்றுடன் நில்லாது வேறு துறையிலும் அறிவினைச் செலுத்தி அதிற் பொன்றாப் புகழினைப் பெறுதல் மிகவும் பாராட்டத் தக்கது. இவற்றில் உலகப் புகழுக்கு உரியராதல் பின்னும் சிறந்ததன்றோ ?

நமது தமிழ்ப் பெரியாராகிய டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் மேற்சொன்ன சிறப்புகட்குரியவராவர். அவர் பிள்ளைப் பேற்று மருத்துவத் துறையில் பெரும் புலவர்; உலகப் புகழ் பெற்றவர்; கல்வித் துறையிற் சிறந்தவர்; அத் துறையிலும் உலகப் புகழ்பெற்றவர். அப்பெரியார் யார்? அவர் எங்ஙனம் இவ்விரு துறைகளிலும் உலகப் புகழ் பெற்றார்? அவர் வரலாற்றிலிருந்து நாம் அறியத்தகுவன யாவை? என்னும் இவ்வினாக்கட்கு இங்கு விடை காண்டல் நமது கடமையாகும்.

## ஆர்க்காடு

டாக்டர் முதலியார் முன்னோர்கள் வாழ்ந்த இடம் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்க்காடு ஆகும். இந்த ஆர்க்காடு இன்று—நேற்று உண்டானதன்று; ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க நூல்களிலேயே ஆர்க்காடு குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் **அழிசி** என்னும் சிற்றரசன் ஆர்க்காட்டை ஆண்டு வந்தான் என்று ஒரு சங்கப் பாடல் கூறுகின்றது. முஸ்லிம்கள் தென்னாட்டை ஆண்டகாலத்தில் நவாபுகள் ஆர்க்காட்டையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை.

## முதலியார் மரபு

இத்தகைய பழமையும் பெருமையும் உடைய ஆர்க்காட்டில் தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினர் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஆங்கில ஆட்சியில் ஆங்கிலம் கற்று, அரசாங்க அலுவல் காரணமாகப் பல ஊர்கட்கும் சென்று வாழ்ந்தார் சிலராவர். அச்சிலருள் ஒருவரே டாக்டர் முதலியார் அவர்களின் தந்தையாராவர். அப்பெரியார் அரசாங்க அலுவலர் ஆதலின், சென்னை மாகாணத்திலுள்ள பல மாவட்டங்களிலும் வேலை பார்க்க வேண்டியவரானார். அவர் ஆர்க்காட்டைச் சேர்ந்த முதலியார் ஆதலின், ஆர்க்காட்டு முதலியார் என்று அழைக்கப் பட்டார். அங்ஙனமே ஆர்க்காட்டு முதலியார்கள் அனைவருமே அழைக்கப் பட்டனர். 'பொன்னேரி முதலியார்', 'பூவிருந்த வல்லி

முதலியார்' என்னும் பெயர்களும் இங்ஙனம் வழங்கப் படுகின்றவைகளேயாகும்.

## முதலியார் பிறப்பு

1887-இல் முதலியாரின் தந்தையார் கர்னூல் நகரத்தில் இருந்தபொழுது, அவ்வாண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் நாள் அவரது மனைவியார் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார். அவ் விரட்டைப் பிள்ளைகளே இன்று உலகம் போற்றும் சர். ஆ. இராமசாமி முதலியார், சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் ஆவர். இரட்டைப் பிள்ளைகள் ஒரே அமைப்புடன் காணப்பட்டனர். பெற்றோர் அன்பெனும் உரத்துடன் பிள்ளைகளென்ற பயிர்கள் வளரலாயின. பிள்ளைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். இங்ஙனம் இரண்டு ஆண்டுகள் இனிது சென்றன.

## தாயற்ற பிள்ளைகள்

இரண்டாம் ஆண்டின் இறுதியில் தாயார் காலமானார். பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தில் ஈன்ற தாயார் காலமாதல் உலகில் நடைபெறும்—கொடிய பொறுத்தற்கரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். பெற்ற தாயைவிடப் பிள்ளைகட்கு உற்ற துணை வேறுண்டோ! என் செய்வது! இயற்கை நிகழ்ச்சியை வெல்ல யாரால் இயலும்? இரட்டைப் பிள்ளைகள் தாம் பிறந்த இரண்டாம் ஆண்டிலேயே தாயற்ற பிள்ளைகளானார்கள்; ஆயினும், தந்தையார், 'தாயும் தந்தை'யுமாக இருந்து, அவர்களைக் கண்ணை இமைகள் காப்பது போலக் காத்து வந்தார்.

## பள்ளிப் படிப்பு

இரட்டைப் பிள்ளைகள் ஐந்தாம் வயதில் பள்ளியிற் சேர்க்கப்பட்டனர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, பிள்ளைகள், 'நாங்கள் எதிர் காலத்தில் சிறந்து விளங்குவோம்' என்பதை அறிவிப்பார் போல ஆசிரியர்கள் கவனத்தைத் தம்பால் ஈர்த்தனர். கர்னூல் நகராண்மைக் கழகத் தலைமை ஆசிரியர் இரட்டைப் பிள்ளைகள் மீது கவனத்தைச் செலுத்தினார். அவர்கள் ஆண்டு தோறும் முதன்மையுறத் தேர்ச்சி பெற்றமையும், போட்டிப் பேச்சுகளிலும் பிறவற்றிலும் பரிசுகள் பெற்றமையும், அடக்கம் முதலிய நற்குணங்களுடன் விளங்கினமையும் தலைமை ஆசிரியர் உள்ளத்தை உவக்கச் செய்தன. பிள்ளைகள் பள்ளி நூல் நிலையத்திலிருந்த பல துறை நூல்களை விருப்பம் கொண்டு படித்துத் தங்கள் பொது அறிவினை வளர்த்து வந்தனர். அவர்களுடைய நற்பண்புகளைக் கண்ட வகுப்பு மாணவர்கள் அவர்களிடம் அன்பும் மரியாதையும் காட்டிப் பழகி வந்தார்கள். இங்ஙனம் பலர் பாராட்டுக்கு உரியராகும் முறையில் படித்து வந்த இரட்டையர், 1902-ஆம் ஆண்டில் மெட்றிக்குலேஷன் தேர்விற் சிறப்புறத் தேர்ச்சி பெறுதற்காக ஊக்கத்துடன் படித்து வந்தனர். 'வெண்ணெய் திரண்டு வரும் போது பானை உடைந்தது' என்பது ஒரு பழமொழி; அதுபோல, மெட்றிக்குலேஷன் தேர்வுக்குப் பதினைந்து நாட்கள் இடையில் இருக்கையில் பிள்ளைகளின் தந்தையார் தமது 52-ஆம் வயதில் காலமானார். பாவம்! அப்பொழுது அப்பிள்ளைகள் மன

நிலை எப்படியிருந்திருக்கும்? 'கடவுளை நம்பு. துன்பத்திலும் இன்பத்திலும் அவனை நம்பு' என்பது தங்கள் வீட்டு மறைமொழியாதலின் அப் பிள்ளைகள் அதனை எண்ணித் தந்தையார் இறந்த துயரத்துடன் தேர்வுக்குப் படித்துச் சிறப்புத் தேர்ச்சி பெற்றனர்.

## கல்லூரிக் கல்வி

இரட்டைப் பிள்ளைகள், தம் தமையனாரான துரைசாமி முதலியாரும், பிற உறவினர்களும் படித்துத் தேர்ந்த சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். கருவிலே திருவுடையரான அவ்விருவரும் கல்லூரிக் கல்வியில் கருத்தூன்றினர். பெரியவரான இராமசுவாமி முதலியார் அரசியற்கலை நூற்களை விருப்பத்துடன் கற்கலானார். இளையவரான இலக்குமணசுவாமி முதலியார் அறிவியற்கலைகளில் கருத்தைச் செலுத்தலானார். இருவரும் தாம் தாம் மேற்கொண்ட பாடங்களுக்குரிய பல துணைநூல்களை நன்கு கறறனர்; கல்லூரிப் பாடங்களுடன் பொது அறிவினை வளர்க்கத்தக்க பலதுறை நூல்களையும் முயன்று கற்றனர்; பலவகை விளையாட்டுகளிலும் பயிற்சி பெற்றனர். டாக்டர் மில்லர், டாக்டர் ஸ்கின்னர், டாக்டர் மெஸ்டன் போன்ற பேராசிரியர்களிடம் பயின்ற காரணத்தால் ஆங்கில நூல்களை மிகுதியாகக் கற்றுத் திறம்படப் பேசவும் எழுதவும் வல்லுநர் ஆயினர்.

இளையவர், கல்லூரி இடைநிலை வகுப்புத் தேர்ச்சிக்குப் பிறகு மருத்துவக் கல்லூரி மாணவராயினர்; மருத்துவ நிபுணராகக் கருதி, அத் துறை நூல்களை

நன்கு பயின்றார்; தமக்கு ஏற்பட்ட ஐயங்களை உடனுக்குடன் ஆசிரியர்களைக் கேட்டுத் தெளிந்தார். மருத்துவ சோதனைகளைக் கூர்ந்து கவனித்தார். தாம் சோதனைகள் செய்யவேண்டிய சந்தர்ப்பங்களிலும் ஆசிரியரும் பிற மாணவரும் பாராட்டத்தக்க முறையில் சோதனைகளைச் செய்தார். 'இலக்குமணசுவாமி எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் சிறப்படைவார்' என்று கல்லூரி ஆசிரியர்கள் அப்பொழுதே சோதிடம் கூறினர். இங்ஙனம் ஆசிரியர்மாரும், உடன் படித்த மாணவரும் பாராட்டத்தக்க நிலையில் படித்து வந்த இளைஞர் மருத்துவத் தேர்வில் சிறப்புறத் தேறினார்.

பெரியவர் 1908-இல் பீ. எல். பட்டம் பெற்று வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

## 2. மருத்துவத்துறையில் தொண்டு

### மலர் முகங்கொண்ட மருத்துவர்

இலக்குமணசுவாமி முதலியார் 1909-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்க மருத்துவத் துறையில் மருத்துவர் வேலை பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது 22. அவர் முதலாண்டு மதுரை அரசாங்க மருத்துவ நிலையத்தில் வேலை பார்த்தார். நோயால் துன்புற்று உள்ளமுடைந்து வந்த நோயாளிகளை மலர் முகத்துடன் வரவேற்று,

"நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

மா. ரா. அரசு

என்றவாறு நோய்க்குரிய அடிப்படைக் காரணத்தை நன்கு சோதித்துத் தெளிந்து தக்க மருந்தினை உதவி வந்தார். நோயாளிகளை மலர் முகத்துடன் வரவேற்றலே நோயாளிகளுக்குப் பெரிதும் ஆறுதல் அளிப்பதாகும். ஏற்ற மருந்தும் கொடுக்கப்படின், கேட்பானேன்? மதுரைமா நகரப் பொதுமக்கள் புதிய மருத்துவ இளைஞரை உளமாரப் பாராட்டலாயினர்

## சென்னையில் மருத்துவர்

ஓராண்டுக்குப் பின் முதலியார் சென்னை பொது மருத்துவ நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு இரண்டாண்டுகள் சல்லியக்கிரியை செய்யும் மருத்துவ நிபுணராய் இருந்தார். அவர் மதுரையில் நற்பெயர் பெற்றவாறே சென்னையிலும் நோயாளிகளாற் பாராட்டப் பெற்றார். இரண்டாண்டுகளுக்குள்ளாகவே சல்லியக்கிரியை செய்வதில் தேர்ந்தவர் எனப் பெயர் பெற்றார்.

சென்னை எழும்பூரில் மாதர்-குழந்தைகள் மருத்துவ நிலையம் ஒன்று உண்டு. முதலியார் 1912-இல் அங்கு மருத்துவராக மாற்றப்பட்டார். அவர் அந்த நிலையத்திலும் தம் தொழில் திறமையாலும், நல்லொழுக்கத்தாலும் அனைவர் பாராட்டுக்கும் உரியவராயினர். முதலியார் அங்கு இரண்டாண்டுகள் வேலை பார்த்த பின்னர், இராயபுரத்துப் பிள்ளைப் பேற்று மருத்துவ நிலையத்திற்கு மாற்றப்பட்டார். பிள்ளைப் பேற்றுக்கு வரும் தாய்மாரிடம் அன்புடன் பேசுதல், அவர்கள் துன்பத்துக்கு ஆறுதல் கூறுதல், ஏற்ற மருந்துகள் வழங்கல் ஆகியவற்றில் சிறிதும்

சலிப்புக் காட்டாது வேலை செய்தார். இராயபுரத்துச் சுற்றுப் புறங்களில் தொழிலாளர்களே மிகுதியாக வாழுகின்றனர். அவர்கள் வீட்டுப் பெண்மணிகளே பலராக மருத்துவ நிலையத்துக்கு வருதல் வழக்கம். மருத்துவர் சிலர் ஏழைகளை ஒருவிதமாகவும், செல்வரை ஒருவிதமாகவும் கவனித்தல் உண்டு. ஆயின் முதலியாரிடம் அத்தகைய வேறுபாட்டுக் குணமில்லை. 'அனைவரும் அரசாங்கத்திற்கு வரிசெலுத்துவோர். அனைவரும் இந்நாட்டு மக்கள். இந்த மருத்துவ நிலையம் அனைவருக்கும் உரியது. இங்கு அரசரும் ஒன்றே; ஆண்டியும் ஒன்றே' என்பது முதலியார் கொண்டிருந்த எண்ணம். ஆதலின் அப் பெரியார் எல்லாத் தாய்மாரையும் ஒரு படித்தாகவே கவனித்து வந்தார். அதனால் அவர் வடசென்னை மக்களால் பாராட்டிப் பேசப்பட்டார். முதலியார் பிள்ளைப்பேற்று மருத்துவநிலையத்தில் ஆறாண்டுகள் வேலைபார்த்தார்.

## எழும்பூர் தாய்மார்-குழந்தைகள் மருத்துவ நிலையம்

முதலியார் 1920-ஆம் ஆண்டில் எழும்பூர் தாய்மார்-குழந்தைகள் மருத்துவ நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அவர் அது முதல் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக அங்கு வேலை பார்க்கலானார். அவர் பிள்ளைப் பேற்றுத்துறைப் பேராசிரியராகவும், மருத்துவ நிலையத் துணைக்கண்காணிப்பாளராகவும் இருந்தார். முதலியாரை நாடறியச் செய்ததும், உலகறியச் செய்ததும் அந்த எழும்பூர் மருத்துவ நிலையமேயாகும். முதலியார் பிள்ளைப்பேற்று மருத்துவத்

துறையில் தனிச் சிறப்பு உடையவர். அவர் அத் துறைத் தொடர்பான மேனாட்டு நூல்கள் அனைத்தையும் நன்கு கற்றவர்; சோதனைகளிலும் சிறந்து விளங்கினவர்; ஆதலின் அந்த மருத்துவ நிலையத்தில் பல திருத்தங்களைச் செய்தார். தாய்மார்களை மிகுந்த அன்புடன் கவனித்தல், தக்க வேளையில் மருந்து உணவு முதலியவைகளைத் தருதல் முதலியவற்றைச் சிறந்த முறையில் கையாளச் செய்தமையால், விரைவில் அம் மருத்துவ நிலையம் பற்றிய நல்லெண்ணம் நகரத்திற் பரவியது. எத்தகைய சிக்கலான பிள்ளைப் பேற்றையும் முதலியார் 'எளிதில் குணமாக மாற்ற வல்லவர்' என்னும் பெயர் சென்னையில் மட்டும் அன்றி நமது மாகாணம் முழுவதும் நன்கு பரவியது.

முதலியாரும் வாளா இருக்கவில்லை; தாம் குணப்படுத்திய சிக்கலான பிள்ளைப்பேறுகளைப் பற்றிப் பல கட்டுரைகளை வெளியிட்டார். அவை இந் நாட்டுத் தாள்களிலும், மேல்நாட்டுத் தாள்களிலும் வெளியாயின. அவ்வரிய கட்டுரைகளைப் படித்த பல நாட்டு மருத்துவ நிபுணர்கள் முதலியார் பெயரை அறியலாயினர். முதலியார் பிள்ளைப்பேற்று மருத்துவத் துறையில் நிபுணர் என்று பெயர் பெற்றார். அவரிடம் அத் துறையிற் பயிற்சி பெற இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலிருநதும், பர்மா, மலேயா, இந்து, சீனம் முதலிய நாட்டுப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் மாணவர் பலர் வரலாயினர். இதனால் முதலியார் பெயர் எந்த அளவு வெளி நாடுகளிற் பரவியது என்பது நன்கு புலனாகிறதன்றோ?

## வெளிநாடுகளிற் சுற்றுப்பிரயாணம்

சென்னை அரசாங்கம் முதலியாரை 1927-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள பல்கலைக் கழகங்களையும், ஐரோப்பா கண்டத்திலுள்ள பல்கலைக் கழகங்களையும் பார்வையிட்டு வருமாறு அனுப்பியது. முதலியார் இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து, பாரிஸ், பர்லின், வியன்னு, பிரஸல்ஸ், ஆம்ஸ்டர்டாம் முதலிய இடங்களைப் பார்வையிட்டார். ஆங்காங்கு இருந்த மருத்துவ நிலையங்களையும், பிள்ளைப் பேற்று மருத்துவ நிலையங்களையும் கருத்தூன்றிக் கவனித்தார். பிரிட்டனில் இருந்த மருத்துவர் கழகக் கூட்டங்களிற் கலந்து கொண்டார். பல நாட்டு அறிஞர் கூட்டங்களில் கலந்து பழகினர். பிள்ளைப் பேற்று மருத்துவம் பற்றிய தம் அனுபவங்களை மிகத் தெளிவாக விளக்கிப் பேசினர். மேனட்டு மருத்துவ அறிஞர்கள் முதலியாரது மருத்துவ அனுபவப் பேச்சினைக் கேட்டு மகிழ்ந்தனர். பிரிட்டனில் 1930-ஆம் ஆண்டில் பிள்ளைப்பேற்று மருத்துவக் கல்லூரி ஏற்பட்டபோது, அத் துறையில் வல்லுநரான முதலியார்க்குப் பிள்ளைப் பேற்று மருத்துவத் துறைக் கல்லூரி அமைப்புக்குரிய பெல்லோ (F.R.C.O.G. — Fellow of the Royal College of Obstetricians and Gynecologists) என்ற பட்டம் வழங்கப்பட்டது. இது பெறுதற்கரிய பட்டமாகும். காலஞ்சென்ற சர் கேதாரநாத தாஸ் என்பவரும், நமது முதலியாருமே அக் காலத்தில் அவ்வரிய பட்டத்தைப் பெற்ற இந்தியராவர்.

## மருத்துவ நிலையத்தில் மாற்றங்கள்

முதலியார் மேனாடுகளிற் கண்ட நல்லனவற்றை எழும்பூர் மருத்துவ நிலையத்திற் காண விரும்பினார். இம் மருத்துவ நிலையத்தில் இருந்த பல முறைகளைத் திருத்தமுற மாற்றியமைத்தார். பிள்ளைப் பேற்று மருத்துவத் துறை மாணவர்க்குப் பாடம் நடத்தலி லும் ஆராய்ச்சியிலும் சில புதிய முறைகளை நுழைத் தார். இவற்றின் பயனாக எழும்பூர் மருத்துவ நிலை யத்தில் மாணவர் தொகை மிகுதியாயிற்று. பிள்ளைப் பேற்றுத் துறையில் தனியாகச் சிறப்புப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார் தனித் தேர்வு வைத்துத் தகுதி இதழ் தரவேண்டுமென்று முதலியார் பல்கலைக் கழக அதிகாரிகளிடம் வற்புறுத் தினார். அதன் பயனாகத் தேர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு இத்துறையில் தேர்வு வைத்துத் தகுதி இதழ் வழங்குவதென்பதை இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்பாடு செய்த பெருமை இலக்குமண சுவாமி முதலியாரையே சார்ந்ததாகும்.

## கட்டுரைகள், நூல்கள், சொற்பொழிவுகள்

முதலியார் தமது மருத்துவத் துறையைப் பற் றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளி யிட்டு வந்தார் என்பது முன்னர்க் கூறப்பட்ட தன்றோ! அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 1928-இல் தம் துறை பற்றிய சில சொற் பொழிவுகளைச் செய்தார். அவை '**எலிசபெத் மத்தாய் சொற்பொழிவுகள்**' எனப் பெயர் பெற்றன. பின்னர் அவர் **கர்சான் சொற்பொழிவுகளும்** செய்தார். முதலியார்

இவை அல்லாமல் மருத்துவ மாணவர்க்கும், மருத்துவர்க்கும் பயனபடத்தக்க முறையில் தம் **தனித் துறை** (Obstetrics and gynecology) பற்றி விரிவான நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூல் இந்தியாவில் படிக்கும் மருத்துவ மாண வர்க்கு ஏற்ற பாடநூலாக இருந்து வருகின்றது. அந்நூல் உலக நாடுகள் எல்லாவற்றிலும் பாராட்டப் படுவதாகும். அந்நூலினால் முதலியாரது மருத்துவப் புலமை உலக மருத்துவர்க்கு நன்கு விளங்கலா யிற்று. முதலியார் மருத்துவ உலகிற் பெயர்பெறு தலைக் கண்டு மகிழ்ந்த அரசாங்கத்தினர் 1928-இல் அவருக்கு **இராவ்பகதூர்** என்னும் பட்டத்தை அளித் துச் சிறப்பித்தனர்.

### மருத்துவக் கல்லூரித் தலைவர்

முதலியார் எழும்பூர் மாதர்-குழந்தைகள் மருத் துவ நிலையத்தை இந்தியாவிலேயே முதன்மை வாய்ந்ததாகச் செய்து வந்ததைப் பாராட்டி அரசாங் கத்தார் அவரை 1939-இல் அதன் **மேற்பார்வையாளராக** நியமித்தனர். பின்னர் அதே ஆண்டில் **மருத்துவக் கல்லூரித் தலைவராக** நியமித்தனர். முதலியார் மருத் துவக் கல்லூரித் தலைவரா யிருந்தபோது, பல்கலைக் கழகத்தாரைத் தூண்டி மருந்து செய்வோர்க்குப் புதிய பட்டத் தேர்வை ஏற்படுத்தச் செய்தார். அப் பட்டத் தேர்வு அதுகாறும் இந்தியப் பல்கலைக் கழ கம் ஒன்றிலேனும் நிறுவப்படாததாகும்.

### மருத்துவத் துறையில் உழைப்பு

முதலியார் தாம் மருத்துவரானதுமுதல் மருத் துவர் நலனைப் பாதுகாத்தவர். **சென்னை மருத்துவர்**

கழகம் ஒன்றை 1912-இல் தொடங்கினார். அவர் முதலில் அக் கழகச் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் இருந்தார். 1942-இல் தலைவர் பதவியிலிருந்து விலகினார். எனினும் இன்றளவும் அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். அவர் அரசாங்கத்தினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட **சென்னை மருத்துவர் ஆலோசனைக் கழக** உறுப்பினராகப் பல ஆண்டுகள் இருந்தார்.

**இந்திய மருத்துவ ஆலோசனைக் கழகம் 1933**-இல் ஏற்படுத்தப்பட்டது. முதலியார் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் அக்கழகத்தில் உறுப்பினரானார். பின்னர் பல ஆண்டுகள் அதன் செயற்குழுவினருள் ஒருவராயிருந்தார். இந்திய நாட்டில் மருத்துவத் துறையைப் பரப்புதல்-மருத்துவத் துறை ஆராய்ச்சி-சுகாதார நிலை-இன்ன பிறவற்றைக் கவனித்து யோசனை கூறுதல் இக் கழகத்தினர் வேலை. முதலியார் இத் துறையில் தெளிந்த அறிவினராதலின் அவர் யோசனைகள் பொன்னே போலப் போற்றப் பட்டன. உறுப்பினர் அனைவரும் மிக்க மரியாதையுடன் முதலியார் யோசனைகளைக் கேட்பது வழக்கம்.

முதலியார் பிள்ளைப்பேற்று மருத்துவத் துறையில் தொடக்க முதலே மிக்க கவனத்தைச் செலுத்தினார். தொழிலாளர் வீட்டுப் பெண்களும், பிற ஏழைப் பெண்களும் தொழில் காரணமாக வெளிச் செல்லும்போது குழந்தைகளை விட்டுச் செல்ல இராஜா சர் இராமசுவாமி முதலியார் பெயரால் ஓரிடத்தை அமைத்துத்தர (1918-இல்) அடிப்படைக் காரணராக இருந்தார்.

நாட்டுச் சுகாதாரமும் குழந்தை வாரமும் கொண்டாடுவது என்பது ஏற்பட்டபொழுது அக் கொண்டாட்டத்தை வெற்றியுற நடத்தக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதலியார் அக் குழுவின் செயலாளராக இருந்து கொண்டாட்டத்தைச் சிறப்புற நடத்தினர். ஆண்டுதோறும் சென்னையிலும் வெளியிடங்களிலும் **சுகாதார வாரம்** கொண்டாடவும் சுகாதாரச் சொற்பொழிவுகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்தார். மாகாணத்தில் பல இடங்களில் பிள்ளைப் பேற்றுக்கும், பிள்ளை வளர்ப்பைக் கவனிக்கவும் பல நிலையங்களைத் தோற்றுவிக்கக் காரணராயிருந்தார். சென்னை நகரில் பிள்ளைப் பேற்ருல் இறப்பவர் - என்னென்ன குறைபாடுகளால் இறப்பவர் என்பன போன்ற பல விவரங்களை 1930-இல் ஓர் அறிக்கையாகத் தயாரித்து வெளியிட்டார். அங்ஙனம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அறிக்கை அதுதான என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆதலின் அந்த அறிக்கை எல்லா மாகாண அரசாங்கங்களின் கவனத்தையும் ஈர்த்தது. முதலியார் உழைப்பினை அனைவரும் பாராட்டினர்.

பிள்ளைப் பேற்றினைக் கவனிக்கும் மருத்துவர் மாநாடு என்ற ஒன்று இந்தியாவிற் கூடியதே இல்லை. அதனை முதன் முதலாக 1936-இல் சென்னையிற் கூட்டிய பெருமை முதலியாரையே சார்ந்ததாகும். இந்த மாநாட்டைக் கண்ட பின்னரே, மருத்துவரும் சல்லியக்கிரியை செய்பவரும் எனப்பட்ட பல்வகை மருத்துவரும் பல மாநாடுகள் கூட்டத் தொடங்கினர். முதலியார் கூட்டிய மாநாடு 1936-முதல், ஆண்டு

தோறும் நடைபெற்று வருகிறது. முதலியார் 1947-இல் நடந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்; இந்தியப் பிள்ளைப்பேற்று மருத்துவக் கழகத் தலைவராகவும் இருந்தார்.

முதலியார் பிள்ளைப்பேற்றுக்குரிய மருத்துவம் கற்பிக்கும் இலண்டன் இராயல் கல்லூரியுடன் (Royal college of Obstetricians and gynecologists) நெருங்கிய தொடர்பு கொண்டவர். அவர் அம் மருத்துவக் கழகத்தின் தென்னிந்தியப் பகுதிக்குப் பல ஆண்டுகள் தலைவரா யிருந்தார்; 1946-முதல் முழு இந்திய நடுக்குழுவின் (Central Board) தலைவரா யிருந்தார். அவர் மேற் சொன்ன பகுதிகளிலிருந்து பிள்ளைப் பேற்று மருத்துவத் துறையில் புலமை பெறுமாறு இளைய மருத்துவ மாணவர் பலரை ஊக்கி வந்தார்; இன்னும் ஊக்கி வருகின்றார்.

போருக்குப் பின் மருத்துவத் துறையைப் பெருக்கவும் இந்திய நாட்டுச் சுகாதாரத்தை மேலும் நன்னிலைக்குக் கொணரவும் உரிய வழிகளை ஆராய்வதற்கென்று இந்திய அரசாங்கம் 1943-இல் ஒரு குழுவினை அமைத்தது. இந்திய அரசாங்கம் அக் குழுவிலிருந்து தொண்டாற்றுமாறு முதலியாரை வேண்டியது. முதலியார் மருத்துவக் கல்விக்குரிய உட்குழுவின் தலைவராக இருந்து தொண்டாற்றினார்; நாடு முழுவதும் சுற்றிச் சுகாதார நிலையையும் மருத்துவக் கல்வி நிலையையும் விசாரித்துத் தக்க யோசனைகளைக் கூறுவதற்கென்று அமைக்கப்பட்ட ஒரு குழுவின் தலைவராகவும் இருந்து தொண்டு செய்தார். கல்வித் துறை முன்னேற்றத்தில் யோசனை கூறுவதற்

கென்று இந்திய அரசாங்கம் வரவழைத்திருந்த மேனாட்டு அறிஞர்கள், முதலியார் தயாரித்த அறிக்கைகளைக் கூர்ந்து கவனித்து அவருடைய நுண்ணறிவினை வியந்து பாராட்டினர் எனின், முதலியார் மேற்கொண்ட உழைப்பினை என்னென்பது!

உலக சுகாதாரக் கழக மாநாடு 1948-இல் ஜெனிவாவில் கூடியது. இந்திய அரசாங்கம் மருத்துவ நிபுணர் குழுவினை அம்மாநாட்டிற் கலந்துகொள்ள அனுப்பியது. முதலியார் அக் குழுவின் துணைத்தலைவராய்ச் சென்று அரிய சொற்பொழிவாற்றிப் புகழ் பெற்றார்.

## 3. கல்வித்துறையில் தொண்டு

### சென்னைப் பல்கலைக் கழகச் 'செனேட்' சபை

இந்தியப் பல்கலைக் கழகங்களிற் கல்வித்துறையிற் கடினமானது என்று பெயர் பெற்றது சென்னைப் பல்கலைக் கழகம். அக்கழகத்தில் 1922 வரை அரசாங்கத்தினரால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினரே பெரும்பாலராயிருந்தனர். 1923-இல் பல்கலைக் கழகச் சட்டம் சென்னை அரசாங்கத்தினால் திருத்தப் பெற்ற பிறகு பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர் தொகை மிகுதியாயிற்று. முதலியார் 1923-இல் பல்கலைக் கழகச் 'செனேட்' சபைத் தேர்தலுக்கு நின்றார். அவரது மருத்துவப் புலமையையும், கல்வி ஆழத்தையும், செயலாற்றுந் திறனையும் நன்குணர்ந்த பட்டதாரிகள் அவரை மிகப்பல வாக்குகளால் உறுப்பினராய்த் தேர்ந்

தெடுத்தனர். முதலியார் அந்த ஆண்டு முதல் இன்று வரை சென்னைப் பல்கலைக் கழகத் தொடர்புடையவராய் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

## ‘சிண்டிகேட்’ சபை

பல்கலைக் கழகத்தில் செயலாற்றும் குழு ‘சிண்டிகேட்’ எனப்படும். செனேட் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் சிலர் அச்சபையில் இருந்து வேலை செய்வர். அவர்கள் திங்களுக்கு ஒரு முறை கூடிப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகளைச் செயலாற்றுவார்கள். அச்சபையில் உறுப்பினராயிருந்த சர். ஆர். வேங்கடரத்தினம் நாயுடு என்பவர் 1925-இல் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதனால் சிண்டிகேட் சபையில் அவர் இருந்த இடம் காலியாயிற்று. நமது முதலியார் அவ்விடத்திற்கு வரத் தேர்தலில் நின்றார். அவருடன் வேறு இருவரும் போட்டியிட்டனர். ஆயின் தேர்தலில் நமது முதலியாரே வெற்றி பெற்றுச் சிண்டிகேட் உறுப்பினரானார். அக்காலத்தில் சிண்டிகேட் சபையில் டாக்டர் மெஸ்டன், டாக்டர் காண்டெட்த, தந்தையார் பெட்ராம், கார்லி, சத்திய மூர்த்தி என்ற அறிஞர்கள் இருந்தனர். முதலியார் பல்கலைக் கழக ஆட்சித் தொடர்பான எல்லா நுணுக்கங்களையும் பழுதறப் படித்து ஆராய்ந்து வைத்திருந்தனர் ஆதலின், சிண்டிகேட் சபைக்கூட்டங்களில் சிறந்த முறையில் பங்கெடுத்துக் கொண்டார். அவர் பல்கலைக் கழகச் சபைகளான செனேட், அக்கெடமிக் கௌன்சில்,

சிண்டிகேட் என்னும் மூன்று சபைகளிலும் உறுப்பினராயிருந்து, பல உட்குழுக்கட்குத் தலைவராயும், உட்குழு உறுப்பினராயும் இருந்து சிறந்த தொண்டாற்றினார்; 'அவர் பேச்சில் வல்லுநர்; காரணங்களை எடுத்து விளக்கித் தம் பேச்சைக் கேட்பவர் உள்ளங்களிற் பதிய வைப்பதில் சமர்த்தர்; அவர் பேசும் ஒவ்வொரு செய்தியும் பல்கலைக் கழக நன்மையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும்' என்று சிண்டிகேட் முதலிய சபைகளின் உறுப்பினர்கள் பாராட்டிக் கூறுதல் வழக்கம். அவர் இத்தகைய பாராட்டுக்குரிய செயல்களாற்றான் தொடர்ந்து சிண்டிகேட் சபைக்கு உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். முதலியார் பல்கலைக் கழக வரவு செலவுக் கணக்குகளைப் பார்ப்பதிலும், பல்கலைக் கழகத்திற்குப் பணத்தைச் சேர்த்து வைப்பதிலும் சமர்த்தர் எனப் பெயர் பெற்றார்.

## தற்காலிகத் துணைவேந்தர் பதவி

பல்கலைக் கழகச் சபையினர் முதலியாருடைய நுண்ணறிவையும், பேச்சுத் திறனையும், ஆட்சித் திறனையும், கண்டு கண்டு மகிழ்ந்தவராதலின், துணைவேந்தர் பதவி சிறு பொழுது காலி ஏற்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவரையே துணைவேந்தரா யிருந்து செயலாற்றுமாறு தேர்ந்தெடுத்தனர். அவர் அங்ஙனம் 1936-ஆம் ஆண்டிலும், 1940-ஆம் ஆண்டிலும் தற்காலிகத் துணை வேந்தரா யிருந்து தொண்டாற்றினார்.

## பல்கலைக் கழகத் துணைவேந்தர்

முதலியார் 1923 முதல் இன்றளவும் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்; பட்டதாரிகளுடைய மிகப் பல வாக்குகளால் முதல் வரிசையில் முதல்வராக எப்பொழுதுமே தேர்ந்தெடுக்கப் பெற்று வந்துள்ளார். அவர் 1942-ஆம் ஆண்டில் **சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத்** தேர்ந்தெடுக்கப் பெற்ருர். அவர் அந்த ஆண்டு முதல் இன்றளவும் மூன்ருண்டுகட்கு ஒரு முறையாக மூன்று முறையும் ஒரு மனதாகத தேர்ந்தெடுக்கப் பெற்ற துணைவேந்தரா யிருந்து வருகின்றார். இதிலிருந்து பல்கலைக் கழக உறுப்பினர் அவரிடம் கொண்டுள்ள **அளவற்ற** நம்பிக்கையும் அவரது செயலாற்றும் திறனும் நன்கு விளங்குகின்றன அல்லவா? இங்ஙனம் மூன்று முறை — ஒன்பதாண்டுகள் — ஒருவர் பல்கலைக் கழகத்துணைவேந்தராய் இருந்தமை பெருமைப்படத் தக்கதாகும் அன்ருே?

## கல்வித் துறையில் செய்த திருப்பணிகள்

வடமொழி அறிந்தவர் மட்டுமே தமிழில் வித்துவான் பட்டம் பெறத்தக்க முறையில் பல்கலைக் கழகப் பழைய விதி இருந்து வந்தது. அவ்விதியினுல் வடமொழி அறியாத தமிழர் வித்துவான் தேர்வுக்குச் செல்ல முடியாமல் துன்புற்றனர். அவர்கள் சார்பில் காலஞ்சென்ற பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரும், டாக்டர் உ. வே. சாமிநாதையரும் நமது முதலியாரிடம் எடுத்துக் கூறினர். முதலியார் வடமொழி இன்றியே தமிழ் வித்துவான் பட்டம் ஏற்

படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்; அதனைப் பலத்த எதிர்ப்புக் கிடையே நிறைவேற்றினார்; 1930-ஆம் ஆண்டு முதல் **தனித்தமிழ் வித்துவான் தேர்வுகள்** நடைமுறைக்கு வந்தன. அந்த ஆண்டு தமிழன்னை மறுபிறவி எடுத்த ஆண்டு என்று கூறுதல் தவறாகாது. அந்த ஆண்டு முதல் இன்றளவும் தனித்தமிழ் வித்துவான்கள் தொகை ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கில் பெருகி வருகின்றது. இப் பெருக்கத்திற்கு அடிப்படை அமைத்த பெருமை நமது முதலியாரைச் சார்ந்ததாகும் என்பது மிகையாகாது.

வித்துவான் பட்டம் பெற்ற புலவர்கள் ஆங்கிலப் பட்டம் பெற்ற பிற ஆசிரியர்களைப் போலச் சம்பளத்திலும் தகுதியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் முதலியார் பி. ஒ. எல்., பி. ஓ. எல். (ஹானர்ஸ்) என்னும் பட்டத் தேர்வுகளை ஏற்படுத்தினார். முன்னரே ஆங்கிலம் படித்து, வித்துவான் பட்டம் பெற்ற புலவர்களுக்கு இத் தேர்வுகள் பேருதவி புரிவனவாயின அவர்கள் தொகையும் ஆண்டுதோறும் பெருகி வருகின்றது.

முதலியார் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆட்சிக் குழுவின் தலைவராயிருந்த பொழுது பி. ஓ. எல்., பி. ஒ. எல்., (ஹானர்ஸ்) வகுப்புக்களை அக் கல்லூரியில் ஏற்படுத்தினார். சென்னை மாகாணத்தில் அந்த ஒரு கல்லூரியிற்றான் இந்தத் தமிழ் வகுப்புக்கள் பத்தாண்டுகளாக இருந்து தமிழ்ப் பட்டதாரிகளை ஆண்டுதோறும் நாட்டுக்கு உதவி வருகின்றன.

இப் பட்டதாரிகள் தோற்றத்திற்கும் பெருக்கத்திற்கும் முதற் காரணர் முதலியார என்பதைத் தமிழர் மறத்தலாகாது.

சில ஆண்டுகட்கு முன்வரை, கல்லூரித் தமிழாசிரியர் சம்பளத்திற்கும், பிற ஆசிரியர்கள் சம்பளத்திற்கும் வேறுபாடு நிரம்பக் காணப்பட்டது. அவ் வேறுபாட்டினை நீக்கி அனைவருக்கும் ஒரு படித்தான சம்பள முறையை ஏற்படுத்திய பெருமை பல்கலைக் கழகத் துணைவேந்தராய் உள்ள முதலியாரையே சாரும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பெறும் இசைத் தேர்வுகளில் பெரும்பாலும் தெலுங்குப் பாடல்களே மிகுதியாகப் பாடப்பெற்று வந்தன. மாணவர் விரும்பினால் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களையே பாடலாம் என்று முதலியார் திட்டமிட்டார். அத்திட்டம் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

இப்பொழுது சென்னை மாகாணக் கல்லூரி போன்ற சில கல்லூரிகளில் தமிழில் பி. ஏ. (ஹானர்ஸ்) பட்டம் தருதற்கென்று வகுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எல். டி. (இப்பொழுது பி. டி. B. T.,) தேர்வுக்குத் தமிழ் கற்பிக்கும் முறையும் பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கென அமைந்துள்ள இவையனைத்தும் முதலியாரின் திருப்பணிகள் என்பது நினைவில் இருத்தத்தக்கது.

முதலியார் பி. டி. (B. T.) பட்டம் பெற்றவர்களுக்கென்று எம். இடி. (M. ED.) என்னும் புதிய பட்டத் தேர்வினை ஏற்படுத்தியுள்ளார். அவர் காலத்

தில் ஏற்படுத்தப் பெற்ற தேர்வுகளில் கால் நடை மருத்துவர்க்கென்று புதிய பட்டத் தேர்வும், தாதிமார்க்கென்று ஒரு தேர்வும், குடும்ப ஆட்சிக் கலைக்கென்று ஒரு தேர்வும், மருந்துகள் மட்டும் பற்றிய பட்டத் தேர்வும் (Degree in Pharmacy) குறிக்கத் தக்கவையாகும். அவரது தூண்டுதலால் மருத்துவத் துறையில் ஏறபடுத்தப்பட்ட பட்டத் தேர்வுகள் பலவாகும். அறுவை மருத்துவத்திலும், மருந்துத் துறை மருத்துவத்திலும் (Surgery of Medicine) தககார்க்கு உயர் பட்டங்களை (M. Sc., Ph. D., D. Sc.) வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாணிகத்துறை நாட்டில் வளம்பெற வேண்டுமாயின் சாத்திரீய முறையில் அதற்குரிய கல்வித் திட்டம் அமைக்கப் பெற வேண்டும். அங்ஙனம் அமைப்புண்டதே பி. காம் (B. com.) என்னும் பட்டத் தேர்வு. முதலியார் துணை வேந்தராயுள்ள இக்காலத்தில் அப்பட்டத் தேர்வுக்குரிய விதிகள் திருத்தியமைக்கப் பெற்றன ; பல கல்லூரிகளில் பி. காம் வகுப்புக்கள் ஏறபடுத்தப் பெற்றுள்ளன. அண்மையில் பி. காம் (ஹானர்ஸ்) பட்டத்தேர்வும் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பெருவணிகர் ஒருவரும், கொடைவள்ளலுமாகிய டாக்டர் அழகப்பச் செட்டியார் என்பவர் அளித்த பெரும் பொருளைச் செலவிட்டுச் சென்னையை அடுத்த கிண்டியில் கைத்தொழிற் கலைக்கல்லூரி ஒன்று பல்கலைக் கழக மேற்பார்வையில் நிறுவப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திற்கு ஊக்கமளித்தவர் நமது முதலியாரேயாவர். இன்று அக்

கல்லூரியைப் பல்கலைக் கழகமே ஏற்று நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. பத்திரிகைத் தொழிற் பயிற்சித் தேர்வு ஒன்றும் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

உயர் நிலைப்பள்ளிகள் மிகுதியாக ஆகக் கல்லூரியிற் படிக்க விரும்பும் மாணவர் தொகையும் மிகுதியாகி வருவதைக் கண்ட முதலியார் சிண்டிகேட்டில் உள்ள தம் தோழர்களுடன் கலந்துபேசி நாட்டில் பல புதிய கல்லூரிகளை ஏற்படுத்தப் பொதுமக்கட்கு வசதியளிக்க முன்வந்தனர். அதன் பயனாகக் காரைக்குடியில் அழகப்பச் செட்டியார் கல்லூரி, மதுரையில் தியாகராஜர் கல்லூரி, சிவகங்கை மகாராஜா கல்லூரி, விருதுநகர் செந்திற் குமாரநாடார் கல்லூரி, சென்னை ஸ்தெல்லாமேரி கல்லூரி முதலிய பல கல்லூரிகள் புதியனவாகத் தோற்றமெடுத்தன. இக் கல்லூரிகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று மகிழ்ச்சியோடு கல்வி கற்று வருகின்றனர். அவ்விளைஞர் அனைவரும் முதலியாரைத் துணை வேந்தராகப் பெற்ற பல்கலைக் கழகத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டவராவர்.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்கு உட்பட்ட எல்லாக் கல்லூரிகளையும் முதலியாரும் அவர் ஆட்சிக்குழுவினரும் பல முறை சென்று பார்வையிட்டு கல்லூரிகளின் வளர்ச்சிக்குரிய யோசனைகளைக் கூறி வருகின்றனர். வேண்டுபவர்—வேண்டாதவர் என்னும் வேறுபாடு காட்டாது முதலியாரும் அவர் ஆட்சிக்குழுவினரும் நடந்து வருதலால் எல்லாக்

கல்லூரிகளும் சிறந்த முறையில் நடை பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற பெரும் போருக்குப்பின் உயர்தரக் கல்வியில் தக்கமாறுதல்களைச் செய்வதற்காகச் சிண்டிகேட் சபை முதலியாரைத் தலைவராய்க் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. அக்குழு கல்லூரிக் கல்வியின் பல பகுதிகளையும் நன்கு ஆராய்ந்து போருக்குப்பின் எத்தகைய கல்வித்திட்டம் இருத்தல் வேண்டும் என்பதைத் தெளிவுற வகுத்து அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. அவ்வறிக்கை கல்வித்துறை அறிஞர் அனைவராலும் ஒப்புக்கொண்டு பாராட்டப் பட்டது.

முதலியார் கல்வித்துறைத் தொடர்பான நுணுக்கங்களை நன்கறிந்தவர் என்பதைச் சென்னை அரசாங்கத்தினரும் இந்திய அரசாங்கத்தினரும் நன்கறிந்துள்ளனர். ஆதலின் அவரை இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் அவ்வப்போது நடைபெறும் கல்வித் துறை மாநாடுகளிற் கலந்துகொள்ளுமாறு அனுப்பியுள்ளனர். 1929, 1932-இல் டெல்ஹியிலும், 1934-இல் பம்பாயிலும், 1943-இல் ஹைதராபாத்திலும் நடைபெற்ற இந்தியப் பல்கலைக்கழக மாநாடுகளுக்கு முதலியார் சென்னை மாகாணப் பிரதிநிதியாகச் சென்று பங்கு கொண்டார். 1948-49-ஆம் ஆண்டில் இந்தியப் பல்கலைக் கழகக் குழுவின் தலைவராயிருந்தார். இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அறிவியற்கலை தொழிற்கலை ஆராய்ச்சிக்கழகத்தின ஆட்சிக் குழுவிலும், கைத்தொழிற் கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிலும் முதலியார் ஓர் உறுப்பினராய்

இருந்து வருகின்றார். இந்திய அரசாங்கத்திற்குக் கல்வித்துறையில் அறிவுரை கூறும் கழகத்திலும் முதலியார் ஓர் உறுப்பினராயிருந்து வருகிறார்.

முதலியார் 1948-இல் பிரிட்டனுக்குச் சென்று, பிரிஸ்டல் நகரில் நடைபெற்ற பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மாநாட்டிற் கலந்து கொண்டார்; பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் பல்கலைக் கழகங்கள் ஆக்ஸ் போர்டில் கூட்டிய மாநாட்டிலும் பங்கு கொண்டார். அவர் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்ற முறையிலும், இந்தியப் பல்கலைக் கழகப் போர்டின் தலைவர் என்ற முறையிலும் மேற் சொல்லப்பட்ட இரண்டு மாநாடுகளிலும் பங்கு கொண்டார்.

## பிற துறைப் பணிகள்

டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார் சென்னைப் பச்சையப்பன கல்லூரி ஆட்சிக் குழுவில் நான் காண்டுகள் (1937-1941) உறுப்பினராக இருந்தார்; இரண்டாண்டுகள் தலைவராகவும் இருந்தார். அக் காலத்திற்முன் சேத்துப்பட்டில் மிகப் பரந்த வெளியில் பச்சையப்பன் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டப்பெற்றது. அதனைக் கட்டிக் குடிபுக முதலியாரும் அவர் குழுவினரும் மேற்கொண்ட முயற்சி போற்றத்தக்கது. முதலியார் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். 1943-ஆம் ஆண்டு முதல், சென்னை மாகாணச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் துணைத் தலைவராக இருந்து வருகின்றார். அவர் சென்னை மாகாணச் சாரணர் இயக்கத் தலைவராகவும் இருந்தவர்.

## 4. நற் பண்புகள்

### பல்லோர் பாராட்டு

டாக்டர் முதலியார் மக்களது பொது நன்மையையே கருத்தாகக்கொண்டு மருத்துவத் துறையிலும் கல்வித் துறையிலும் செய்துவந்த பலவகைப் பணிகளைப் பாராட்டிப் பல்கலைக் கழகங்களும் அரசாங்கமும் பலவகைப் பட்டங்களை அளித்துச் சிறப்பித்தன. அரசாங்கத்தினர் அவருக்கு இராவ்பகதூர், திவான்பஹதூர், சர் என்னும் பட்டங்களை அளித்து மகிழ்ந்தனர். இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவ டாக்டர் (LL. D.) பட்டம் அளித்து மகிழ்ந்தது; ஆந்திரப் பல்கலைக் கழகம் கௌரவ டி. எஸ்ஸி. (D. Sc.) பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது; ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் டி. ஸி. எல். (D. C. L.) என்னும் பட்டத்தை வழங்கிப் பெருமைப் படுத்தியது. 1930-இல் முதலியார் முன் சொன்னவாறு பிள்ளைப்பேற்று மருத்துவக் கல்லூரியின் அடிப்படைச் சிறப்பு உறுப்பினர் (Fellow of the Royal College of Obstetricians Gynecologists F. R. C. O. G.) என்ற சிறப்பினையும் பெற்றனர்; 1941-இல் அமெரிக்க அறுவை மருத்துவர் கல்லூரிச் சிறப்பு உறுப்பினராகவும் (Fellow of the American College of Surgeons) தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

### நேர்மையாளர்

டாக்டர் முதலியார் சாதி-மத-வேறுபாடுகளைக் கடுகளவும் கவனியாது தகுதிக்கு முதலிடம் தரும் கண்ணியமுடையவர்; ஆதலின் அவரது ஆட்சியில்

பல்கலைக் கழகம் பல துறைகளிலும் திறமையாக வேலை செய்து வருகின்றது நாடறிந்த செய்தி. அவரது ஆட்சியில் சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையம் பெரிதும் விரிவாக்கப்பட்டுள்ளது. முதலியார் நாடோறும் பல்கலைக் கழகம் சென்று தம் வேலைகளை மிக்க ஊக்கத்துடன் கவனிக்கின்றார்.

## பொதுநலத் தொண்டர்

அவருக்கு இப்பொழுது அறுபத்துநான்கு வயதாகின்றது. இந்த வயதில் எத்துணையோ ஆடவர் ஓய்வெடுத்துக்கொண்டு உல்லாசமாகக் காலம் கழிப்பதை நாமறிவோம் அல்லவா? முதலியார் அவர்களைப்போல ஓய்வெடுத்துக் கொள்ளலாம். ஆயின், அது தந்நலத்தின்பாற்பட்டது என்பது அவரது கருத்து. 'நம்மால் இயலும் வரை நமது நாட்டுக்கும், மக்கட்கும் தொண்டு புரிதலே நமது கடமை' என்னும் கொள்கையுடையவர் ஆதலின், அப்பெரியார் இந்த வயதிலும் பல திருப்பணிகளில் ஈடுபட்டுள்ளார். சென்ற ஜனவரித் திங்களில் மூன்று வாரம் மேனாடுகட்குச் சென்று உலக சுகாதாரக் கழக நடவடிக்கைகளிற் கலந்து கொண்டார்; அடிக்கடி டெல்ஹி சென்று அங்குக் கூடும் கல்வி, மருத்துவம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்களிற் கலந்து கொள்வார். சென்னையில் இருக்கும் பொழுது பல்கலைக் கழக வேலைகளிலும் சட்டசபை வேலைகளிலும் ஈடுபடுவார்.

அவர் சென்னை மேல்சட்டசபை உறுப்பினர். அச்சபையில் அவர் ஆற்றிய பேருரைகள் பல. அவர் எந்த அரசியல் கட்சியையும் சாராதவர். ஆதலின

எவர்க்கும் அஞ்சாமல் தமக்கு நேரியவை என்று பட்டவற்றைச் சிறிதும் மறைவின்றி அழுத்தந் திருத்தமாகப் பேசும் ஆற்றலுடையவர்; "அரசாங்கம் கட்சிச் சார்பிலிருந்து விலகித் தக்கவர்க்குத் தக்க இடம் அளிக்க முன் வந்தாற்றான், தகுதிக்கு மதிப்பீந்த பெருமை அவர்களைச் சாரும்" என்று சென்ற 1949-இல் மேல் சபைக்கூட்டத்தில் பேசினார். அனைவரும் அப்பேச்சினைப் பாராட்டினர்.

## ஒழுக்க சீலர்

டாக்டர் முதலியார் அடக்கம், மிகைபடப் பேசாமை, பொறுமை, பிறர்க்குத் தீமை செய்யாமை, தகுதிக்கே மதிப்புத் தருதல், எல்லோர்க்கும் நலம் புரியவேண்டும் என்னும் விருப்பம், கடவுள் பக்தி முதலிய நற்பண்புகள் சிறக்கப் பெற்றவராவர். அவர் வைகறையில் நீராடித் திருமண் இட்டு, நல்லுடை உடுத்துத் தமக்கே சிறப்புடைய சரிகைத் தலைப் பாகை அணிந்து தம்மருத்துவக் கூடத்தில் அமர்வர். அரசர் முதல் ஆண்டி யீருகவுள்ள எல்லா வாழ்க் கைப் படிகளிலும் வாழும் மக்கள் பலர் அவரிடம் வந்து மருத்துவம் செய்து கொள்வர். அவரது பண் பட்ட யோசனையைக் கேட்டு அதன்படி நடப்பவர் பலர். அவருடைய அகன்ற விழிகளும், எதிரில் பேசுவோர் உள்ளத்தை ஊடுருவிக்காணும் பார்வையும் காணத் தக்க காட்சிப் பொருள்களாம்.

## தாய் மொழிப்பற்று

டாக்டர் முதலியார் ஆந்திர நாட்டிற் பிறந்து வளர்ந்து படித்தவராதலின் தமிழ் நூல்களைப் படிக்கும் வாய்ப்பற்றவரானார். மேலும் அக்காலம் தாய்

மொழி போற்றப்படாத காலம். தமிழில் பிறரைப் போல அவைகளில் பேசத்தக்க பயிற்சி தமக்கு இல்லையே என்று முதலியார் கவலைப்படுதல் உண்டு. அவர் தாய்மொழிப் பற்றின் மிகுதியால் தாய் மொழியில் வல்ல மறைமலையடிகள், டாக்டர். உ. வெ. சாமிநாதையர், கா. நமச்சிவாய முதலியார், பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார், திரு. வி. க., ரா. பி. சேதுப்பிள்ளை, டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய பெரும் புலவர்களிடம் மிக்க அன்பு கொண்டவர்; பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தொடர்பான திருத்தங்களையும், நலங்களையும் மேற்சொன்ன அறிஞர்களோடு இயன்றவரைக் கலந்து வருபவர். நமது பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தேர்வுகள் ஓரளவு உயர்ந்து காணப்படுதற்கு முதலியார் முயற்சியே காரணமாகுமென்பது நினைவில் இருத்தத் தக்கது.

இங்ஙனம் பல நல்லியல்புகளும், கூர்த்த அறிவும், பேச்சுத்திறனும் ஒருங்கே பெற்றுள்ள டாக்டர் முதலியார் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழகத்துக்கும் இந்திய நாட்டிற்கும், உலகத்திற்கும் தம் அறிவாற்றல்களால் நலன் விளைக்குமாறு செய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுவோமாக!



ஜி. டி. நாயுடு

# 3. தொழில் அறிஞர்

# ஜி. டி. நாயுடு

(தோற்றம் கி. பி. 1893)

## 1. இளமைப் பருவம்

### தோற்றுவாய்

இளமையில் துடுக்குத்தனம் மிகுந்து பள்ளிக் கல்வியில் கருத்தூன்ருது, கட்டுக்கடங்காக் கன்று கள் போலத் திரிந்தவர் பலர், உற்ற வயதில் உழைப் பாலும், நுண்ணறிவாலும் உயர்நிலையை அடை தலை உலக வரலாறு கண்டிருக்கின்றது. பள்ளியிற் பாங்குடன் படியாது, பெற்ருேரும் மற்ருேரும் வெறுக்குமாறு துடுக்குத்தனத்தில் தலை சிறந்து விளங்கி, "இனி இவன் ஒன்றுக்கும் உதவான்" என்று பெற்ருேரால் உறுதிப்படுத்தப்பட்டு, இந்தியா வுக்குக் கணக்கப் பிள்ளையாக அனுப்பப்பட்ட இராபர்ட் கிளேவே, இந்தியாவில் ஆங்கில ஆட்சியை அமைக்கக் காரணராயிருந்தார் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

இங்ஙனம் தொடக்கத்தில் பல்லோர் வெறுப்புக்கும் ஆளாயிருந்து பின்னர் நாட்டார் போற்றும் பேரறிஞராக விளக்கமுற்றுத் தம் பெயர் நிறுத்திய பெரியார் பலராவர். அப் பெரியார்கள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுவார். அவர்களால் அவர்கள் பிறந்த நாடு பெருமைபெறும்; அவர்களது பொது நலத் தொண்டினுல் உலகம் நலனுறும். அவ்வகைப்

பெரியாருள் நமது தமிழ்நாட்டுத் தொழில் அறிஞரா யுள்ள திருவாளர் ஜி. துரைசாமி நாயுடு (ஜி. டி. நாயுடு) ஒருவராவர். அவரது வாழ்க்கை வரலாறு வியப் புறும் தன்மை வாய்ந்தது; தமிழ் இளைஞர்க்கு உள் ளக் கிளர்ச்சி ஊட்டவல்லது; அவர் தம் வாழ்வினை நாட்டுத் தொண்டில் ஈடுபடுத்தவல்லது.

## பிறப்பு

கோவை மாவட்டத்தில் கலங்கல் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் கோபால்சாமி நாயுடு என்பவர் ஒரு சிறு உழவராய் இருந்து வந்தார். அவருக்கு ஒரு வீடும் தோட்டமும் சிறிதளவு புன்செய் நிலமும் உரியவா யிருந்தன. புன்செய் நிலத்தில் புகையிலை யும் பருத்தியும் பயிராகி வந்தன. அவர் சிறிய அளவில் பஞ்சு வாணிகம் செய்துவந்தார். அவரது இல்லக் கிழத்தியார் கணவர்க்கேற்ற காரிகையராய் இல்லறத்தை இனிது நடத்திவந்தார். கருத்து ஒரு மித்து வாழ்ந்துவந்த அக் காதலர்க்குப் பிறந்தவரே ஜி. டி. நாயுடு என வழங்கும் துரைசாமி நாயுடு என் பவர்.

## இலட்சுமி நாயக்கன் பாளையம்

ஜி. டி. நாயுடுவைப் பெற்ற ஓராண்டுக்குப் பிறகு அவரது தாயார் காலமானார். அதனால் தந்தையார் இவரை இலட்சுமி நாயக்கன் பாளையத்தில் இருந்த தம் மைத்துனரிடம் ஒப்படைத்தார். இலட்சுமி நாயக் கன் பாளையம் என்பது கோவைக்குத் தென்கிழக்கில் பதினான்கு கல் தொலைவில் இருக்கின்ற சிற்றூ ராகும். அது பாலக்காட்டுக் கணவாய்க்கு நேர்

எதிரில் ஏறத்தாழ முப்பது கல் தொலைவில் இருக்கின்றது. அதனால் அவ்வூரில் காற்று ஓயாது வீசிக்கொண்டிருக்கும். கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட குடிசைகளும், ஓட்டு வீடுகளுமே அக்கிராமத்தார் வாழிடங்கள் ஆகும்.

## பள்ளிப் படிப்பு

மாமன் வீட்டில் செல்வமாய் வளர்க்கப்பட்ட ஜி. டி. நாயுடு ஐந்தாம் ஆண்டின் தொடக்கத்தில் திண்ணைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். திண்ணைப் பள்ளியில் மணலைப் பரப்பி அதன் மீது எழுத்துக்களை எழுதிப் பழகுதல் அக்கால வழக்கம். ஜி. டி. நாயுடு எழுத்துக்களைச் செவ்வனே கற்றுக்கொண்டார். எனினும் புத்தகப் படிப்பில் அவருக்கு விருப்பம் செல்லவில்லை. மனப்பாடம் செய்து பாட்டுங்களை ஒப்பிக்கவும் முடியவில்லை. அதனால் அவர் பலமுறை ஆசிரியர் சீற்றத்திற்கு ஆளானார். அவருக்குப் புத்தகப் படிப்பு எட்டிக்காயாய் இருந்தது. பாடங்களை மனப்பாடம் செய்து நாடோறும் ஒப்பிக்கும்படி சொன்ன ஆசிரியர் எமனாய்க் காணப்பட்டார். துரைசாமிக்குப் பள்ளிப் படிப்பில் வெறுப்பு உண்டாயிற்று. அவர் ஒரு நாள் ஆசிரியர் மீது கடுங்கோபம் கொண்டார். அக் கோபத்தில் தம்மை மறந்தவராய் மண்ணை வாரி ஆசிரியர் கண்களில் வீசினார். இந்த நிகழ்ச்சியுடன் ஜி. டி. நாயுடுவின் பள்ளி வாழ்க்கை முற்றுப் பெற்றது; இலட்சுமி நாயக்கன் பாளைய வாழ்க்கையும் முடிவுற்றது. அவர் தமது எட்டாம் வயதில் தந்தையாரிடமே சேர்க்கப்பட்டார்.

**தோட்ட வாழ்க்கை**

ஆசிரியர் கண்களில் மண்ணைவாரிப் போட்டுப் பள்ளிப் படிப்பை விட்ட ஜி. டி. நாயுடு 'அடங்காப் பிள்ளை' என்பதை அறிந்த தந்தையார், அவரைத் தம் தோட்ட வீட்டில் இருக்குமாறு செய்தார். அத் தோட்டம் கலங்கல் சிற்றூர்க்குச் சிறிது சேய்மையில் இருந்தது. ஜி. டி. நாயுடுவுக்கு வீட்டிலிருந்து சாப்பாடு சென்றது. அவர் தோட்டத்தைக் காவல் காப்பதும் மண் வெட்டுவதும் மாடு மேய்ப்பதுமாயிருந்தார். அவருக்குத் தோட்ட வேலையாள் ஒருவன் காவலிருந்தான். இயல்பாகவே துடுக்குத்தனம் மிகுந்த அவர் தோட்ட வாழ்க்கையில் கேட்பாரற்றுக் கட்டவிழ்த்து விடப்பட்ட கன்று போலானார். அதனால் அவர் தம் விருப்பம்போலக் குறும்புத்தனமான பல வேலைகளைச் செய்யலானார். ஆயினும் அக் காலத்தில் அவரிடம் நற்குணம் ஒன்று சிறந்து காணப்பட்டது. அஃதாவது தமது கைக்கு எட்டிய சிறு நூல்களைத் தாமாகவே படித்து வந்தது என்பது. அச் சீரிய குணம் அவரைப் பல நூல்களைப் படிக்கச் செய்தது; பள்ளிப் பாட நூல்களையும் பிற தமிழ் நூல்களையும் கருத்தூன்றிப் படித்துணரச் செய்தது.

**வைக்கோல் வண்டி**

தீபாவளிப் பண்டிகை இந்தியா முழுவதும் ஆண்டு தோறும் கொண்டாடப்படுவது. கலங்கல் கிராமத்தில் ஓராண்டில் தீபாவளிக்கென்று வீடுகள் தூய்மை செய்யப்பட்டன; புதிய ஆடைகள் வாங்கப்பட்டன; வெளியூரில் மணம் செய்து கொடுக்கப்

பட்ட புதிய மணப்பெண்களும் அவர் தம் கண வரும் அழைத்து வரப்பட்டனர். தீபாவளிக்கு முன் ஞள் தந்தையார் கட்டளேப்படி காவலன் ஒருவனுல் ஜி. டி. நாயுடு வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார். வழியில் ஒரு வைக்கோல் வண்டி ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஜி. டி. நாயுடு அந்த வண்டியில் இருந்த வைக்கோலுக்குத் தீ வைத்து விட்டார். சிறிது நேரத்தில் வண்டி உட்பட எல் லாம் எரிந்து சாம்பராயின. தீபாவளிக்கு முதல் நாளிலே வண்டியும் வைக்கோலும் எரிந்த தீபா வளிக் காட்சியை ஊரார் கண்டனர். தந்தையார் உள்ளம் தாங்கொணுத் துயரை அடைந்தது. 'தாயற்ற பிள்ளே' எனபதை எண்ணியபொழுது அவரது உள்ளம் இளகியது. ஆயினும் அவர் ஜி. டி நாயுடுவை வீட்டிற்கு வரவிடாது, தோட்டத் திற்கே செல்லுமாறு கட்டளே யிட்டார். பாவம்! ஜி. டி. நாயுடு வீட்டைப் பார்க்க முடியாது திரும் பிஞர். அது முதல் ஏறத்தாழ இரண்டாண்டுகள் வரை அவர் வீட்டுக்கு அழைக்கப்படவில்லே; பின்னர் இரண்டொரு சமயங்களில் வீட்டிற்கு அழைக்கப்பட் டனர். அவர் இங்ஙனம் தந்தையார் கட்டுக் காவ லுக்கு அடங்கி ஒன்பதாண்டுகளேக் கழித்தார். அந்த ஒன்பதாண்டுகளிலும் அவர் கிராம ஆட்சி, பயிர்த் தொழில், வாணிகம், கைத்தொழில் முதலிய கிராமச் செய்திகளேப் பற்றிய விவரங்களே நேரிற் கண்டும் பெரியோர் வாயிலாகக் கேட்டும்தெளிவாயுணர்ந்தார்.

## எருமை மீது மணியக்காரர்

ஜி. டி. நாயுடு பதினெட்டு வயதடைந்த பின் தந்தையாருடன் தொழிலில் ஈடுபட்டார். எனினும்

குறும்புத்தனம் அந்த வயதிலும் அவரை விடவில்லை. அவர் குறும்புத்தனத்திற் சிறந்திருந்தாற் போலவே, நுண்ணறிவிலும், திறம்பட வாதிப்பதிலும், பிற நற்பண்புகளிலும் சிறந்திருந்தார். ஏழைகளிடம் அவருக்கு மிகுந்த அன்பு உண்டு. இப் பண்புகளால் பலர் அவரை விரும்பினர். கலங்கல் சிற்றூர் மணியக்காரர், துரைசாமி மீது மிக்க மதிப்புடையவர். அவர் சில நாட்கள் வெளியூர் செல்ல வேண்டியவரானார். அதனால் அவர் தாம் வருமளவும் மணியக்காரர் வேலையை ஜி. டி. நாயுடு பார்த்து வருவார் என்று மேலதிகாரிக்கு எழுதிவிட்டுச் சென்றார். ஜி. டி. நாயுடு மணியக்காரர் வேலையைக் கருத்துடன் கவனித்து வந்தார்.

ஒரு நாள் காலை தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சேவகர் இருவர் ஆக நால்வரும் கலங்கல் சிற்றூரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஜி. டி. நாயுடு தம் எருமையைத் தோட்டத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்து பால் கறந்து, பிறகு வழக்கம் போல அதன் மீது ஏறி அமர்ந்து தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்தார். இந்த அரிய காட்சியைத் தாசில்தார் முதலியோர் வழியிற் கண்டனர். அவர்கள் கலங்கல் சிற்றூரை அடைந்து மணியக்காரரைக் காண விரும்பினர். சிற்றூரார் அவர்களைப் பழைய மணியக்காரர் வீட்டுத் திண்ணை மீது அமரச் செய்து, புதிய மணியக்காரராகிய நம் ஜி. டி. நாயுடுவைத் தோட்டத்திலிருந்து அழைத்து வந்தனர். தாசில்தாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும் அவர் தம் ஐயம் தீர ஜி. டி. நாயுடுவை நோக்கி,

"சற்று முன் சாலையில் எருமைச் சவாரி செய்தது......." என்றார். உடனே ஜி. டி. நாயுடு பெருமிதத்துடன் அவரைப் பார்த்து, "நான்தான்" என்றார். அப்பொழுது தாசில்தார் என்ன எண்ணியிருப்பார் ?

## வாக்குத் தவறா வாய்மையர்

ஜி. டி. நாயுடு ஒரு நாள் தம் நண்பன் ஒருவனைத் துரத்திச் சென்றார்; துரத்திச் சென்ற வேகத்தில் அவனது வீட்டில் பலகைகள் இன்றித் தாறுமாறாய்த் தொங்கிக்கொண்டிருந்த இருப்பு வளையங்களில் தாக்குண்டார்; நண்பனைப் பிடிக்கச் சங்கிலிகளைச் சுற்றிச் சுற்றி ஓடினதால் சங்கிலிச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டார்; அச் சிக்கலிலிருந்து தாமே விடுதலை பெற முடியாது விழித்தார்; தம்மை மீட்கும்படி தம் நண்பனை வேண்டினார். அப்பொழுது நண்பன், "நீ இரண்டாண்டுவரை இவ்வாறு என்னைத் துரத்தி வருவதில்லை என்று உறுதி கூறு. நான் அக் காலம் வரை உன்னைத் தாக்கினால் நீ பொறுத்தல் வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகட்கும் நீ உடன்படில் உன்னைச் சிக்கலிலிருந்து விடுதலை செய்வேன்," என்றான். பாவம்! ஜி. டி. நாயுடு என்ன செய்வார்! அவர் அந்த நிபந்தனையைத் தம் வீர உணர்ச்சி குன்றாது களிப்புடன் ஒப்புக்கொண்டார்; விடுதலை பெற்றார்.

அவர் இரண்டு ஆண்டுகள் தாம் வாக்களித்தவாறே நண்பனிடம் நடந்துகொண்டார். அவரது அப்பெருந் தன்மையைக் கண்ட ஊரார் வியப்புற்ற

னர். இரண்டு ஆண்டுகள் கழித்தன. நண்பன் நமது ஜி. டி. நாயுடுவுக்கு அடங்கினான்; புலிக்கு எதிர்ப்பட்ட பூனையானான்.

## 2. தொழில் முயற்சி

### சிறிய முறையில் வாணிகம்

ஜி. டி. நாயுடு தீராத விளையாட்டுப்பிள்ளையாகச் சிற்றூரில் இருந்துகொண்டே தம் நுண்ணறிவின் துணையைக்கொண்டு ஆசிரியர் இன்றியே ஓரளவு ஆங்கிலமும் கற்றுக்கொண்டது பாராட்டற்குரியது. சிற்றூர்ப் பெரியவர்களிடம் இருந்த மருத்துவ நூல்களையும் தாயுமானவர் பாடல் பட்டினத்தார் பாடல் போன்ற நூல்களையும் படித்து ஓரளவு பொருள் உணர்ந்திருந்தார்.

அமெரிக்காவில் உள்ள பார்க் டேவிஸ் கம்பனியார் தயாரிக்கின்ற 'பெயின்கில்லர்' (வலிநிவாரணி) மருந்தின் காலிப்புட்டி ஒன்று ஒருநாள் ஜி. டி. நாயுடுவுக்கு அகப்பட்டது. அவர் அதன்மீதுள்ள எழுத்துக்களைப் படித்து விவரம் அறிந்தார்; எனினும் அக் கம்பெனிக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதும் வல்லமை தமக்கு இல்லாமையால் தம் ஊருக்கு வந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டரை நண்பராய்க் கொண்டு அமெரிக்காவிற்குக் கடிதம் எழுதச் செய்தார். சில நாட்களில் மருந்து அவர் கைக்கு வந்து சேர்ந்தது. அந்த மருந்து ஓரளவு வெற்றியைத் தரவே, பலரும் அதனைத் தருவித்துத் தரும்படி ஜி. டி. நாயுடுவை வேண்டினர். ஜி. டி. நாயுடு ஹார்மோனியம், கடிகாரம், வலி நிவாரணி மருந்து முதலிய சில பொருள்

களை வரவழைத்துச் சிறுவாணிகம் நடத்தலானார்; அத்துறையில் ஓரளவு ஊதியம் கிடைத்தது. "பையன் தொழில் துறையில் இறங்கியது நல்லதே!" என்று தந்தையார் பாராட்டினார்.

## பொது நலத் தொண்டு

ஜி. டி. நாயுடு ஏழைகள் பால் மிகவும் இரக்கம் கொண்டவர். அவர் ஏழைக் குடியானவர் குறைகளைக் கவனித்து நீக்கப் பாடுபட்டார்; அவர்கட்குப் போதிய கூலிதருமாறு கிராமத்தாரை வற்புறுத்தினார்; கிராமத்தில் காணப்பட்ட தவறான ஒழுக்கங்களை வன்மையாய்க் கண்டித்தார். இவற்றாலும், வாக்குத் தவறாமை உண்மையுடைமை முதலிய நற்பண்புகளாலும், அவர் சிற்றூரார் மதிப்புக்கு உரியவரானார். அவரையொத்த இளைஞர்கள் அவர் சொற்படி நடக்கலாயினர். நாளடைவில் அவர் அவ்விளைஞர்க்குத் தலைவராய் விளங்கினார். இவ்வாறு அவர் இளைஞர் படைத் தலைவரானதும் ஊரில் அவருக்குச் செல்வாக்கு மிகுதிப்பட்டது.

அவர் தோட்ட வாழ்க்கையில் தமிழ் இலக்கண நூல்களை நன்கு கற்றார். கவிகள் பாடுவதிலும் பயிற்சி பெற்றிருந்தார். மருத்துவ நூல்களையும் பலமுறை படித்து ஓரளவு மருத்துவம் செய்யவும் அறிந்திருந்தார். சோதிட நூல்களைப் படித்து அதிலும் திறன் பெற்றிருந்தார். இவ்விரு நிலைகளையும் கவனித்த சிற்றூர் மக்கள் அவரை 'இலக்கண துரைசாமி' என்றும் 'வைத்திய துரைசாமி' என்றும் "சோதிட வல்லுநர்" என்றும் பாராட்டி அழைப்பாராயினர்.

## திருமணம்

துரைசாமி ஏறத்தாழ இருபது வயதினராக விளங்கியபோது அவருக்குத் திருமணம் நடை பெற்றது. **திருவாட்டியார் செல்லம்மாள்** என்பவர் அவர் வாழ்க்கையின் விளக்காஞர். அவரது திருமணம் எவ்வித ஆடம்பரச் செலவும் இன்றிச் சிக்கனமாக நடைபெற்றது. அஃது ஊரார்க்கு ஒரு படிப்பினை யாயிற்று.

## மோட்டார் சைக்கிள்

ஜி. டி. நாயுடுவுக்கு வயது இருபது ஆகியும் அவர் வெளியூர்களை அறியாதவராயிருந்தார். அவர் அதுவரை அறிந்த ஊர்கள் இரண்டே; அவை கலங்கல், இலட்சுமி நாயக்கன் பாளையம் என்பன. அண்மையில் உள்ள கோவை நகரத்தை அவர் அறியார்; மோட்டார் சைக்கிள், மோட்டார் வண்டி, இரயில் வண்டி முதலிய புதிய பிரயாண சாதனங் களை அறியார்; வெள்ளையரைப் பார்த்தறியார்.

அங்கிலேயில் நிலமளந்து வரிமதிப்பிடும் உயர் அலுவலர் ஒருவர் கலங்கல் சிற்றூர்க்கு வந்தார். அவர் ஆங்கிலேயர். அவர் மோட்டார் சைக்கிளில் வந்தார். அவரைக்கண்ட ஊரார் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களுள் முதல் அணியில் முதலில் நின்றவர் நமது ஜி. டி. நாயுடுவே ஆவர். அவர் வெள்ளையரைப் பார்த்து வியப்புற்ருர். அவரது மோட்டார் சைக்கிளைப்பார்த்து மிக்க வியப்புற்ருர். "இவன் ஒரு குஷ்டரோகி போலும்! இவன் மாட்டைப் பூட்டாமல் இந்த வண்டிமீது வந்தது வியப்பாக

வன்றே இருக்கிறது!" என்று தமக்குள் எண்ணினார். அவ்வமயம் அந்த வெள்ளையர் வண்டி பழுதாகிவிட்டது. "சிறிது துணியும் மண்ணெண்ணெயும் வேண்டும்," என்றார். உடனே ஜி. டி. நாயுடு வீட்டுக்கு ஓடி அவ்வெள்ளையர் வேண்டின இரண்டையும் கொணர்ந்து கொடுத்தார். வெள்ளையர் எதனையோ கழற்றித்துடைத்து மண்ணெண்ணெய் தடவிச் செப்பனிட்டார். வண்டி ஓடத் தொடங்கியது. வெள்ளையர் அவ்வண்டியில் அமர்ந்து மறைந்தார்.

ஜி. டி. நாயுடுவின் உள்ளத்தில் பல எண்ணங்கள் தோன்றின. அந்த மோட்டார் சைக்கிளை அந்த வெள்ளையரிடம் எப்படியேனும் விலைக்கு வாங்கி, அதன் பகுதிகளைத் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்து, அவ்வண்டி எவ்வாறு ஓடுகிறது என்பதைக் கண்டறிய வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்; அவ் வெள்ளையர் கோவையில் இருப்பதை அறிந்தார். தாம் கோவை சென்று ஏதேனும் ஒரு தொழில் செய்து, பொருள் சேர்த்து, அந்த நூதன இயந்திரத்தை வாங்குவது என்று உறுதி கொண்டார். அவர் அன்று கொண்ட மனவுறுதியை எங்ஙனம் நிறைவேற்றினார் என்பதே சுவை பயக்கும் செய்தியாகும்.

### கோவையில் ஜி. டி. நாயுடு.

வெள்ளையர் கலங்கல் சிற்றூர்க்கு வந்து சென்ற சில மாதங்கட்குள் ஜி. டி. நாயுடு தாம் கருதியதை முடிக்க வேண்டும் என்னும் மனவுறுதியுடன் கோவையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். அவர்

கோவையில் புகைவண்டியைக் கண்டதும் வியப்புற்றுவிட்டார்; "மாடு இன்றி இப்படி ஒரு வண்டித் தொடர் ஓடுதல் வியப்புக் குரியதே!" என்று தமக்குள் கூறிக்கொண்டார். அவர் கையில் இருந்த பணம் செலவழியும் வரை நகரத்தை நன்றாய்ச் சுற்றிப் பார்த்தார்; இறுதியில் மாதம் மூன்று ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலையில் பணியாளராய் அமர்ந்தார். அங்ஙனம் அமர்ந்த அவரது நோக்கம் என்ன? அது "பணம் சேர்த்து வெள்ளையரது மோட்டார் சைக்கிளை வாங்கவேண்டும்" என்பதேயாகும்.

## விடாப்பிடி

சில ஆண்டுகள் கழிந்தன. அவர் சிக்கனமாய்ச் சேர்த்த பணமும், ஊரிலிருந்து வந்த பணமும் சேர்ந்து நானூறு ரூபாய் ஆனதும், அந்த வெள்ளையர் முகவரியைக் கேட்டறிந்து அவரிடம் சென்றார்; மோட்டார் சைக்கிளைத் தாம் கண்டது முதல் தாம் கொண்ட விரதத்தை உரைத்தார். வெள்ளையர் அவரை வியப்புடன் பார்த்தார்; தாம் புதியதாக ஒன்றை வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் தம்மிடம் இருந்ததை ஜி. டி. நாயுடுவுக்கு விற்று விட்டார். ஆ! ஜி. டி. நாயுடு அன்று அடைந்த மகிழ்ச்சியை யாரே அளவிட்டு உரைத்தல் கூடும்!

## இயந்திர வல்லுநர்

ஜி. டி. நாயுடு இவ்வளவு அரும்பாடுபட்டு மோட்டார் சைக்கிளை ஏன் வாங்கினார்? அதன் மீது ஏறிச் சவாரி செய்யவேண்டும் என்னும் விருப்பத்

தின் மீதா வாங்கினர்? இல்லை. அவர் அதனைத் தம் விரும்பம் போலப் பிரித்துப் பார்த்துப் பூட்டிச் சரி செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்தில் வாங்கினர். அவர் அதனை அவ்வாறே பலமுறை கழற்றினர்; அதன் ஒவ்வொரு பகுதியையும் நன்கு சோதித்தார்; பிறகு அவற்றைப் பூட்டினர்; வண்டியை ஓட்டிப் பார்த்தார். அவர் இவ்வாறு பலமுறை அந்த வண்டியைப் பிரித்துப் பூட்டி ஓட்டினர். இங்ஙனம் ஜி. டி. நாயுடு தாம் கருதியதில் உறுதியாய் நின்று இறுதியில் வெற்றி பெற்றார். ஒரு சிறந்த இயந்திர மேதையாகத்தக்க பயிற்சியும் தமக்குத் தாமே பெற்றார்.

## பஞ்சு வாணிகம்.

இங்ஙனம் தம் விருப்பம் நிறைவேறியபின் ஜி. டி. நாயுடு தம் நண்பர் சிலரிடம் சில நூறு ரூபாய்களைக் கடனாய்ப் பெற்றுக் கோவையில் பஞ்சு வாணிகம் நடத்தலானார். அத்தொழில் சூதாட்டத்தை ஒத்தது; வந்தால் மிகுந்த ஊதியம் வரும்; இன்றேல் முதலை உண்டுவிட்டுப் போய்விடும். பாவம்! அவ்வாணிகம் ஏழை ஜி. டி. நாயுடு கடன் வாங்கிய முதலையே உண்டு விட்டது. எனினும், கலங்கல் சிற்றூரிற் பிறந்த துரைசாமி கலங்கவில்லை. அரைக்க அரைக்க மண மிகும் சந்தனக்கட்டைபோலச் சோதனை மிகுதிப் படப்பட அவரது உள்ளம் உரனுடையதாயிற்று.

## ஆலையில் வேலை

கோவையை அடுத்த ஒண்டிப் புதூர் பஞ்சாலைகள் நிறைந்த இடமாகும். அவற்றில் பருத்தியி

ருந்து கொட்டையைப் பிரிக்கும் ஆலைகளும் இருந்தன. அவற்றில் ஒன்றிற் சேர்ந்து வேலைசெய்ய ஜி. டி. நாயுடு முடிவு செய்தார். 'அந்த ஆலை முதல்வர் கடுஞ்சினத்தர். அவரிடம் வேலை பார்த்தல் எளிதன்று' என்று ஜி. டி. நாயுடுவின் நண்பர் சிலர் கூறினர். ஜி. டி. நாயுடு "அவரிடமே வேலைபார்க்க விரும்புகிறேன்" என்று கூறி, அந்த ஆலையில் வேலையில் அமர்ந்தார். ஜி. டி. நாயுடுவின் தூய ஒழுக்கத்தையும், கண்டிப்பான பேச்சையும், கவனித்து மகிழ்ந்த முதல்வர் அவரைப் பஞ்சு நிறுத்துத் தரும் பகுதியின் தலைவராய் அமர்த்தினர். ஜி. டி. நாயுடு முதல்வரிடம், "ஐயா, நான் தங்களிடம் சரியாக இரண்டாண்டுகளே வேலை பார்ப்பேன்," என்று வேலையில் அமர்ந்த அன்றே தெரிவித்திருந்தார்.

## நேர்மை தவறாமை

ஜி. டி. நாயுடு வேலையில் திறம்பட நடந்து கொண்டார். அந்த ஆலையில் ஜி. டி. நாயுடுவின் தந்தையார் பருத்தி கொண்டுவந்து அடித்துச் செல்வது வழக்கம். 'எவருடைய பருத்தியாயினும் நிறுத்தலில் பாரத்துக்கு ஐந்து ராத்தல் தள்ளியடிக்க வேண்டும்' என்பது முதல்வர் கட்டளை. தந்தையார் ஜி. டி. நாயுடுவைப் பார்த்து "எனக்குமா அப்படி?" என்றார். ஜி. டி. நாயுடு "ஆம். இனி உங்கட்குப் பாரத்துக்குப் பத்து ராத்தல்" என்று கூறினர். தந்தையார் இதனை முதல்வரிடம் முறையிட்டார். அவர், "ஜி. டி. நாயுடு செய்தது சரி;" என்று கூறினர். இதிலிருந்து ஜி. டி. நாயுடுவின் நடுவு நிலை தவறாத கடமை உணர்ச்சியை நன்கு அறியலாம் அன்றோ?

## சொல் தவருச் செம்மல்

ஜி. டி. நாயுடு சொன்ன கால வரையறை முடிந்து விட்டது. ஒருநாள் இரவு கோவை அவிஞசிப் பெரு வழியில் முதல்வர் தம் மோட்டாரை நிறுத்தி விட்டு நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஜி. டி. நாயுடு அவரிடம் ஆலையின் சாவியைக் கொடுத்து, "ஐயா, நான் உங்களிடம் சொன்ன இரண்டு ஆண்டுக்காலம் இன்ருேடு முடிந்து விட்டது. இனி, நான் உங்கள் ஆலையில் வேலை பாரேன்," என்று சொல்லி விட்டுச் சென்ருர். ஆலையின் முதல்வர் என்ன சொல்வதென்று அறியாது திகைத்து நின்று விட்டார்.

## திருப்பூரில் சொந்த ஆலை

ஜி. டி. நாயுடு ஒண்டிப்புதூர் ஆலையில் பெற்ற அனுபவத்தின் துணையால் திருப்பூரில் சொந்தமாக ஓர் ஆலையை வைத்து நடத்தத் துணிந்தார்; துணிந்து, இடம் ஒன்றைத் தேடிஞர். கிறிஸ்தவப் பாதிரிமார்க்கு உரிமையான ஓரிடமே ஏற்றதாய்க் காணப்பட்டது. அக்காலத்தில் பாதிரிகட்குச் சொந்தமான நிலத்தை வாங்குவதோ, வாங்கிக் குடி புகுவதோ பாவமாய்க் கருதப்பட்டது. ஜி. டி. நாயுடு இந்த நம்பிக்கைகட்கு எல்லாம் மேற்பட்ட மனநிலை கொண்டவர் ஆதலின், அஞ்சாது அந்த நிலத்தை வாங்கிஞர்; நகராண்மைக் கழகத்தார் இசைவு பெருமலே ஆலை கட்டத் தொடங்கிஞர். அதுகண்ட அதிகாரிகள் அவர் மீது வழக்கு அறிக்கை விடுத்தனர். ஜி. டி. நாயுடு அவ்வறிக்கைத் தாளைப் பெருமலே காலங் கழித்தார்; கட்டடம் முற்றுப் பெற்றது.

பின்னர் ஜி. டி. நாயுடு நேரே நகராண்மைக் கழகத் தலைவரிடம் சென்று இசைவு பெற்றுக் கொண்டார்.

நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றல் பெற்ற ஜி. டி. நாயுடு ஆலையைத் தொடங்கிய காலம் உலக முதற் பெரும்போர் முடிவுற்ற காலமாகும். ஆலை தொடங்கிய இரண்டு ஆண்டுகட்குள் ஜி. டி. நாயுடு மீது திருமகள் திருநோக்கம் பாய்ந்தது. அவர் ஒன்றரை இலட்ச ரூபாய்க்கு உரியவரானார்.

### பம்பாயில் பணம் பறந்தது

மிக்க எளிய நிலையில் இருந்த ஜி. டி. நாயுடு, தம்மிடம் ஒன்றரை லட்சம் சேர்ந்தவுடன், பம்பாய் சென்று பஞ்சு வாணிகத்தை நடத்திப் பெருஞ் செல்வந் திரட்டலாமென்று கருதினார்; கருதிப் பம்பாயிற் கடை வைத்தார். கோவையில் அவர் தொடங்கிய பஞ்சு வாணிகம் பஞ்சாய்ப் பறந்ததன்றோ? அது போலவே பம்பாயில் அவர் கையிலிருந்த ஒன்றரை இலட்சமும் பஞ்சாய்ப் பறந்து விட்டது. பாவம்! ஜி.டி. நாயுடு கலங்கல் சிற்றூரில் இருந்த பழைய வறிய நிலையை யடைந்து, கோவை மீண்டார்; பஞ்சு வாணிகத்திற்கும் தமக்கும் பொருத்தமில்லை என்பதை அப்பொழுதுதான் நன்கு உணர்ந்தார்.

## 3. உழைப்பும் உயர்வும்

### மோட்டார் பஸ் ஓட்டி

கோவையில் மோட்டார்த் தொழிற்சாலை ஒன்றிருந்தது. அதன் தலைவர் **இராபர்ட் ஸ்டேன்ஸ்** என்பவர். அவர் ஜி. டி. நாயுடுவை நன்கு அறிந்தவர்.

ஜி. டி. நாயுடு அவரிடம் சென்று, அவரது தொழிற் சாலையில் தம்மை யந்திரம் பழுது பார்ப்பவராக அமர்த்திக்கொள்ளுமாறு வேண்டினார். ஸ்டேன்ஸ் துரை, "ஜி. டி. நாயுடு, இங்கு உனக்கு வேலை இல்லை. உனக்கு நான்காயிரம் ரூபாய் கடன் தரு கிறேன். ஒரு மோட்டாரை வாங்கி வாடகைக்கு ஓட்டு," என்றார். ஜி. டி. நாயுடு அத் தொகையை பெற்றுக்கொண்டார். தம் நண்பர்களிடம் மேலும் நான்காயிரம் பெற்று **மோட்டார் பஸ்** ஒன்றை வாங் கினார். அப்பொழுது கோவையில் சிறந்து விளங் கிய **திவான் பஹதூர் சோமசுந்தரம் செட்டியார்**, ஜி. டி. நாயுடுவை அழைத்து, "தம்பி, எத் தொழிலாயிருப் பினும் பாதியை முதலுக்குப் போட்டுவிடு; எஞ்சிய பாதியை அந்த முதலின் பாதுகாப்புக்காகக் கையில் வைத்துக்கொள்", என்று அறிவுரை கூறினார். ஜி. டி. நாயுடு அந்த அறிவுரைப்படி நடக்கலானார்.

**1920**-ஆம் ஆண்டில் ஜி. டி. நாயுடு ஒரு பஸ்ஸை விலைக்கு வாங்கிப் பொள்ளாச்சியிலிருந்து பழனிக்கு ஓட்டலானார். பஸ்ஸின் சொந்தக்காரர் ஜி. டி. நாயுடு; அதனை ஓட்டியவரும் அவரே. அதுவரை அவர் வாழ்க்கையிற் பெற்றிருந்த அநுபவம் அவருக்குப் பெருந் துணை புரிந்தது. அவர் மிகவும் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தினார். இரண்டு வாழைப் பழங் கள், அரைக்கால்படி பால் இவையே அவரது இரவு உணவு. இங்ஙனம் சிக்கனமா யிருந்து வண்டி ஓட்டி வந்தமையால், அவரிடம் பணம் சேரலா யிற்று. அவர் தாம் வாங்கிய கடனை விரைவில் தீர்த்துவிட்டு, புதிய வண்டிகளை வாங்கலானார்;

பொறுப்பு வாய்ந்த ஆட்களை வேலையில் அமர்த்தினார்.

## முயற்சியும் உயர்ச்சியும்

ஜி. டி. நாயுடு ஆட்சித் திறன் மிக்கவர். அவர் தம் ஆட்கள் எதிலும் ஒழுங்கு நிலை தவறிவிடாமல் இருக்கத்தக்க ஏற்பாடுகளை மேற்கொண்டார்; தம் ஆட்கள் பிரயாணிகளிடம் மரியாதையுடன் நடந்து கொள்கின்றனரா என்பதைப் பரிசோதிக்க வழியில் ஒரு பிரயாணியைப் போல் நின்று ஒரு பஸ்ஸில் ஏறுவார்; வண்டியில் வீண் வம்புகளைக் கிளப்பி வண்டி ஓட்டி, உள்ளிருந்து சீட்டுக் கொடுப்பவர் இவர்தம் நடத்தையைக் கவனிப்பார்; தவறாய் நடப்பவரை வேலையிலிருந்து நீக்குவார். அவருடைய வண்டிகள் குறித்த நேரத்திற் புறப்படும்; குறித்த இடத்தைக் குறித்த நேரத்திற் சென்று சேரும். இந்தக் கால வரையறையைக் கடந்தால் வண்டி ஓட்டிக்குத் தண்டம் விதிக்கப்படும்.

இத்தகைய திறமையான மேற்பார்வையினாலும், சட்டதிட்டங்களாலும் அவருடைய வண்டிகள் மீது பொது மக்கட்கு மிக்க நம்பிக்கையும் மதிப்பும் ஏற்பட்டன. 'ஜி. டி. நாயுடுவின் யு. எம். எஸ். வண்டிகளே பிரயாணத்துக்கு ஏற்றவை.' என்ற எண்ணம் கோவை மாவட்டத்துப் பொது மக்களிடையே பலப்பட்டது. இந்த நல்ல எண்ணம் அவர் தொழிலை நன்கு வளர்த்தது. அவர் பத்தாண்டுகட்குள் **பெருஞ் செல்வரானார்**; பல மோட்டார் பஸ்களுக்கு உரியவரானார்.

## பல துறையறிவு

இத்தகைய கடுமையான வேலைகட்கு இடையே ஜி. டி. நாயுடு ஆங்கில நூல்களை நன்கு கற்றுத் திறம்படப் பேசக் கற்றார்; மோட்டார் முதலிய ஊர்திகள் தொடர்பான மேனாட்டு நூல்கள் பலவற்றை வருவித்துப் படித்தார்; செடி - கொடி அறிவு நூல்களைப் படித்தார்; மேனாட்டுப் பயிர்த் தொழில் தொடர்பான நூல்களை வாசித்தார். இவ்வாறு மேனாட்டு நூல்கள் பலவற்றைப் படித்தமையால், மேனாடுகளைச் சென்று காணவேண்டும் என்னும் வேட்கை கொண்டார்.

## மேனாட்டு யாத்திரை I.

ஜி. டி. நாயுடு தாம் விரும்பியவாறே 1932-இல் மேனாட்டுச் செலவை மேற்கொண்டார். அவர் பிரயாணம் செய்த கப்பல் கொழும்புத் துறை முகத்தை விட்ட ஐந்தாம் நாள் தீப்பற்றிக் கொண்டது; பிரயாணிகளுள் மூவரே உயிர் தப்பினர். அவருள் ஒருவர் ஜி. டி. நாயுடு. அவர் ரஷ்ய எண்ணெய்க் கப்பல் ஒன்றால் மீட்கப்பட்டார். அவரிடமிருந்த துணிப்பெட்டி, எரிந்த கப்பலுடன் அழிந்துவிட்டது. ஆயினும் அவர் ஊர் திரும்பாது மேனாடுகட்குச் சென்றார்; பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து சென்று, அங்கங்கு இருந்த தொழிற் சாலைகளைப் பார்வையிட்டுத் தொழில் வல்லுநருடன் பேசினார்; பின்னர் அமெரிக்கா சென்றார்; மோட்டார் மன்னர்களைச் சந்தித்துத் தம் தொழில் வளர்ச்சியைப் பற்றிப் பேசினார்; நாகரிக நாடுகளில் பஸ்ஸுகள்

எவ்வாறு நடத்தப்படுகின்றன; அவ் வண்டிகளின் சந்திப்பு நிலையங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பன போன்ற பல விவரங்களை நேரிற் கண்டார்; பிறகு ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சீனம், தாய்லந்து, மலேயா, இலங்கை ஆகிய நாடுகளில் தங்கித் தாய்நாடு மீண்டார். இவ்வுலகச் செலவினால் அவரது அறிவும் அனுபவமும் மிக்க வளர்ச்சி பெற்றன.

## சென்னையில் வரவேற்பு

ஜி. டி. நாயுடு மேனாட்டு யாத்திரை செய்யப் புறப்பட்ட பொழுது நம் நாட்டுச் செய்தித்தாள்கள் அவரது புறப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அவர் மேனாடுகளில் நிபுணர் பலரிடம் பேசியனவும் பார்வையிட்ட விவரங்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும், மேனாட்டுத் தாள்களில் வெளிவந்ததைக் கண்ட பின்னரே நம் நாட்டுத் தாள்கள் அவர் மீட்சியைக் குறிக்கலாயின. நாயுடுவின் நண்பர்கள் சென்னை எழும்பூர் நிலயத்திற் கூடி அவரைச் சிறப்பாக வரவேற்றனர்.

## யு. எம். எஸ். தோற்றம்

ஜி. டி. நாயுடு மேனாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு மீண்ட அதே ஆண்டில் (1933-இல்) உலகில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அந் நெருக்கடி நமது நாட்டையும் வாட்டத் தொடங்கியதால், பஸ் முதலாளிகள் பலர் துன்புற்றனர்; போட்டியின் கடுமையாலும் இடர்ப்பட்டனர்; அந் நிலையில் ஜி. டி. நாயுடு கோவை மாவட்டத்தில்

இருந்த பஸ் உரிமையாளர்களை ஒன்று சேர்த்துக் கூட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். அதுவே **யுனைடெட் மோட்டார் சர்விஸ்** (யு. எம். எஸ்.) என்பது ஜி. டி. நாயுடு அதன் இயக்குநராக அமர்ந்தார். அவரது மேற்பார்வையில் ஏறத்தாழ 280 வண்டிகள் ஓடலாயின. ஆட்சி அமைப்பினை நன்கறிந்த நாயுடு ஆட்சிப் பகுதியைத் தனித்தனியாகப் பிரித்துத் திறமைபெற்ற ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பிரிவாக ஒப்புவித்தார்; வண்டிகளின் போக்குவரவினைக் கவனிக்க ஆங்கிலேயப் பொறிவல்லுநர் (Engineer) ஒருவரை அமர்த்தினர்; அமைப்பின் பொதுவேலைகளை மேற்பார்வையிட்டு ஆவன செய்ய ஓய்வுபெற்ற மாவட்ட ரெவினியூ அதிகாரி (Dt. Collector) ஒருவரை அமர்த்தினர்; தலைமைப் பொருளாளராகவும் தம் பதிலாளாகவும் இருந்து அமைப்பினை நன்கு கவனிக்கத் தம் உறவினராகிய பொள்ளாச்சி நகராண்மைக் கழகத் தலைவராயிருந்த ராவ்பஹதூர் எஸ். வி. வி. நாயுடு என்பவரை அமர்த்தினர். இங்ஙனம் அமைப்பின் நடைமுறையை மூவரிடம் விட்டுத் தலைமைச் சுக்கானை மட்டும் தம்மிடத்தே வைத்துக்கொண்டார்; 'ஒற்றுமையே பலம்' என்பதை யு. எம். எஸ். வாயிலாக நாட்டினர்க்கு நன்கு உணர்த்தினர்; பிரயாணிகள் மனமகிழுமாறு வேலையாட்களை நடந்துகொள்ளச் செய்தார்; யாண்டும் ஒழுங்கு நிலவச் செய்தார்; வருமானம் பெருத்தது. பஸ்களின் சொந்தக்காரர் துன்பம் சிறிதுமின்றி நல்ல ஊதியம் பெற்றனர்; யாவரும் ஜி. டி. நாயுடுவை மனமார வாழ்த்தினர். பெரும்பாலான வண்டிகளின் சொந்தக்காரராகிய நாயுடு பெருஞ் செல்வரானர்.

## மேனாட்டு யாத்திரை II

ஜி. டி. நாயுடு தம் தொழில் வளர்ச்சி கருதி 1935-இல் இரண்டாம் முறையாக மேனாட்டுச் செலவினை மேற்கொண்டார்; அவர் புறப்படும் முன்னரே தம் பிரயாணத் திட்டங்களை வரையறுத்துக்கொண்டார்; மேனாட்டுக் காட்சிகளைப் புகைப்படம் எடுக்கத்தக்க இரண்டு பெரிய கருவிகளை எடுத்துக்கொண்டார்; அவர் இங்கிலாந்தை அடைந்த பின் அங்கிருந்த மோட்டார் செய்யும் தொழிற்சாலைகளை நன்கு பார்வையிட்டார்; ஐந்தாம் ஜார்ஜ் காலமானபோது நடந்த நிகழ்ச்சிகளையும், ஒலிம்பிக் கண்காட்சிக்கு வேல்ஸ் இளவரசர் சென்றிருந்த காட்சியையும் புகைப்படம் எடுத்தார். அவர் ஜெர்மனிக்குச் சென்று மோட்டார்த் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார்;

ஹிட்லர், கோயரிங், ஹெஸ், கோயபெல்ஸ் என்ற தலைவர்களைக்கண்டு அளவளாவினார். அவர்களைப் புகைப்படம் எடுத்தார்; ஹிட்லரின் தனியான படம் ஒன்றில் அவரது கையொப்பம் பெற்றார். அவருடன் ஜி. டி. நாயுடு பேசுகையில் டாக்டர் 'லே' என்பவர் மொழி பெயர்ப்பாளராக இருந்தார். அவர் ஜெர்மன் அரசியலையும், தொழில் வளர்ச்சியையும் பற்றிப் பெர்லினில் நிரம்ப அறிந்துகொண்டார். ஜெர்மன்படை ஒன்றினைப் புகைப்படம் பிடித்தார்.

ஜி. டி. நாயுடு சுவிட்சர்லந்தில் பேடன்வீலர் என்ற உடல் நல ஊரில் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ருவைக் கண்டார். அங்கு அவர் மனைவியார் கவலைக்கிடமான நிலையில் நோயுற்றிருந்தார். ஜி. டி.

நாயுடு அவர்களைக்கண்டு பேசிக் கொண்டிருந்து இத்தாலி சென்றார்; பின்னர் அமெரிக்கா சென்று பல நகரங்களைப் பார்வையிட்டுத் தாய்நாடு மீண்டார்; அவர் மீண்ட கப்பலில் "லின்லித்கோ பிரபு" இந்திய வைசிராயாக நியமனம் பெறறு இந்தியா வந்து கொண்டிருந்தார். ஜி. டி. நாயுடு அக்கப்பலில் இருந்த இந்தியர் ஐவருடன் சேர்ந்து, அப்பிரபுவிற்கும் அவர் மனைவியார்க்கும் கப்பலிலேயே வரவேற்பு விருந்தளித்துச் சிறப்பித்தனர். ஜி. டி. நாயுடு அக்காட்சியைப் படம் பிடித்துக்கொண்டனர்.

## மோட்டார் வண்டி செய்ய முயற்சி

ஜி. டி. நாயுடுவின் மேனாட்டுச் செலவுகள் இரண்டும் அவரை மோட்டார் செய்யும் பெரிய தொழிற்சாலை ஒன்றைக் கோவையில் ஏற்படுத்துமாறு தூண்டின. அவரது விருப்பப்படி மூன்று சமஸ்தானங்கள் பொருளுதவி செய்யத் தயாராக முன் வந்தன. ஆயின் தொழிற்சாலைக்கு ஏற்றதாகப் பரந்த இடம் அமையவில்லை. உலகில் உள்ள பெரிய மோட்டார்த் தொழிற்சாலைகள் நாற்பத்து மூன்று. அவற்றுள் முப்பத்தொன்பது தொழிற்சாலைகளை நாயுடு நேரிற் கண்டவர்; பிரிட்டிஷ் மோட்டார்த் தொழிற்சாலைகளுட் பெரியதான ஜோசப் சாங்கி என்னும் கம்பெனியாருடன் ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

## முயற்சியும் வீழ்ச்சியும்

1938-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கத் தொழில் அமைச்சராயிருந்த திருவாளர் **வி. வி. கிரி** என்பவர் **ஜி. டி. நாயுடுவின் திறமையும் அனுபவமும்**

**நாட்டிற்குப் பயன்பட வேண்டும்** என்ற நன்னோக்கம் கொண்டார். அப்பொழுது ஜி. டி. நாயுடு அவரது விருப்பப்படி, தொழிற்சாலைக்குத் தேவையான அடிப்படைக் கருவிகள், திட்டங்கள் முதலியவற்றைத் தயாரித்து மாகாண அரசாங்கத்தார் இசைவுடன் இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பினார்; இந்திய அரசாங்கத்தார் மூலப் பொருள் பங்கீட்டிற்கு இசைவு தர மறுத்துவிட்டனர். மாதம் ஒன்றுக்கு நூறு மோட்டார் வண்டிகளைக் குறைந்த விலையிற் செய்யலாம் என்ற நாயுடுவின் திட்டம் இவ்வாறு கருவிலே சிதைக்கப்பட்டது. அறிவும் ஆற்றலும் பெற்ற நாயுடு அரசாங்கத் துணையின்றி யாது செய்ய இயலும்? அவர் விளையாட்டு மோட்டார் (Toy-Motor) என்னும் ஒன்றைத் தம் திறமைக் கறிகுறியாகச் செய்து வைத்துள்ளார். ஓர் அவுன்ஸ் கல்லெண்ணெய் (பெட்ரோல்) ஊற்றி ஓடவிடின், அவ்வண்டி ஒரு கல் தொலைவு ஓடுகின்றது.

### மின்சார மோட்டார்த் தொழிற்சாலை

இயந்திர அறிஞரான ஜி. டி. நாயுடு 1939-இல் மின்சார மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கினார். அதனை அப்பொழுது சென்னை அரசாங்க ஆலோசனையாளராயிருந்த **சர் ஜார்ஜ்போக்** என்பவர் திறந்துவைத்தார். போர் நிலைமை காரணமாக வெளி நாட்டிலிருந்து மின்சார மோட்டார்கள் கிடைத்தல் அரிதாயிருந்தது. மேலும் இந்தியாவில் வேறெங்கும் இம் முயற்சி வெற்றியளியாதிருந்தது. இவ்விரு காரணங்களாலும் இந்திய அரசாங்கம் நாயுடுவின் முயற்சிக்குத் துணையளித்தது. இவ்வாறு

இந்தியாவிலேயே முதன் முதலாக மின்சார மோட்டார்களைச் செய்ய முனைந்தவர் நாயுடுவேயாவர். ஆயின் நாளடைவில் விரிவான ஏற்பாடுகளைச் செய்யப் பொருள் வசதியும் இந்திய அரசாங்க உதவியும் குறைந்துவிட்டன.

## மேனாட்டு யாத்திரை III

மின்சார மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலையைத் தோற்றுவித்த பிறகு அதே ஆண்டில் நாயுடு மூன்றாம் முறையாக மேனாட்டுச் செலவை மேற்கொண்டார். மேனாட்டுத் தொழில் நுணுக்கம் முழுவதையும் நன்குணர்ந்து மீளவேண்டும் என்பது நாயுடுவின் நன்னோக்கம் ஆகும்.

ஜி. டி. நாயுடு இங்கிலாந்தின் கரையை அடைந்தார்; இரண்டாம் உலகப்போரும் தொடக்கமாயிற்று. ஜெர்மன் படைகள் போலந்திற்குள் நுழைந்தன. இங்கிலாந்தில் இருந்த தொழிற்சாலைகள் போர்க்கருவிகளை உண்டாக்குந் துறையில் திரும்பின. நாயுடு இங்கிலாந்தில் எல்லாத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டு, அமெரிக்கா சென்றார். அக்டோபர் இறுதியில் நியூயார்க்கில் நடந்த உலகக் கண்காட்சியைப் பார்வையிட்டுக் களித்தார்; அந்தக் காட்சி முழுவதையுமே படம் பிடித்துக் கொண்டார். அமெரிக்காவைப் பற்றித் தம் நண்பர்க்கு வரைந்த கடிதங்களில் அவர் கீழ் வருவனவற்றைக் குறித்துள்ளது கவனிக்கத்தக்கது.

“அமெரிக்கர் அறிவிற் சிறந்தவர்கள். புகைவண்டி புறப்படும் நேரமும் வந்து சேரும் நேரமும் அனைவருக்கும் தெரிந்திருக்கின்றன. ஆதலின் இங்குச்

சாலைகளும் இருப்புப் பாதைகளும் சந்திக்கும் இடங்களில் போக்கு வரவைத் தடுக்கும் வாயில்கள் இல்லை. அமெரிக்கப் புகை வண்டிகளில் ஆயிரம் கல் தொலை பிரயாணம் செய்யினும் உடையில் அழுக்குப்படிவதில்லை. வண்டிகள் அவ்வளவு தூய்மையாக இருக்கின்றன.''

## கைத்தொழில் மாணவர்

ஜி. டி. நாயுடு பல நகரங்களையும் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டு செயின்ட்லூயி என்னும் நகரத்தில் உள்ள பெரிய கைத்தொழிற் பள்ளியில் மாணவராய்ச்சேர்ந்து தொழிற் கல்வி பயில முனைந்தார். அவர் 1940-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அப்பள்ளியிற் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது நாற்பத்தொன்பது. அப்பள்ளியில் கற்பவர் ஒருவர்க்கு மாதம் இருநூறு டாலர் செலவாகியது. அப்பள்ளியிற் சேர்ந்த **முதல் இந்திய மாணவர்** நமது நாயுடுவேயாவர். அவர் அப்பள்ளியில் மாணவராய்ச் சேர்ந்தாரேனும், பள்ளியதிகாரிகளும் பிற அமெரிக்கரும் அவர் சிறந்த இந்தியத் **தொழிலறிஞர்** என்பதை மறக்கவில்லை; அவரைப் பல பொதுக் கூட்டங்களிற் பேசச்செய்தனர். செய்தித்தாள் ஆசிரியர்கள் அவரைக்கண்டு பேசி, அவரைப்பற்றித் தம் தாள்களில் பாராட்டி வரைந்தனர். அவர் ஒரு சமயம் அமெரிக்க மாதர் கூட்டம் ஒன்றிற் பேசியபோது,

"முடி அலங்காரமும், ஆடம்பர ஆடைகளும், மாத்தோய்ந்த வதனங்களும், நிறம் தீட்டிய உதடுகளும் மட்டும் உங்களை ஒரு போதும் அழகு செய்யா;

ஒழுக்கமும் உண்மையுடைமையுமே உங்களை உண்மையில் அழகு செய்ய வல்லவை," என்று கூறினார்.

பின்னர் ஜி. டி. நாயுடு அமெரிக்க விஞ்ஞானிகள் பலரையும் கண்டு பேசினார்; அவர் பதினாயிரம் டாலர்கள் பெறுமான இயந்திரங்களைக் கோவைக்கு அனுப்புமாறு அநுமதி கொடுத்து, இந்தியா மீண்டார்.

## இயந்திர அறிஞர்

ஜி. டி. நாயுடு அமெரிக்காவிலிருந்து மீண்ட பிறகு 1941-இல் ரேடியோவை உண்டாக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கினார்; ஐந்து வால்வுகளைக் கொண்ட ரேடியோ பெட்டி ஒன்று எழுபத்தைந்து ரூபாய் விலையில் முடியுமாறும், நீண்ட காலம் உழைக்கத் தக்கவாறும் செய்வதென்று திட்டமிட்டார். முன்னாள் நிதி அமைச்சர் **சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார்** அவர்கள் அத் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். வெளி நாட்டிலிருந்து வால்வுகள் மட்டுமே வரவழைக்கப்பட வேண்டும். ஆனால் வழக்கம்போல இந்திய அரசாங்கத்தார் அதற்கும் உதவி செய்யாதவராயினர்.

## பொறியியற் கல்லூரி

இங்ஙனம் எதற்கெடுத்தாலும் இந்திய அரசாங்கம் கைவிரித்தமையால் நாயுடுவின் திட்டங்கள் கைகூடாமற் போயின. நாட்டுக்கு நலன் செய்ய வேண்டும்—நாட்டிற்குத் தேவையானவற்றை நம் நாட்டிலேயே செய்து குறைந்த விலையில் விற்கலாம் என்று எண்ணிய நாயுடுவின் எண்ணம் அரசாங்க

உதவியின்றிப் பாழாயிற்று. சிறந்த பொறி வல்லுந ரான—தொழில் மன்னரான நாயுடுவின் மனம் பட்ட பாடு சொல்லுந் தரத்தன்று. தம் அனுபவங் களையும் திறமையையும் நாட்டு இளைஞர்க்கேனும் சொல்லி வைப்பது நலமெனக் கருதி, ஜி. டி. நாயுடு 1945-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ஆம் நாள் இலட்சக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கட்டடங் களுடனும் பிற பொருள்களுடனும் ஓர் **பொறியியற் கல்லூரியை (Engineering College)** தோற்றுவித்தார்; அதற்கு அந் நாள் கவர்னர் பெயரை இட்டார். **ஆர்தர் ஹோப் பொறியியற் கல்லூரி** என்பது அதன் பெயர். நாயுடு அதனை அரசாங்கத்தாரிடமே ஒப்படைத்தார்.

## 'ஆர்தர் ஹோப் பாலி டெக்னிக்' கல்லூரி

நாயுடு 1945-ஆம் ஆண்டில் மேற் சொன்ன கல்லூரி தொடங்கியதற்கு முன்னர், அதாவது 1945-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மோட்டார், ரேடியோ ஆகிய இரு தொழில்களுக்கும் பயிற்சி அளிக்கத் தக்க கல்லூரி ஒன்றைப் பெரும் பொருள் செல விட்டுத் தொடங்கினார். **ஆர்தர் ஹோப் பாலி டெக்னிக் கல்லூரி** என்பது அதன் பெயர். அக் கல்லூரிப் பாடங்களைக் கற்பிக்கத்தக்க வல்லுநர் இந்தியாவில் கிடைத்தல் அருமையாக இருத்தலின், அரசாங்கத் தார் விருப்பப்படி நாயுடுவே ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்தலானார்.

## பலவகைக் கண்டுபிடிப்புகள்

ஜி. டி. நாயுடு மிகச் சிறந்த மோட்டார் யந்திர அறிஞர் மட்டும் அல்லர். அவர் பல புதிய விஞ் ஞானக் கருவிகளைக் கண்டறிந்த அறிஞருமாவர்.

அவர் பத்தாண்டுகட்கு முன் மின்சார சிறைக்கும் கத்தி (Rasant Electric Safety Razor) ஒன்றைக் கண்டு பிடித்தார். ஓர் அங்குலத்தில் 200-இல் ஒரு பகுதி கன அளவுக்கு மிகவும் மெல்லிய சிறைக்கும் கத்தி இதற்காகச் செய்யப்பட்டது. அது மிகச் சிறிய பாட்டரியை உள் வைத்து மின்சார விசையைத் தட்டியவுடன் கத்தி தானாக இயங்கி இருநூறு முறை நன்முறையில் சிறைக்கவல்ல அற்புத சாதனமாகும். இந்தக் கண்டுபிடிப்புக்குச் சென்னை, கல்கத்தா. லட்சுமணபுரி முதலிய இந்திய நகரங்களில் வைக்கப்பட்ட கண்காட்சிச் சாலைகளில் பரிசளிக்கப் பட்டது; ஜெர்மன் (Leipsig) லீப்ஸிக் நகர விஞ்ஞானக் காட்சிச் சாலையிலும் சிறந்த முறையில் பரிசளிக்கப்பட்டது. "இந்தக் கண்டு பிடிப்பு இந்திய அறிஞரது விஞ்ஞான அறிவை உயர்த்திக் காட்டுவதாகும்," என்று மேனாட்டு விஞ்ஞான அறிஞர்கள் பாராட்டிக் கூறினர். அமெரிக்கக் கைத்தொழில் நிலையம் ஒன்று, விற்பனை உரிமையைத் தனக்குத் தருவதாயின் பத்து லட்சம் ரூபாய்களைத் தருவதாகக் கூறியது. "பதினெட்டு லட்ச ரூபாய் செலவில் அதனைத் தயாரிக்கத் தொழிற்சாலை நிறுவப் படவேண்டும். அங்ஙனம் நிறுவப்படின், ஆண்டு தோறும் சிறைக்கும் கத்திக்காக இந்தியா அயல் நாடுகட்குக் கொடுத்து வரும் இரண்டு கோடி ரூபாய் மீதப்படும்," என்று ஜி. டி. நாயுடு கூறினார். கத்திக்குரிய மென்மையான தகடுகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாக வேண்டும். அதற்கு இந்திய அரசாங்கத்தின் இசைவு வேண்டும். ஆனால் இந்திய அரசாங்

கம் இசைவையும், பொருள் உதவியையும் செய்ய முன் வரவில்லை என்பது வருத்தத்துடன் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஜி. டி. நாயுடு சென்ற பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாகக் கண்டுபிடித்துள்ள புதிய விஞ்ஞானக் கருவிகள் பலவாகும். பஸ்ஸுகளின் அதிர்ச்சியைச் சோதிப்பதற்கான **இயந்திரம்** (Vibrator testing Machine), **ஒளிசமன இயந்திரம்** Distance Adjuster, **கணக்குப் போடும் யந்திரம்** (Calculating Machine), **தொலைப் பார்வைக் கண்ணுடி** (Lence), **ரிப்ரிஜிரேடர்** (Refrigerator) என்னும் இயந்திரம், **ஒலிப் பதிவு யந்திரம்** (Recording Machine), **ரேடியோ கடிகாரம்** Radio Clock), **வாக்குப் பதிவு யந்திரம்** (Vote Recording Machine), **காபி அளிக்கும் யந்திரம்** (Coffee Meet Supplier) **துலக்கும் யந்திரம்**, காசு போடப்படின் தானே பாடும் இயந்திரம் (Slot Singing Machine) முதலிய நூற்றுக்கு மேற்பட்ட புதிய இயந்திரக் கருவிகளைச் செய்திருக்கின்றார்.

இப் பேரறிஞர் மேனாடுகளில் ஒன்றிற் பிறந்திருப்பாராயின் அந் நாட்டு அரசாங்கத்தாலும் மக்களாலும் பேரறிஞராகக் கொண்டாடப்பட்டிருப்பார் என்பதில் ஐயமுண்டோ?

### செடி கொடிச் சித்தர்

அறிஞர் ஜி. டி. நாயுடு இயந்திர அறிஞர் மட்டும் அல்லர். அவர் சிறந்த செடி கொடிச் சித்தராகவும் விளங்கி வருகிறார். இந்தியாவின் உணவுப் பொருள்களுக்கென்று ஆண்டு தோறும் இருநூறு கோடி

ரூபாய் வெளிச் செல்லுகிறது. இதனை நிறுத்தி இந்தியாவிலேயே விளைவைப் பெருக்க வேண்டும் என்பது ஜி. டி. நாயுடுவின் முயற்சி. அவர் தமது தோட்டத்தில் விஞ்ஞான முறையில் பருத்திச் செடியையும் சோளச் செடியையும் பயிராக்கி யுள்ளார். பருத்திச் செடியின் உயரம் 10 அடி. அதிலிருந்து ஓராண்டுக்குள் இரண்டரை அங்குல இழையுள்ள இருபத்து நான்கு ராத்தல் பருத்தி கிடைக்கிறது. அச்செடியின் விதையை மறுபடி விதைத்தால் ஐந்து திங்களுக்குள் ஐந்தடிக்கு மேல் வளர்கிறது. சோளச் செடியின் உயரம் ஏறத்தாழப் பதினெட்டு அடி. அதில் இருபத்தாறு கிளைகள்; அவற்றின் மொத்த நீளம் நூற்று எண்பத்தோரடி. எல்லாக் கிளைகளும் முப்பத்தொன்பது கதிர்கள் விட்டுள்ளன. "ஓராண்டில் ஓர் ஏக்கர் நிலத்தில் நூற்றிருபத்தைந்து இராத்தல் பருத்தியை உண்டாக்கப் பயிர்த்தொழில் அறிஞர்கள் பெருமுயற்சியெடுக்கின்றனர். நான் வளர்க்கும் ஆறு பருத்திச் செடிகள் இந்தப் பயனைத் தருகின்றன;" என்று அறிஞர் நாயுடு கூறியுள்ளார் எனின், அவரது தாவர அறிவு நுட்பத்தை என்னென்பது! "இருபத்தைந்து ஆரஞ்சுப் பழங்களை ஒரே ஆரஞ்சாகக் காய்க்கச் செய்து, அதன் சாற்றில் இருபத்தைந்து பங்கு நீரைக் கலந்து உட்கொள்ளலாம்," என்னும் புதுமையையும் நாயுடு கண்டறிந்தார்; இப்பயிர்களை நேரிற் பார்வையிட்டு மகிழ்ந்த **சர். சி. வி. இராமன்** அவர்கள், "அறிஞர் நாயுடு அவர்கள் இயந்திர அறிஞர் மட்டும் அல்லர்; பெரிய தாவர அறிஞருமாவர்," என்று பாராட்டிக் கூறியுள்ளார்

## 4. பெயரும் புகழும்

### அமெரிக்கர் பாராட்டு

இந்திய அரசாங்கத்தினர் ஜி. டி. நாயுடு அவர்களின் அரிய பெரிய ஆராய்ச்சிகளைக் கவனியாவிடினும், விஞ்ஞான அறிவில் தலை சிறந்து விளங்கும் அமெரிக்கா அவரைச் சிறந்த பேரறிஞராகக் கருதுகின்றது. அமெரிக்க அறிஞர்கள், "நாங்கள் திருவாளர் நாயுடு அவர்களின் ஆராய்ச்சிகளைக் கண்டு பெரிதும் பாராட்டுகிறோம். ஆயின் அவர் அவற்றை எங்களுக்கு உரிமைப் பொருள்களாக விற்க மறுக்கிறார். அவை இங்கு தான நன்முறையிற் செலவாகும். நாயுடு மிகச் சிறந்த நுண்ணறிவுடையவர். ஒரு சிறந்த இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகளைப் போக்குவதில் அவ்வறிஞர் சொன்ன சில யோசனைகள் இரண்டாயிரம் டாலர்கள் வீண் செலவாதலைத் தடுத்தன. அறிஞர் நாயுடுவின் கண்டுபிடிப்புகளால் இந்தியா பெருமைப்படவேண்டும்." என்று கூறியுள்ளனர். அமெரிக்கக் கைத்தொழில் நிலைய உரிமையாளர் ஒருவர், "அறிஞர் நாயுடு தம்து சிறைக்கும் கத்தியைச் செய்துகொள்ள எங்கட்கு யோசனை கூறிக் கொண்டிருப்பின், நாங்கள் அவருக்கு மாதம் மூவாயிரம் டாலர் விருப்பத்துடன் கொடுத்து வருவோம்," என்று கூறினர். இத்தகைய பேரறிஞரை நமது தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து மகிழுங்கள்.

### யு. எம். எஸ். அலுவலகம்

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களின் மோட்டார்த் தொழில் உலகத்தார் கவனத்தைப் பெற்றுவிட்டது.

வெளிநாட்டுத் தொழிலறிஞர்கள் இந்தியா வரின், நாயுடு அவர்களுடைய தொழில் நிலையங்களைப் பார்வையிட்டுப்போவது வழக்கமாகி விட்டது. யு. எம். எஸ். அலுவலகத்தில் அறிஞர் நாயுடுவை நாடோறும் பலர் பார்த்துப் பேசியவண்ணம் இருப்பார்கள். "கோவை அவிநாசிப் பெருவழியில் அழகுற அமைக்கப்பட்டுள்ள யு. எம். எஸ். 'நடு அலுவலகம்' இந்தியாவின் நினைவைத்தராது, அமெரிக்காவின் நினைவைத் தரத்தக்க நிலையில் இருக்கின்றது," என்று அதனைப் பார்வையிட்ட அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார். அந்த அலுவலகத்தில் பஸ்கள் வரும் காலங்களையும், புறப்படும் காலங்களையும் காட்டும் புதிய கருவியும், தானே கணக்குப்போட்டுப் பிரயாணிகட்குப் பிரயாணச் சீட்டுத்தரும் வியக்கத் தகு கருவியும், வண்டிகள் வருதலும் போதலும் பிரயாணிகள் நடமாட்டமும் பிறவும் காணத்தக்க காட்சியாகும். மேலும் அந் நடு அலுவலகம் காண் போர் வியந்துநிற்கும் கவின் பெற்று விளங்குகிறது; தூய்மையுடையதாக இருக்கிறது. பிரயாணிகளுக்கு வேண்டிய எல்லாவகையான வசதிகளையும் உடைய தாயிருக்கிறது.

அங்குள்ள அலுவலகத்தில் அறிஞர் நாயுடு அவர்களைக் காண்பதெப்படி? வாயிற்காவலன் டெலி போனில் நாயுடு அவர்கட்குப் புதியவர் வருகையை அறிவித்து, அவரது இசைவு பெற்றபின்னர் வந்த வரை உள் செல்லவிடுவான். உட்சென்றதும் கூரிய பார்வையும் மெலிந்த உடலும் உடைய நாயுடு காட்சி அளிப்பார். அறிஞர் நாயுடு வந்தவரை வரவேற்பார்.

அதற்குள் அவரது மின்சார மோட்டார்த் தொழிற் சாலையிலிருந்து டெலிபோனில் ஒருவர் பேசுவார். மற்றொருவர் வேருேரிடத்திலிருந்து டெலிபோனில் பேசத் தொடங்குவார். அப் பேச்சு முடிந்ததும் வந்தவருடன் பேச வாய்திறக்கும்போது இள நங்கையர் ஒருவர் 'டைப்' அடித்த காகிதங்களுடன் வருவார். நாயுடு அவர்கள் வந்தவருடன் பேசிக்கொண்டே அக் காகிதங்களைப் படிப்பார்; தவருன கடிதங்களைத் திருத்தி அடிக்குமாறு கூறிவிட்டு, மற்றவற்றில் கையொப்பமிடுவார்.

## கோபால் பாக்

அறிஞர் நாயுடு அவர்களின் திருமாளிகை அமெரிக்க வெள்ளை மாளிகையைப் போன்றது. அம் மாளிகையில் அவர் மேனுடுகளில் எடுத்த புகைப்படங் கள் யாவும் நிறைந்து அழகு செய்கின்றன. அம்மாளி கைக்குள் பத்து வெவ்வேறு தொழிற் பிரிவுகளைக் கொண்ட கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றிற் பயிலும் மாணவர்க்குப் பயன்படும் முறையில் ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் வண்டி, வானவூர்தி உட்படப் பலவகை இயந்திரக் கருவிகள் இருக்கின்றன. ஏறத் தாழ இருபத்தைந்து லட்ச ரூபாய்கட்கு மேற் பெறுமானமுள்ள புதிய விஞ்ஞானக் கருவிகள் அம்மாளிகையைச் சூழ இருக்கின்றன. நாயுடு அவர் களின் தந்தையார் திருப்பெயர் கொண்டுள்ள அப் பெரு மாளிகையின் தரை சிமென்ட் போடப்பட்டது; எங்கும் தூய்மை நிறைந்தது.

அறிஞர் நாயுடு அவர்களின் உணவுக்கூடம் பார்க்கத்தக்கது. சுவரில் வெந்நீர்—தண்ணீர்க் குழை

கள் காட்சியளிக்கின்றன. அங்குள்ள நடு மண்டபம் முன்னூற்று எழுபதடி நீளமும் எழுபத்தைந்தடி அகல மும் உடையது. அதன் ஒரு பக்கச் சுவர் மீது மனி தர்க்கு வேண்டும் சராசரி உணவுப் பொருள்கள்— உணவுச் சத்து இவை பற்றிய விளக்கப் பலகைகள் இருக்கின்றன. சுருங்கக் கூறின், கோபால் பாக்கின் அமைப்பும் பொருள்களுமே அறிஞர் நாயுடு அவர் களின் அறிவு நுட்பத்தை விளக்கப் போதியவை என்னலாம்.

## கொடை வள்ளல்

அறிஞர் நாயுடு அவர்கள் தொழிலாளிகளிடத் தில் மிக்க அன்புடையவர்; அவருடைய தொழிற்சாலை யில் வேலைநிறுத்தம் ஏற்பட்டதே இல்லை. உலகம் எங்கும் உள்ள தொழிற்சாலைகளில் வேலைநிறுத் தங்கள் நடந்திருந்தும், ஹென்றி போர்டு தொழிற் சாலையிலேயே வேலைநிறுத்தம் நடைபெற்றிருந் தும் அறிஞர் ஜி. டி. நாயுடுவின் தொழிற்சாலையில் மட்டும் வேலைநிறுத்தம் என்னும் பேச்சுக்கே இட மில்லை. இதற்குக் காரணம் அவரது தொழிற்சாலை யில் வேலை செய்பவர்கள் பிற தொழிற்சாலைகளின் தொழிலாளரை விட மிகுதியாகச் சம்பளம் பெறு வதும், அன்பாக நடத்தப்பெறுவதுமே யாகும்.

மேலும் அறிஞர் நாயுடு அவர்கள், வயதுமுதிர்ந்த வர்களைத் தம் அலுவலகத்தில் முக்கியமான பதவி களில் அமர்த்தியுள்ளார். இதற்குக் காரணம் 'வயது முதிர்ச்சி தவறுதலுக்கு இடம் தராது' என்னும் அவருடைய உறுதியான நம்பிக்கையே யாகும்.

தொழிலாளருக்கும் மக்களுக்கும் நலன்கள் பல ஆற்றும் நோக்கங்கொண்ட அறிஞர் ஜி. டி. நாயுடு தொழிலாளர் நலன் காக்கும் கழகத் (Industrial Labour Welfare Association) தலைவராக இருந்து பணியாற்றி வருகின்றார். அவர் தம் நலத் துறையில் பற்றுக் கொண்டவர். அரசாங்கத்திற்கும் பிற நிலையங்கட்கும் அவர் தக்க சமயங்களில் பொருள் உதவப் பின்வாங்க வில்லை. அவர் 1943-இல் உலகப் போர் நடைபெற்று வந்தபோது சென்னைக் கவர்னராயிருந்த சர்-ஆர்தர் ஹோப் அவர்களைக் கோவைக்கு வரவழைத்து 1,10,000 ரூபாய்களைப் போர் உதவிக்கும், 10 லட்ச ரூபாய்களைப் போர்க்கடன பத்திரங்களுக்காகவும் அளித்தார்; அதே காலத்தில் 1,50,000 ரூபாய்களையும் யு - எம் - எஸ் நிலையத் தொழிலாளர் துன்ப நீக்கத்திற்காக வழங்கினார்; ஒரு லட்ச ரூபாய்களை மாகாணத் தொழிலாளர் நல வளர்ச்சிக்கென உதவினார். தாழ்த்தப் பட்டவர் முன்னேற்றத்திற்காக ஐம்பதினாயிரம் ரூபாய்களையும் மனமுவந்து அளித்தார்; ரேடியோ—மோட்டார் தொழில் வளர்ச்சிக்காக இரண்டு லட்ச ரூபாய்களை உதவினார்; போலீஸ்காரர்தம் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்கென்று ஐம்பதினாயிரம் ரூபாய்களை வழங்கினார்; சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ரேடியோ பாடப்பிரிவுக்காக இருபத்தையாயிரம் ரூபாய்களையும், இராமகிருஷ்ண யந்திர மோட்டார்ப் பாடவகுப்பு மாணவர் சம்பள உதவிக்கென்று இருபத்தையாயிரம் ரூபாய்களையும் வழங்கினார். இலட்சுமி நாயக்கன் பாளையத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்தி, "இராமசாமி நாயக்கர் ஹைஸ்கூல்" எனும்

பெயரால் அது ஒழுங்காக நடந்துவருவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துள்ளார்.

1940 ஆவது ஆண்டிலேயே தம் சொத்துக்கள் அனைத்தையும் தம் உறவினர்களுக்கும் மக்களுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார். இங்ஙனம் தம் பெருஞ் செல்வத்தை வாரி வழங்கிய அறிஞர் எத்துணையர் இந் நாட்டில் உள்ளனர்?

## அறிஞரின் கொள்கை

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களுடைய முதல் மனைவியார் பெயர் செல்லம்மாள் என்பதை முன்னரே படித்துள்ளீர்கள். அவ்வம்மையார் கிருஷ்ணம்மாள், சரோஜினி என இரு பெண் குழந்தைகளைப் பெற்றார். இவ்விரு மகளிருள் சரோஜினியின் திருமணம் சென்னைக் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப் என்பார் தலைமையில் நடைபெற்றது. எந்தவிதமான ஆடம்பரமும் பெருஞ் செலவுமின்றி இத்திருமணம சிக்கனமாக, பிறமக்களுக்கு ஒரு வழி காட்டி போன்று நடததப்பட்டது குறிப்பிடத்தககது.

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களின் இரண்டாவது மனைவியார் பெயர் அரங்கநாயகி அம்மையார். இவ்வம்மையார் ஓர் ஆண் மகவை ஈன்றார். இக் குழவிக்கு, அறிஞர் நாயுடு தம் தந்தையாரின் பெயராகிய கோபால் என்பதையே இட்டார்.

அறிஞர் நாயுடு இதுவரை இருநூற்றுமுப்பது தேநீர் விருந்துகள் கொடுத்திருக்கிறார். இவ்வளவும் தம் செல்வச் செருக்கை முன்னிட்டோ, புகழுக்கும் பெயருக்குமோ அல்ல; எல்லாருடைய அறிவையும் வளரச் செய்யவும், பிற அறிஞர் அறிவுரைகளைக்

கேட்கவுமே யாகும். தேநீர் விருந்து ஒவ்வொன்றிலும் அவர் ஆற்றியுள்ள சொற்பொழிவு கேட்போர் அறிவைப் பெருக்குவதாகவே அமைந்திருக்கிறது.

"இருபத்தைந்தாண்டுகள் கல்வியுடன் உலக அறிவையும் கற்றல் வேண்டும்; இருபத்தைந்தாண்டுகள் பொருளுடன் அறிவையும் ஈட்டல் வேண்டும்; இருபத்தைந்தாண்டுகள் ஈட்டிய கல்வி, அறிவு, பொருள் ஆகியவற்றினை, நல்லற நெறியில் செலவிட்டு வருதல் வேண்டும்." என்பது அறிஞர் நாயுடு அவர்களின் கொள்கை.

இக்கொள்கைக்கொப்ப அறிஞர் நாயுடு அவர்கள் தம்முடைய வாழ்க்கையை நடத்தித் தம் கொள்கையைச் செயலில் நிறைவேற்றிக் காண்பித்து வருகிறார். தம் பொருள்களை அனைவருக்கும் அள்ளியள்ளி வழங்கினது போலவே, தாம் அடைந்த அறிவினையும் நாட்டு மக்கள் அனைவரும் அறிய வேண்டுமென்னும் அவாக்கொண்டு, மாணவர்கள் பலரைப் பல்துறை அறிஞராக்கும் திருப்பணியை அவர் மேற்கொண்டுள்ளார்.

## ஆறு வாரத்தில் ரேடியோ எஞ்சினீயரிங் பயிற்சி

சாதாரணமாக ரேடியோ எஞ்சினீயரிங் சர்டிபிகேட் பெறுவதற்கு இரண்டாண்டுகள் பயிற்சிக்கூடத்திற் பயில வேண்டும். ஆயின நாயுடு அவர்களிடம் ஆறு வாரத்திற் பயிற்சி பெற்று தேர்வுத்தாள் பெறுகின்றனர் என்பது பாராட்டத்தக்கதன்றோ? அவரிடம் படித்துப் பயிற்சிபெற்ற வழக்கறிஞர் கான்முஹம்மது என்பவர் (மதுரை மாவட்டம்—போடிநாயக்கனூரினர்) நாயுடு அவர்களிடம் ஆறு வாரத்திற் பயின்று

தேறியுள்ளார்; தாமே சொந்தமாக ரேடியோத் தொழிலைத தம்மூரில் ஏறபடுத்த தீர்மானித்துள்ளார்.

## மேனாட்டு யாத்திரை IV

அறிஞர் நாயுடு அவர்கள் மீண்டும் நான்காம் முறையாக 1950ஆம் ஆண்டு மேமாதம் 7-ஆநதேதி சென்னையிலிருந்து மேனாட்டுயாத்திரைக்கெனப் புறப் பட்டார்; லணடனிலும பாமிங்காம் எனனும் நகரி லும் நடைபெறற பொருட காடசிகளைக் கணடுறற பின ஸ்வீடனநாட்டின தலைநகராகிய ஸ்டாக்ஹோமில் நடந்த விவசாயப் பொருட்காட்சிக்குச் சென்று அதனைப் பார்வையிட்டார். பிறகு, டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்ஜர்லாநது, முதலிய நாடுகளிலுள்ள பல நகரங்கட்குச் சென்று, ஆங்காங்குள்ள பல்வேறு வகைக் கைத்தொழிறசாலைகளையும், கைத்தொழில் கறபிக்கும் பள்ளிகளையும், புதிய இயநதிரங்கள், கடிகாரஙகள் செய்யும் தொழிறசாலைகளையும் பார்வையிட்டார; கடிகாரம் செய்யும் முறையினைப் பயின்றார; பிறகு மீணடும் லணடன திரும்பிச் சில நாட்களிருந்த பின, ஸ்வீடன நாடு சென்று சுறறுப் பிரயாணம் செய்தார். ஜெரமனியில் ஸ்டட் கார்டு எனனும் நகரில் ஆல்பர்ட் ஹிாத இயந்திர உற் பத்தித தொழிறசாலையில் செய்யபபட்ட புதிய இயந்திர அமைபபில் சிறு கோளாறு ஒன்றிருப்பதை அறிஞா நாயுடு கணடுபிடித்துக கூறியதை ஜொமன இஞ்சினியர்கள் கேட்டு, ஒப்புக்கொணடதுடன அவருடைய நுணணிய அறிவின திறத்தைதக கண்டு வியநது பாராட்டித் தங்கள நனறியைத் தெரிவித்த னர். மேலும் ஸ்டட் கார்டடில் 440 ராத்தல் நிறை யுள்ள ஒரு மோட்டார் வணடி செய்யப்பட்டி ருப்பதைப் பார்த்தார். அவ்வணடி ஒரு காலன்

பெட்ரோலில் 70 மைல் ஓடுமாம். விலையோ 275 பவுனகளுக்கு மேலில்லை. இந்த வண்டி பெருவாரியாகச் செய்யப்பட்டு இன்னும் விற்பனைக்கு வரவில்லை. இவ்வாறு, ஐரோப்பாவில் பல நாடுகளையும் நகரங்களையும் சுற்றி, பல வகையான தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுப் பல புதிய செய்திகளை அறிந்து கொண்டு, இந்தியா வந்து சேர்ந்தார்.

## முடிவுரை

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் ஏழையாய்ப் பிறந்தவர்; பள்ளிக் கல்வி படியாதவர்; ஆயினும் தம் மதி நுட்பத்தாலும் பிடிவாத குணத்தாலும் அரிய உழைப்பாலும் பல இன்னல்கட்கிடையே உயர்ந்தவர்; உழைப்பால் உயர்ந்த அவர் பெருஞ் செல்வராக வாழ்ந்து வருகின்றார். அவர் கண்டறிந்த அற்புத இயந்திரங்கள் நாட்டிற்குப் பயன்பட வேண்டும்; அவருடைய அறிவு நுட்பமும் விஞ்ஞான அனுபவமும் நமது தாய்நாட்டுக்குப் பெருமையை அளித்துள்ளன. ஐம்பத்தேழு வயதுடைய அப்பெரியார் இன்றும் இந்நாட்டு இளைஞர்க்கு விஞ்ஞானக் கல்வி புகட்டும் பேராசிரியராக இருந்து வருகின்றார் என்பது அவரது நாட்டுப் பற்றையும், நாட்டு முன்னேற்றத்தில் அவர் கொண்டுள்ள ஊக்கத்தையும் நன்கு விளக்குவதாகும். அவரது யு. எம். எஸ். நிலைய ஆட்சிமுறைக்கு இணையானதொன்று இந்தியாவின் வேறு எப்பகுதியிலும் இல்லை என்பது நாடறிந்த உண்மையாகும்.

தாய் நாட்டிற்குப் பல்லாற்றானும் பெருமைதேடித் தந்துள்ள அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் வாழ்க!

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001